சுதேசமித்திரன்

30—5—48

விலை 4 அணா

THE SWADESAMITRAN

ILLUSTRATED WEEKLY



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:—''தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.''

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலனைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸூரத்கார்-பிகானிர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்''.

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, கலுடாரா, கொழும்பு, சிலோன்:—''தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும். எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. *டெலிபோன் நெ. 57*

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

இந்த முக்கிய அறிவிப்பை நீங்கள் அவசியம் படிக்கவேண்டும்!

லக்ஷக்கணக்கானவர்களுக்கு இது உதவியளிக்கும்.

பிரிய வாசகர்களே! நான் ஒரு நாட்டு வைத்தியனோ அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல. ஆனால், என் துர் நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்பாக்கியன். நான் கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் பல கஷ்டங்கள் ஏற்பட்டு முடிவில் எனது வலிமை முழுதும் இழக்க நேரிட்டது.

நாளுக்கு நாள் நான் மிகவும் பலவீனமடைந்து வந்தேன். ஹிருதயத் துடிப்பு அதிகரித்தது. அடிக்கடி கிறுகிறுப்பும் மயக்கமுமாக வந்தது. அந்தரங்கமாக ஆயிரக் கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்துகொண்டு பார்த்தேன். ஒருவித குணமும் ஏற்படவில்லை. இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன்

அதிர்ஷ்டவசமாக வேலை நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத் தோன்றிய என்மேல் அவர் கருணை கொண்டு என்னைப்பற்றி விசாரித்தார். சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச் சொல்லும்படி தூண்டியதால் அவரிடம் மறைக்காமல் என் தேக நிலையின் உண்மையைத் தெரிவித்தேன். மஹாத்மா என்மேல் பச்சாதாபம்கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக் கற்பித்தார். அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளை சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்த பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்,

பிரிய வாசகர்களே! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன். 7-வது தினமே எனக்கு இளமை திரும்பி விட்டது எனது வலிமையைப் பற்றி நான் இப்பொழுது பெருமை கொள்ளுகிறேன். சில டோஸ்கள் சாப்பிட்டதுமே வியாதி சற்று குறைந்தாலும் மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன் என்னால் தினம் 4 சேர்பால் ஜீரணிக்க முடிந்தது என்கண்கள் பிரகாசம்பெற்றன முகத்திற்கு அலாதி ஜொலிப்பு ஏற்பட்டது. தேகத்தில் புதிய பலமும் தேக திடமும் உண்டாயிற்று. ஊருக்குத் திரும்பியதும் இதை நான் அநேகருக்குக் கொடுத்துப் பரீக்ஷித்ததில் வலிமை யின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று.

பொது மக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன். தேக திடம் இழந்து ஆயிரக் கணக்கில் செலவழித்தும் குணம் பெருதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது திண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு. அயல் நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்ப வேண்டும்,

இளமை யளிக்கும் மாத்திரைகள் 21 தினங்களுக்கு	ரூ. 5-0-0
மேலே பூசுவதற்குத் தைலம்	ரூ. 5-8-0

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது. கிழவர்கள் யுவர்கள் யாவருக்கும் ஏற்றது சொந்த லாபத்திற்கு விளம்பரம் செய்யவில்லை மனித சமூகத்தின் நன்மைக்கே விளம்பரம் செய்யப்படுகின்றது. வெளி நாட்டு ஆர்டர்களுடன் முன் பணம் தேவை

குணத்திற்கு உத்தரவாதம் இந்தமருந்தினால் உங்களுக்கு குணமேற்படாவிட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன். ஆயிரக் கணக்கான டாக்டர்கள் இதை சிபார்சு செய்கிறார்கள். எந்தக் காலத்திலும் உபயோகிக்கலாம்.

முக்கிய அறிவிப்பு: நரம்புத் தளர்ச்சி வலிமையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும்தான் இம்மருந்து மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி மேலும் இது நல்ல ரத்த விருத்தியளிக்கிறது

ஆங்கிலத்தில் எழுதவும்: THE MANAGER,

Dar-Ul-Shafa-Golian (Regd)

Batala, East Punjab.

மானேஜர்: தார்-உல்-ஷபா கோலியான் (ரிஜிஸ்டர்டு)

படாலா, கிழக்கு பஞ்சாப்.

மதராஸ் பெங்களூர் ஸ்டாகிஸ்டுகள்:—(1) மெஸர்ஸ் ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. (2) மெஸர்ஸ் ஆல்பட் & கோ., 182, மவுண்ட்ரோட், மதராஸ். (3) மெஸர்ஸ் வாஸன் டிரக் ஸ்டோர்ஸ், ஹைக்கோர்ட்டுக்கு எதிரில் மதராஸ். (4) மெஸர்ஸ் மில்டன் & மில்லர், 157, பிராட்வே, மதராஸ்.

அழகுத் தெய்வமான

மன்மதன் இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹா கவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக் கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத் தந்து, கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகுபடுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகுபடுத்திக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது வி... அணா 14. தபால் செலவு த... எல்லா கடைகளிலும் கிடைக்கு...

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை "ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோ... பவர் ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM

189 வக்கீல் புதுதெரு- P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.

பரிசு! பரிசு !!

போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாருதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசுனை ஆர். கிருஷ்ணு பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0 N. B. 25 காலி உரை அனுப்பினல் 50—0-0-3 பொட்டலம் இனும்,

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,

2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு. மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானுல் ரியல் அசோகா அண்டு கோவில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும, ஏர் ஆயில்களும், வாஸ்லைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள் மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும் அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விறபனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.

எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.



தந்தி விலாசம் : "சுகந்தம்."

சுக வாழ்விற்கு சுகந்தம் நிறைந்த
"3001" ஜவ்வாது பத்திகள்
இன்பம் தரும் இனிய மணம் நிறைந்த
"301" ஜவ்வாது பத்திகள்
நறுமணத்திற்கு நற்கியாதி வாய்ந்த
"31" ஜவ்வாது பத்திகள்
ஆரோக்கிய வாழ்விற்கு
"ஆசாத்" பாக்கட் பத்திகள் &
"ஆசாத் ஹிந்த்" குழாய்பத்திகள்

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,
நெ. 39 லக்ஷிமிபுரம் 6-வது தெரு, மதுரை.
பிராஞ்சு: நெ. 4 அப்பாஜிராவ் தெரு, பெங்களூர் சிடி.
டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

ஜீவ வசிய
பரம ரஹஸ்யம்

இவ்வுலகவாழ்க்கையில் வெற்றி பெற விரும்புமவாருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். மெஸ்மெரிஸம், ஹிப்னுடிஸம். மானிட வசியம் முதலிய சாஸ்திரங்களின் இரகசியத்தை அனுபவ சாத்தியமாக விளக்கிக்கூறும் அருமையான இரகசிய நூல். இந்நூலைப்படித்த பின் இதன் அருமையை நீங்கள் நன்குணர்வீர்கள். கண் கவரும் வனப்பு வாய்ந்த சிறந்த நூல். இதன் முன் பதிப்புக்களில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் செலவாயிருப்பதே இதன் மேன்மையைக் குறிக்கும். இன்றே உங்கள் பிரதிக்கெழுதுங்கள்.

விலை ரூ. 4—8—0
தபாற் செலவு அணு 10.

எஸ். ஜே. புக் டெப்போ
30, சாந்தோம் : சென்னை 4.
கொழும்பில் . கெய்ஸர் வீதி, 166 K. மதார் சாஹிப் இடமும் கிடைக்கும்.

ஸ்தாபிதம் 1924.
பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், தபோ நிதி, தியாகராய நகர், மதராஸ் 17.

பிரசுரமான கிருதிகள்
★
"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:
காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—
1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0
செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—
1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0
மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.
மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

சகல விதமான பட்டு-நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை



ராம்ராஜ்யா ஹால்
N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி... சேலம்

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ வைகாசி மீ 17௳ ★ 1948-௵ மே மீ 30௳ No. 18

ஹைதராபாத் அட்டூழியம்

ஹைதராபாத் விவகாரத்தை உடனே தீர்த்துக்கட்டியாக வேண்டும். காலம் தாழ்த்தி வருவதற்கான காலம் மலையேறி விட்டது. சென்னையிலிருந்து சென்ற வாரம் புறப்பட்டுப்போன பம்பாய் மெயிலில் பிரயாணம்செய்தவர்களுக்கு நேரிட்டகதியைநினைக்கையில் இந்திய யூனியனில்உள்ள ஒவ்வொருவருடையநெஞ்சமுட் குமுறும். இதையடுத்து மற்றொரு ரயில் தொடரில் மிருகத்தனமான செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ரஸாக்காரர்கள் ராட்சஸத்தனமாக அட்டூழியங்களில் ஈடுபட்டுவிட்டனர். அங்கு ரஸ்வியின் சகிகாரக் கும்பலின் திருவிளையாடல்கள் இப்போது உச்சத்தை அடைந்திருப்பதற்கு மேற்படி இரு சம்பவங்களும் சமீப ருசுக்கள். தாக்குண்டவர்களில் சிலர் இறந்தனர்; சிலர் படுகாயமுற்றனர்; இன்றும் ஸ்திரீகளும், குழந்தைகளும், அரக்கர் உருவில் வந்த காலிகளால் தூக்கிச்செல்லப்பட்டுவிட்டார்கள். இத்தகைய அட்டூழியங்களெல்லாம் நிஜாம் போலீஸாரின் முன்னிலையில் நிகழ்ந்தவை. அவர்கள் ரஸாக்காரர்களை தடுக்கவேயில்லை. ஆனால் இத்தகைய விபரீத நிகழ்ச்சிகளெல்லாம் போலீஸாரின் சகாயத்தோடேயே நடந்திருப்பதாகக்காண்கிறது.

மூலைக்கு மூலை ஓயாமல் விளைந்து வந்த ரஸாக்காரர்களின் அட்டகாசங்கள் எல்லாம் இப்போது திட்டமான முறையில் ஸ்வரூபம் பெற்றிருக்கிறது. இந்திய சர்க்காரின் சாவதான, சமாதான மனோபாவத்துக்கு அக் கும்பல் வேறுவிதமான அர்த்தத்தைக் கற்பித்திருக்கவேண்டும். அதாவது, இந்திய யூனியன் சர்க்காரின் மனோபாவம் பலவீனத்தைக் குறிப்பதாக எண்ணியிருக்கவேண்டும். எனவே இந்நிலையில் இப்போதேற்பட்டுள்ள சம்பவத்தை ஒரு ‘சவால்’ என்றே நாம் கருத வேண்டும்.

இந்திய யூனியன் சர்க்கார் இனியும் இத்தகைய விபரீதத்தை வளரவிட்டு வைப்பது தவறாகும். இந்த வெறியர்களின் விஷமத்தை வேரோடு கல்லியெறிவது அவசரம்; அத்தியாவசியம். இப்பிரச்னை ஹைதராபாத்துடன் நிற்பதன்று. இந்திய யூனியனுக்கு அண்மையிலுள்ள பகுதிகளிலும் இவ்விபரீதம் பிரதிபலிக்கத்தான் செய்யும். அந்நிய ஆட்சிமறைந்தது. சுதந்திர சர்க்கார் உதயமாயிற்று. இது நடந்த கையோடு நாடெங்கும் ஒரே ரணகளம். இவற்றின் காரணங்களை ஆராய்வது இன்றைய வேலையல்ல. எண்ணற்ற இன்னல்களைத் தைர்யமாகச் சமாளித்து கத்தி முனையிலும், சத்திய நெறிதவறாமல் தீரத்துடன் நிற்கக்கற்றுக்கொடுத்த லோகபிதா மகாத்மா காந்தியடிகள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். ஆகவே ஹைதராபாத் அக்கிரமத்தை அடக்கி ஒடுக்க இந்திய யூனியன் உடனே நடவடிக்கை எடுப்பது வெகு அவசரமாகும்.

நிஜாம் விஷயத்தில் இறுதியான ஒரே ஒரு நடவடிக்கையைத்தவிர, மற்றவையெல்லாம் இந்திய சர்க்கார் ஏற்கெனவே எடுத்துக்கொண்டாகிவிட்டது. நயமாக எவ்வளவு சொல்லமுடியுமோ, அவ்வளவையும் அவர்கள் நிஜாமுக்கு ஒரு முறையல்ல, பன்முறை, நூறு முறை சொல்லியாகிவிட்டது. பலன் என்ன? ஹைதராபாத்துக்குள்ளும், அதன் எல்லைக்கப்பாலும் நிஜாம் போலீஸாரும், ரஸாக்கர்களும் செய்யும் அக்கிரமங்கள் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டிருப்பதுதான். அவர்கள் பொது உடமை வாதிகளையும் இப்போது தங்கள் கட்சிக்கு இழுத்துக்கொண்டு, இந்திய யூனியனுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர்களைப் பகிரங்கமாக ஊக்கி வருகின்றனர். ஹைதராபாத் பிரச்னைக்கு எப்படியாவது சமரச வழியில் ஒரு பரிகாரம் காண

—அடுத்த பக்கம்.



இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஜெயராம்தாஸ் தௌலத்ராம் சென்றவாரம் மவுண்ட்ரோடு ராஜாஜி ஹாலில் நடந்த பழக்காட்சி விழாவில் பிரசன்னமா யிருந்தார். அவர் காட்சிசாலையில் வரவேற்கப்பட்டு, சுற்றிக்காட்டியபோது எடுத்த படம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்பதே இந்திய சர்க்காரின் ஆவல்
எனவேதான் அவர்கள் அபாரமான பொறு
மையுடன் மீண்டும், மீண்டும் நிஜாமின் பிரதி
நிதிகளுடன் கலந்து பேசி வந்திருக்கின்றனர்.
ஹைதராபாத் பிரதமர் டில்லிக்கு வர
வழைக்கப்பட்டுள்ளதன் காரணம் முன்ன
தாக வெளியிடப்படவில்லை. இதுவரைபோல்
இனியும் பொதுப்படையான, தெளிவற்ற
அறிக்கைகளை வெளியிட்டு காலந்தள்ள இட
மிருக்குமென்று நிஜாம் சர்க்கார் நினைத்தால்,
அதைப்போன்ற ஞானசூனியம் எதுவுமில்லை.
ரஸ்வி கும்பலின் சிறகையொடித்து ஆட்சிப்
பொறுப்பை மக்களுக்கு மாற்றும் வேலையை
நிஜாமே செய்யப் போகிறாரா, அல்லது அதை
இந்திய சர்க்காரேதான் செய்தாக வேண்
டுமா என்பதே கேள்வி. இனி இதில் பொறு
மைக்கு இடமில்லை. நிஜாம் துரிதமாக முடிவு
செய்யவேண்டும்.

நாமொன்று நினைக்க—

ம. மஹாலிங்க சாஸ்திரிகள்
எம். ஏ. பி. எல்

ஸ்ரீ. ஸீதாராமனுக்கு, சௌ. ஸரஸ்வதியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்வதாய் முகூர்த்தப் பத்திரிகை அச்சாகி வந்தது. ஊரில் கொடுக்க வேண்டியவர்களுக்குப் பத்திரிகை கொடுக்கப்பட்டது. எல்லோரும் ஒரு முகமாய்—'' கடைசியில் முடிச்சு இப்படித்தானா போட்டிருந்தது?'' என்று ஆச்சரியப்பட்டார்கள். ஏனெனில், ஸீதாராமன் ஸரஸுவைக் கல்யாணம் செய்துகொள்வதில்லை என்று நிராகரித்துவிட்டான். ஸரஸுவின் தகப்பனாரும் (ஸீதாராமனின் சொந்த மாமாதான்) "இந்தப் பயலுக்கு என் பெண்ணைக்கொடுப்பதில்லை'' என்று பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தார் இரு குடும்பங்களுக்கும் போக்குவரத்துக்கூட சமீபகாலத்தில் மட்டுக்கட்டிருந்தது. இந்த நிலைமையைச் சிலகாலமாய் அறிந்த ஊர் உறவு ஜனங்களுக்கு இந்தக் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்ததும் ஆச்சரியமாகத் தானிருந்தது. "விதியிருந்தால் விடுமா?'' என்றும், "ஒருவன் பெண்டாட்டியை ஒருவன் கட்ட முடியாது'' என்றும் பலவிதமாய்ப் பெண்டுகள் வேதாந்தம் நடமாடியது. எப்போது இரு குடும்பஸ்தர்களும் ஒன்றுபட்டார்கள்? எப்போது பேச்சு வார்த்தை நடந்தது? என்ன சீர் முதலியன? முன் ஏற்பாடுகள் எங்கே? ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

ஸீதாராமன் சிறுவயதிலேயே தன்னம்பிக்கையும் சுதந்திரமுமுடையவன். தகப்பனார் சேஷு சாஸ்திரிகள் அவனை ஆங்கிலப் பள்ளியில் அதிகம் படிக்கவைக்க ஐவேஜியில்லாதவர். அவனுக்கு அத்யயனம் சொல்லி வைத்துத் தன்னுடன் உதவியாயிருக்கச் செய்யலாமென்று யோசித்திருந்தார். ஆனால் ஸீதாராமன் வீட்டுப் படிப்பில் வெறுப்புடையவனாயிருந்தான். அவனுக்குப் பள்ளிப் படிப்பும் அதிகம் விருத்தியடையாவிட்டாலும் அதன் மூலம் நண்பர்கள் பலர் அவனுக்கு ஏற்பட்டனர். ராமநாதன் என்ற ஒரு நண்பனுக்கு நல்ல அந்தஸ்து ஐவேஜி உண்டு. அவன் தகப்பனாருக்கு ஒரு பெரிய மதராஸ் கம்பெனியில் வேலை. ராமநாதன் தாய் மாமன் வீட்டிலிருந்து படித்து வந்தான். அடிக்கடி பட்டணம் போவான். அப்போதெல்லாம் ஸீதாராமன் ராமநாதனுக்கு உற்ற துணையாவான். அவர்களின் நட்பு நாளுக்கு நாள் அதிகரித்தது. எந்தக்காரியத்திலும் ராமநாதன் ஸீதாராமனின் உதவியை எதிர்பார்ப்பான். ராமநாதனின் பெற்றோர்களும் ஸீதாராமனை அன்புடன் வரவேற்றார்கள். இருவரும் சம நிலைமையில் எல்லா சௌகரியங்களையும் சேர்ந்து அனுபவித்தார்கள். சேஷு சாஸ்திரிகள் தன் பையனின் தைரியத்திற்காகவும் வியாபகத்திற்கும் சந்தோஷப்பட்டார். பையன் பிழைத்துக்கொள்வான் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. அவருக்கும் அவன் மூலமாய் சில பெரிய இடங்களில் போக்குவரத்து ஏற்பட்டது.

கொஞ்சகாலத்தில் ராமநாதன் பட்டணத்திற்கேபடிக்கப்போகும்படி நேர்ந்தது. அவன் ஸீதாராமனையும் தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினான். சேஷு சாஸ்திரிகள் அரைமனதுடன் அனுமதித்தார். ஸீதாராமன் அதற்கு முன்னாலேயே முழுமனதுடன் தீர்மானம் செய்துவிட்டான்.

ஸீதாராமன் ராமநாதனுடனே இருந்துகொண்டு பட்டணத்தில் படித்துவந்தான். அவனால் ராமநாதன் பெற்றோர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தது. சாமர்த்தியசாலியாயும், பணிந்து வேலை செய்யக்கூடியவனாயும் தைரியமும் வியாபகத்துவமுமதிகமுடையவனாயும் இருந்த ஒரு வாலிபன்வீட்டோடு இருப்பதில் அவர்கள் திருப்திப்பட்டார்கள். ராமநாதனின் ஆதரவு அவனுக்குப் பலமாயிருந்தது. ஸீதாராமன் பெரிய மனுஷ்யாள் வீட்டுக் குழந்தை போல் வளர்ந்து வந்தான். இருந்தாலும் தான் ஏழை என்பதையும் அதிர்ஷ்டவசத்தினால் நல்ல புகலிடம்பெற்றவனென்பதையும் சிறிதும் மறக்காமல் ஸீதாராமன் எப்போதும் தாழ்வுடனும் பணிவுடனும் நடந்துகொண்டு எவ்விதத்திலும் தன்னை ஆதரித்து வருவோருக்கு ஒத்தாசையாயிருக்கவும் அவர்களின் ஆமோதிப்பைப் பெறவும் ஊக்கமுடையவனாயிருந்துவந்தான். ஆனால் அவன் படிப்பில் அதிகம் ருசியுள்ளவனாயில்லை. ராமநாதனும் அப்படித்தான். ஏதோ இரண்டொரு வருஷம் பள்ளிக்குப் போய் வந்தானேயொழியப் படிப்பில் அதிகம் முன்னேற்றமடையவில்லை. ஸீதாராமன் ராமநாதனின் தகப்பனாரான வெங்கிட சுப்பைய்யரிடம் வினயமாய் பல சமயங்களில் தனக்கு ஏதாவது சம்பாத்தியத்திற்கு வழி ஏற்பட்டால் படிப்பை நிறுத்திவிட்டு உத்தியோகம் பார்க்கவேண்டியதுதான் என்று தெரிவித்துக்கொண்டிருந்தான். "நான் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன். தகப்பனாருக்கு வயதாகி விட்டது. அவர் குடும்பி. கல்யாணத்திற்குப் பெண்களிருக்கிறார்கள். என் தம



யன் சம்பாதிக்க லாயக்கில்லாதவன். தம்பிகள் படிக்கிறார்கள். தாயார் சீக்குக்காரி. நான் மட்டும் உங்கள் வீட்டில் சௌக்கியமாய் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் குடும்பப்பொறுப்பை உணராதவனாவேன். எனக்கு ஏதாவது சிபார்சு செய்து ஒருவேலை பண்ணி வைத்துவிடுங்கள். பிற்பாடு அதிர்ஷ்டம் உள்ளபடி நடக்கட்டும்'' என்று அவரிடம் முறையிடுவான்.

வெங்கிட சுப்பையர் இளகிய மனதுடையவர். சிறு வயதில் ஸீதாராமனுக்குக் குடும்பப் பொறுப்பு ஏற்பட்டிருப்பதை உணர்ந்து மனமுருகினார். அவன் இன்னும் கொஞ்சகாலம் படித்து யோக்யதையை ஏற்படுத்திக்கொண்டு நல்ல வேலையில் அமர வேண்டும் என்பது அவர் நோக்கம். அவனை முன்னுக்குக்கொண்டு வந்து ஒரு நிலையில் ஏற்படுத்தும் வரை அந்தப் பொறுப்பையும் அவர் அங்கீகரிக்கத் தயாராயிருந்தார். இவ்விதம் சில வருஷங்கள் சென்றன. ஸீதாராமனும், ராமநாதனும் காலேஜில் சேர்ந்து படிக்கலானார்கள்.

ஊரில் சேஷு சாஸ்திரிகளுக்கு தன் பையன் பெரிய இடத்தில் புகுந்து சாமர்த்தியமாகவும் சௌகரியமாகவும் படித்து வருவதில் பெருமை மிகுதியாயிருந்தது. அவன் முன்னுக்கு வந்துவிடுவான் என்றும் குலத்தைக்காக்க வல்லவனென்றும் அவனைப்பற்றிக் கவலை கிடையாதென்றும் திண்ணையில் பொழுதுபோக்கிற்கு வந்து உட்காரும் சாமி, ராமண்ணா, சுப்பய்யா, எல்லோரிடமும் தினம் ஒன்றுக்குப் பத்துத் தடவையாவது அவர் சொல்லிக்கொள்ளாமலிருக்கமாட்டார். அவருடைய மனோராஜ்யத்தை தினமும் விரிவாக வளர்த்துவந்தவள் வேம்பு அம்மாள். ஸீதாராமன் பட்டணத்திலேயே தான் பழகும் பெரிய குடும்பஸ்தர்களின் ஆதரவையும் மதிப்பையும் பெற்றவனாய் உயர்தர கனதனவான் வீட்டுப் பெண்ணை மணக்க நேரலாமென்றும் அது மூலம் தன் பெண்களுக்கு அந்தஸ்து உள்ள விடங்களில் புக்ககம் ஏற்படலாம் என்றும், பிள்ளைகளுக்கும் அவனவனுக்குத் தக்கபடி உத்தியோகங்களைச் சம்பாதித்துக்கொள்ள வசதியாயிருக்குமென்றும் மனக்கோட்டைகள் கட்டி வந்தாள். தன் தமயன் பெண் ஸரஸ்வதியைத் தன் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாய்ச் செய்து வந்த பிரஸ்தாபங்களையெல்லாம் வேம்பு அம்மாள் மறக்கலானாள். ஆனால் ஏற்கனவே அவள் செய்திருந்த பிரஸ்தாபத்தை மணி மாமா மறக்கவில்லை. ஸரஸுவின் ஜாதகத்திற்கும் ஸீதாராமனின் ஜாதகத்திற்கும் பொருத்த விஷயங்கள் பல வருஷங்களுக்கு முன்னாலேயே ஆலோசிக்கப்பட்டு ஜோதிடர்களால் ஆமோதிக்கப்பட்டன. ஆகையால் மணி மாமா வைகாசி பிறந்ததும் சேஷு சாஸ்திரிகளிடம் முகூர்த்தத்தைப் பிரஸ்தாபிக்க வந்தார். சாஸ்திரிகள், "குசாலாய் நடக்கட்டும், ஈச்வர சம்மதமிருந்தால். இங்கே பாருமணி! எனக்கு இதில் என்ன சொல்வதற்கு இருக்கிறது? குலம் விசாரிக்கணுமா? கோத்திரம் விசாரிக்கணுமா! இல்லை மனுஷாளைப்பற்றி விசாரிக்க வேண்டுமா? உன் தங்கைபாடு, உன் பாடு. கல்யாணத்தை எப்படியிருந்தாலும் நீயேதான் நடத்திவைக்கப்போகிறாய். நீயே சம்பந்தியாகிவிட்டால் இன்னும் விசேஷம். நான் திண்ணையை விட்டுக் கீழே இறங்கவேண்டிய அவசியமேயில்லை. உன்னிடத்திலும் உன் தங்கையிடத்திலும் எல்லாப் பொறுப்புகளையும் விட்டுவிட்டுச் சாப்பிடக் கூப்பிட்ட சமயத்தில் நான் வரச் சித்தமாயிருக்கிறேன்'' என்று வெகு தந்திரமாய் பதில் சொன்னார்.

மணி மாமா வேம்புவிடம் சென்றார். தமயனுக்கு வேம்பு அதிகமாகவே உபசாரங்களைச் செய்தாள். மணி வந்த காரியத்தை எடுத்தும் பேசினார். சாஸ்திரிகள் சொன்னதையெல்லாம் அப்படியே திருப்பி ஒப்பித்தார். வேம்பு முகவாய்க்கட்டையை இடது தோளின் சிகரத்தில் ஒரு தரம் இடித்துக்கொண்டு முகத்தில் சலிப்பையும் சற்று கோபத்தையும் வரவழைத்துக்கொண்டு பேசலானாள். "நன்றாயிருக்கு. வெட்கக்கேடுதான். நான் சொல்லுகிறதைக் கேட்டுக்கொண்டுதான் இவாள் எல்லாக் காரியங்களும் செய்கிறார்களாக்கும். ஏன் இந்த வேஷம் போடவேண்டும்! என்பேரில் ஏன் பழி சுமத்த

வேண்டும்! நான் என் மருமாளைப் பண்ணிக்கொள்ள என்ன தடை சொல்லப் போகிறேன்? இவாளுக்கு அது தெரியாது! அவா பேச்சை நம்பாதே அண்ணு!''

மணிக்கு அவள் சொல்வது என்னவென்றே புரியவில்லை. "என்னடி! அவருக்குச் சம்மதம் தான். உனக்கும் சம்மதம்தான். பின்னே வேறே என்ன சொல்லுகிறுய்? பழி என்ன? பாசாங்கு என்ன? எனக்குப்புரியவில்லையே? உடனே முகூர்த்தம் வைக்கவேண்டியதுதானே?'

வேம்பு தலையை அசைத்து ஒரு வெற்றிச் சிரிப்புச்சிரித்துக் கொண்டு "பிள்ளையைக் கேட்க வேண்டாமா? இந்தக்காலத்துப் பிள்ளைகள், தாயார் தகப்பனுர் வார்த்தைக்கு என்ன மதிப்பு வைத்திருக்கிருர்கள்? நாலைந்து வருஷமாய்ப்பட்டணம் போன பிள்ளை லீவுக்குக்கூட இங்கே வந்து இரண்டொருமா தம் பெத்தவர்களுடன் கூட இருப்பதில்லைஒரு ஆவணி அவிட்டம் தீபாவளி என்ருல்கூட அங்கேயே இருந்துவிடுகிருன். அவர்களும் அவனை அப்படிச்சொந்தப் பிள்ளைபோல் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். அந்த ராமநாதன் என்கிற பிள்ளை இவனோடு அண்ணன் தம்பியாய்ப் பழகுகிறது. ஸீதாராமன் இங்கே எப்போதாவது வந்தாலும் ராமநாதனும் கூடத்தான் வருகிருன். அவாள் பணக்காராள்தான், நாங்கள் ஏழைகள் தான். இருந்தாலும் இரண்டு குடும்பங்களும் ஒரு குடும்பமாய்ப்போய்விட்டது. இப்போ ஸீதாராமனுக்குக் கல்யாணம் பண்ணுவதானுல் வெங்கிட சுப்பய்யரும் சங்கரி அம்மாளும் பார்த்துத்தான் தீர்மானம் பண்ணவேண்டும். எங்கள் பேச்சு ஏருதுபோலிருக்கிறது. நானும் பட்டணம் போயிருந்தேன். வேற்றுமையில்லாமல் அவாள் வீட்டில் ஒரு அத்தை மதனி வந்தால் எப்படியோ அப்படித்தான் என்னையும் அபிமானித்து நடத்தினுர்கள். இந்தப்பிள்ளையை எப்படிவாவது முன்னுக்குக் கொண்டு வைப்பது என்பொறுப்பு என்று சொல்லிக் கொண்டிருக்கிருர் அந்த மனுஷ்யர். அவர் செய்யவும் செய்வார். அவருக்கு அவ்வளவு செல்வாக்கு இருக்கிறது. ஏதோ அகிலாண்டேச்வரி கிருபையில் ஸீதாராமனுக்கு—''

மணி மாமா ஏதோ வரப்போகுர் வார்த்தையைத் தடுக்கப் பார்ப்பவர்போல் குறுக்கிட்டார்.- "அப்படியானுல் பட்டணம்போகிறேன். ஸீதாராமனையும் பார்த்துவிட்டு அவன் சிநேகிதனுடைய தகப்பனுரையும் கண்டு பேசுகிறேன். விஷயம் எந்த மட்டும் இருக்கிறதென்று நேரில் தெரிந்து கொள்ளுகிறேன்.''

வேம்புவுக்கு மணி பட்டணம் போவதில் சம்மதமில்லை. அவள் பட்டணப்பிரஸ்தாபத்தை மலையத்தனை இடையூருக எடுத்துக் காட்டியும் அதை மணி கடுகத்தனை விஷயமாக மதித்துவிட்டாரே என்ற ஏமாற்றம் அவளுக்கு அதிகமாயிருந்தது. "அண்ணு! நீ வீணுய்ப்பட்டணம் கிட்டணம் போய் அலையவேண்டாம். புருஷாளை விட்டு இன்றைக்கே ஒரு லெட்டர் போடச் சொல்லுகிறேன் ஸீதாராமனைப் புறப்பட்டு வரும்படி.

"அவன் தான் வரமாட்டான் என்று சொன்னுயே?''

"இல்லாவிட்டால் விஷயத்தைக் குறிப்பிட்டுத்தான் எழுத சொல்லுகிறேனே. எதற்கும் நீ போய் அலையவேண்டாம் என்று தோன்றுகிறது.''

"இப்போது அவனிருக்கிற அந்தஸ்தில் எழுதினுல் ஒன்றும் பதில் போடமாட்டான். நீங்களோ ஒன்றிலும் பட்டுக்கொள்ளாமல் பேசுகிறீர்கள். உங்களாலும் ஒன்றும் தீர்மானம் செய்து விட முடியாதென்றுதான் நினைக்கிறேன். ஆகையால் அவனைப்போய் பார்த்து அவனுக்குப் புதுகார்டியனு ஏற்பட்டிருக்கும் அந்தப் பிரபுவையும் கண்ணுல் கண்டுவிட்டுத்தான்வருகிறேனே. என்ன அதனுல் அசௌகரியம்? நேரில் போனுல் இரண்டில் ஒன்று புரிந்து விடும். நாளோ ஆகிவிட்டது. எனக்கும் ஸீதாராமன் இல்லை என்று சொன்னுல்தான் வெளியில் பார்க்க உத்தேசம். ஏனென்ருல் ஒன்றிற்குள் ஒன்று. எவ்வளவோ காரியங்களுக்குச் சௌகரியமுண்டு.

மாமா எழுந்திருந்தார். வேம்பு மனதிலில்லாத ஆமோதிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டு, "ஆனுல் இல்லையோ? உறவு விட்டுப்போகாமல் நம் பெரியவாள் காலத்தில் அப்படித்தானே செய்துவந்தார்கள். இப்போதுதான் பெரியவாள் சொல்லுகிறதைச் சின்னவர்கள் கேட்கிறது என்கிறதெல்லாம் அஸ்தமித்துப் போய்விட்டதே! இந்த காலத்துப் பிள்ளை பெண்களைத் தாயார் தகப்பன்கள் இப்படி இரு, அப்படிச் செய் என்று சொல்லக்கூடத்தான் பயமாயிருக்கிறதே. சொல்லத்தான் சொன்னேம், எங்கே அதுகள் கேட்கிறதுகள். காலம் கலிகால



மாய்ப் போய்விட்டது. அது அது இஷ்டத்திற்கு அது அது செய்து கொள்கிறது. நாம் நல்லது கெட்டது என்று சொல்லப் போனால் பத்தாம் பசலி என்று பரிகாசம் செய்கிறதுகள். நம்ம வார்த்தைக்குத் துளிக்கூட மதிப்பென்பது கிடையாது. அதுகள் போகிற வழியில் அதுகளைவிட்டு விட்டு நம் மரியாதையை நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது தான். அதனால்தான் சொன்னேன். உனக்கு வேறு காரியமிருந்தால்—''

மணி பளிச்சென்று திரும்பி நின்றார்:—

"எனக்கு வேறு காரியமில்லை. இதற்காகத்தான் பட்டணம் போகிறேன். இன்று சாயந்திரமே புறப்படுகிறேன். பிள்ளைக்கு ஏதாவது சமாசாரம் இருந்தால் சொல்லு. ஏதாவது சாமான்கள் அனுப்புவதானாலும் கொடு. கொண்டுபோய்க் கொடுக்கிறேன். எனக்கும் அவன் இருக்கிற இருப்பையும் அவனுக்கு ஆதரவாயிருக்கும் அந்தப் பெரிய மனுஷ்யாளையும் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் இருக்கிறது. போய்விட்டு உடனே திரும்பிவிடுவேன். வெள்ளிக்கிழமை உங்களைப்பார்க்கிறேன். அன்றய தினமே பாக்கு வெற்றிலை வாங்கிவிடலாமென்று உத்தேசம். என் மனதிற்கு எல்லாம் சமாதானமாய்த்தானிருக்கிறது. ஸீதாராமன் உங்களிடத்தில் எப்படி இருந்தாலும் என் வார்த்தையைத் தட்டமாட்டான் என்று நினைக்கிறேன். ஆனால் ஈச்வர சம்மதம் இருக்க வேணும். நான் வருகிறேன் வேம்பு.''

''அண்ணா! காப்பிக்கூடச்சாப்பிடாமல் போகிறாயே! கொஞ்சம் டிபன் பண்ணிவிட்டு—''

"இல்லை.வேம்பு! எல்லாம்ஆகட்டும். வெள்ளிக்கிழமை பழம்பாக்கு வெற்றிலையுடன் வருகிறேன். அப்போது உபசாரம் பண்ணலாம். ரயில் $5\frac{1}{2}$ மணிக்கு. நான் ஆத்துக்குப்போய்விட்டுப் புறப்படத் தான் அவகாசமிருக்கிறது.''

சேஷு சாஸ்திரிகள். "என்னடி! கல்யாணம் நிச்சயமாகிவிட்டாப்போலிருக்கிறதே!', என்று ஸம்ஸாரத்தைக் கேட்டுக்கொண்டு உள்ளே வந்தார்.

"அண்ணா எப்போதும் தான் பார்த்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று ஸ்தாபிக்கும் சுபாவமுடையவன் தானே''

"நாலாவது கால் இல்லாவிட்டால் முயல் ஓட்டம் பிடிக்குமோ!

"அந்த யோசனை அண்ணாவுக்குக் கிடையாது''

"இல்லை! இவனுக்கு என்ன தெரியும்! நம்மைவிட்டு இந்த வரன் எங்கே போகப்போகிறது என்றுதானே இவள் எண்ணம்? கல்யாணம் நிச்சயம் பண்ணவந்தவன்மாதிரியா அவன் பேசுகிறான்? மடியிலே கை போட்டு இழுக்கிறமாதிரியாக வல்லவா பேசுகிறான்?''

"அவாத்தில் பெண்களைப் பெற்று உங்களுக்குக்கொடுத்த ஸ்வாதீனத்தில் அவ்வளவு பேசலாம் என்றுதான் பேசிகிறான் போலிருக்கிறது.''

"இல்லை! பணம் காசு சீர் செய்நேர்த்தி எல்லாம் நாமத்தைச் சாத்திவிட சுலபமாயிருக்கும் என்ற உத்தேசமா? ஏமாந்து போனால் தட்டி அடித்துக் கொண்டு போய்விடலாமென்று பார்க்கிறானோ? வெள்ளிக்கிழமை பாக்கு வெற்றிலை வாங்க வருகிறானாமே, என்ன பண்ணப்போகிறாய் உன் சம்பந்திக்கு?''

வேம்புவின்முகம் நொந்திவிட்ட விளக்குபோல்ஜ்வலித்தது. ஆமாம் என்னைப்பரிகாசம் பண்ணமாட்டேளோ! உங்களுக்கு அதுதான் தெரியும்! நீங்கள் வாசலிலேயே நறுக்குத்தெரித்தால்போல் இரண்டு வார்த்தை சொல்லி அவனை மடக்கி அனுப்பாமல், வழ வழ கொழ கொழ வென்று வழிந்து விட்டு என்னிடம் அனுப்பினால் அவன் ஏன் ஏறி மிதிக்க மாட்டான்?''

சாஸ்திரிகள் இந்தயதார்த்தமான வீர்யமுள்ள தாக்குதலைக் காதில் வாங்காதவர்போல் எம்பிக்குதித்துக் கொண்டு மேலே பேசினார்—"நம்சேஷிபிள்ளை தானே: லகுவாய் முடித்துவிடலாம். ஏதாவது கொடுத்ததை வாங்கிக்கொள்ளுவான் போல கேட்டால் அதட்டி அடக்கிவிடலாம் என்ற தைரியம்போலிருக்கிறது.''

"பெண்ணோநகத்தால் வழிக்கிற கறுப்பு. குணமோ கேட்க வேண்டியதில்லை. தாயாரைக்கொண்டிருக்கிறது நிறத்திற்கும் குணத்திற்கும். ஸாக்ஷாத் சின்ன நாகம்மாதான். இதிலே அங்காரக தோஷமாம். அவ்ளும் நாலு வருஷமாய் நமக்குத் தெரியாமல் எங்கே எங்கேயோ பார்த்தாகிவிட்டது. ஒன்றும் தகையவில்லை. என்ன செய்வாள் பாவம். பெண் கட்டையை எவ்வளவுநாள்தான் வீட்டில் வைத்துக்கொண்டிருக்க முடியும்! அதுதான் இங்கே வந்தான். அசட்டு உடன்பிறந்தாள் இருக்கிறாளே, செல்லாத சரக்கைத் தந்திரமாய் காலில் கட்டிவிடலாம் என்று யோசித்திருக்கிறான்போலிருக்கிறது.''

"நீயும் அசடாயிருக்கலாம். நானும் தாக்ஷிண்யத்திற்குப் பல்லை இளிக்கிறவனாயிருக்கலாம். பிள்ளையாண்டான் அசடில்லையே. அவன் சம்மதித்தால்தானே கல்யாணம்! பட்டணம்போய்ப் பார்க்கட்டுமே, நமக்கேன் பளு? இல்லை என்று சொல்லும் அபவாதம் நமக்கு வேண்டாம். பிள்ளையாண்டான் மாமாவின் தடலடிக்குப் பயப்படமாட்டான். மூக்கை அறுத்து அனுப்பி விடுவான். நாம் நல்லவர்கள்போலவே இருந்துவிடுவோமே. பெண் கருப்புஎன்றாவது, துர்க்குணி என்றாவது நகை நட்டு பணம் காசுக்கு வழியில்லை என்றாவது நாம் வாயால் சொல்லுவானேன். அதனால் தான் நான் மழுப்பிப் பேசி அவனை உன்னிடம் அனுப்பினேன். அநேகமாய் பயணம் போய்விட்டு உன் அண்ணா இங்கே கால் அடி எடுத்து வைக்கமாட்டான் என்று தோன்றுகிறது.''

"இருந்தாலும் ஸீதாராமனுக்கு ஒரு கடிதாசு இன்றைய போஸ்டிலேயே எழுதிப்போட்டு வாருங்கள்''

"கடிதாசா? இன்றையப்போஸ்டில் எப்படிச் சேரும்? எழுத வேணுமா, என்ன?''

"எல்லாத்துக்கும் எழுதினால் நல்லதுதான். மணி மனுஷ்யாளுக்குத் தகுந்தாப்போல் பேசுவான். 'உன் அம்மா, அப்பாவிடம் பேசி முடித்துவிட்டேன். வெள்ளிக்கிழமை பாக்கு வெற்றிலை வாங்கப் போகிறது. உனக்குத் தெரிவித்துவிட்டு உன் இஷ்டப்படி ஏதாவது மாப்பிள்ளை ஜோடிப்பு சாமான்களை வாங்கிக் கொடுப்பதற்காக பட்டணம் வந்திருக்கிறேன்'' என்று அவனிடம்சொன்னால் அவனும் சிறுபிள்ளையானதால் நம்பிவிடலாம். மணி எதுவும் செய்ய மாட்டானென்கிறதில்லை.''

(தொடரும்)

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப் பூங்கோயிலில்

4

சேக்கிழாரின் திருப்பணி

பி. ஸ்ரீ.

பெரியபுராண ஆசிரியரான சேக்கிழாரின் தந்தையார் ஏதோ ஓர் அரச சபையில் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தாராம். ஒருநாள் அந்த அரசன் தன் சபையிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் பிரமுகர்களுக்கும் ஒரு பரீட்சை நடத்திப் பார்த்தானும். வினுப்பத்திரத்தில் மூன்றே கேள்விகள்; அப்பத்திரமே வாக்கால் உருவாகிக் காதால் கேட்டதுதான்.

எது பெரிது ?

முதலாவது கேள்வி :

மலையினும் பெரிது எது ?

அவ்வளவு பெரிய பொருளைக் குறித்து அவர்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கும்போதே அடுத்த வினுவும் காதில் விழுந்தது,

பூமியினும் பெரிது எது ?

என்று.

'நிலத்தைக்காட்டிலும் பெரிதாக எதைக் குறிப்பிடுவோம்?' என்று சபையினர் ஆலோசித்துக்கொண்டிருக்கும்போதே, இறுதி வினுவும் எழுந்தது:

கடலினும் பெரிது எது ?

வள்ளுவர் விடை

சேக்கிழாரின் தந்தையாரும்—வெள்ளியங்கிரி முதலியார் என்பது கர்ண பரம்பரையாகக் கேட்கும் பெயர். மற்றவர்களைப் போல் இக்கேள்விகளைக் குறித்து ஆலோசனை செய்துகொண்டிருந்தாராம். தம் வீட்டிலே அவ்வினுக்களைக் குறித்துக் கவலையுடன் அவர் பிரஸ்தாபித்ததும் சிறுவராக இருந்த சேக்கிழார் பளிச்சென்று தமிழ்மறையாகிய திருக்குறளிலிருந்து மூன்று குறட்பாக்களை அம்மூன்று வினுக்களுக்கும் விடையாகஎடுத்துக்காட்டினுராம் 'மலையினும் பெரிது எது?' என்பதற்கு விடையாக இளஞ் சேக்கிழார் எடுத்துக் காட்டிய குறள்:

நிலையின் திரியா(து)
அடங்கியான் தோற்றம்,
மலையினும்
மாணப் பெரிது.

மலை கலங்கினும் நிலை கலங்காத மனமாட்சி வாய்ந்தவர்களின் தோற்றம் மலையினும் பெரிது என்று ஞான மலைகளும் குணப் பெருங் குன்றங்களுமான பெரியோர்களின் பெருமையைக் குறிப்பிட்டார்.

'பூமியினும் பெரிது எது?' என்பதற்கு இளஞ்சேக்கிழார்,

காலத்தி னுல்செய்த
நன்றி சிறிதெனினும்,
ஞாலத்தின்
மாணப் பெரிது

என்றுராம் 'கடலினும் பெரிது எது? என்ற கேள்விக்கு,

பயன் தூக்கார் செய்த
உதவி நயன் தூக்கின்,
நன்மை கடலிற் பெரிது.

என்று பதில் சொன்னுராம். காலம் அறிந்து செய்த உதவி பூமியினும் பெரிது என்றும், கைமாறு கருதாமல் செய்த உதவி கடலினும் பெரிது என்றும் பொருள்படும் குறள்களைக் காட்டி, காலமறிந்தும் கைம்மாறு கருதாமலும் தொண்டாற்றி உலகத்திற்கு உதவும் பெரியோர்களின் பெருமையை மீண்டும் வலியுறுத்தினுர். அரசனின் பரீட்சை தமிழ்வேத பரீட்சைதான் என்று தெரிந்துகொண்டார் இளஞ்சேக்கிழார்.

கற்பனையின் உட்பொருள்

இந்தக் கர்ண பரம்பரைக் கதைக்கு ஆதரவான சான்றுகள் இல்லை. சேக்கிழார் சுவாமியின் தந்தையை வெள்ளியங்கிரி முதலியாரென்றும், தாயாரை அழகாம்பிகை அம்மையாரென்றும் கர்ண பரம்பரையாகச் சிலர் சொல்லி வந்ததுபோலத்தான், இக் கதையையும் இளஞ்சேக்கிழாரின் அறிவு-மாட்சியை வெளியிடுவதற்காகச் சொல்லிவருகிருர்கள். எனினும், சேக்கிழாருள்ளம் மலையினும் கடலினும் நிலத்தினும் பெரிய லோகோபகாரிகளான அன்பர்களின் பெருமையில் இளமை தொட்டு ஆழ்ந்து ஈடுபட்டிருக்கவேண்டும் என்று கருதலாம். இக்கருத்திற்குப் பொருத்தமான ஓர் அழகிய கற்பனை யென்று இக்கதையைக் குறிப்பிடலாம்.

தாம் பெரியபுராணத்தில் காட்டும் மெய்விளங்கிய அன்பர்களான நாயன்மார்களின் பெருமையையே மலையினும் கடலினும் உலகத்தினும் பெரிதாகச் சேக்கிழார் மதித்திருக்கவேண்டும். இளமையிலேயே தேவாரம் ஓதி இந்த அபிப்பிராயத்தில் ஊறிக் கிடந்திருக்கவேண்டும் சேக்கிழாருள்ளம். பூகம்பம் ஏற்பட்டாலும் வானமே அசைந்து விழப்பார்த்தாலும் மலை நிலை பெயர்த்து தலை

தடுமாறினாலும், வானச் சுடர்கள் உதிர்ந்தாலும், சிறிதும் அஞ்சாத நெஞ்சர்களான அதிவீரர்கள் சிவனடியார்கள்!' என்று பொருள் படப் பாடியிருக்கிறார் அப்பர் சுவாமிகள் தமது தேவாரத்திலே.

அஞ்சுவ(து) யாதொன்றும்
[இல்லை,
அஞ்ச வருவதும் இல்லை!

என்பது இந்த அதிவீரர்களின் மனநிலை—இவர்களது மெய் விளங்கிய அன்புநிலை. தமிழ் வேதமாகிய தேவாரத்தின் பொருளையே சேக்கிழார், தமிழர் பொது வேதமாகிய திருக்குறளுக்கும் உட்பொருளாகக் கண்டார் என்பதற்கு **பெரிய புராணமே** சாட்சி.

சேக்கிழார் பெரிய புராணம் பாடிய வரலாற்றைப் பாடியிருக்கும் உமாபதிசிவம் அவ்வரலாற்றில், சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் பாடியிருக்கும் இம்மெய்விளங்கிய அன்பர்களைக் குறிப்பிடும்போது,

ஓர்உலகோ? ஒருதிசையோ?
ஒருபதியோ? தம்மில்
ஒருமரபோ? ஒரு பெயரோ
ஒருகாலம் தானோ?
பேருலகில் ஒருமைநெறி
தரும்கதையோ? பன்மைப்
பெருங்கதையோ? பேரொன்
அல்லவே! [றோ

என்று வியக்கிறார். 'கடற்கரை மணலையும் எண்ணிவிடலாம்: கடல் அலைகளையும் எண்ணிக் கணக்கிடலாம்: கடல் மீன்களையும், விண்மீன்களான நட்சத்திரங்களையும் அளவிடலாம். சிவனடியார்களான தொண்டர்களின் பெருமையை அளவிட்டுரைப்பதுசேக்கிழாருக்கே எளிது' என்று பொருள்படவும் பாடியிருக்கிறார் உமாபதி சிவாசாரியார். ஆகவே, மலையினும் கடலினும் உலகத்தினும் பெரியலோகோபகாரிகளான இம்மெய்யன்பர்களின் வரலாறுகளில் சேக்கிழாருள்ளம்சிறுபிராயந்தொட்டு ஊறிக் கிடந்தது என்று கருதுவதில் சிரமம் ஒன்றுமில்லை. இப்படிக் கருதியவர்கள் இக்கருத்தை ஒரு குட்டிக் கதையாகப் புனைந்து வைத்ததிலும் அதிசயமில்லை.

பெரியோர் பெருமையே பெரிய புராணம்

பெரியபுராணத்தில் கூறப்படும் அன்பர் சரிதங்கள் சேக்கிழார் காலத்திலே தமிழ் நாடெங்கும் பாராட்டப்பெற்று வழங்கி வந்தன என்றும், தமிழர்கள் தங்கள் இல்லங்களில் குழந்தைகளும் அறியச் சொல்லிவந்தார்களென்றும் ஊகிக்க இடமுண்டு. இக்கதைகளைச் சேக்கிழார் குழந்தைப் பருவத்திலேயே கேட்டிருந்து, மந்திரியான பிறகு இவ்வரலாறுகளை ஆராய்ந்து தொகுத்தாரென்று கருதலாம்.

அக்காலத்திலே ஜைனப்புலவர்கள் விசேஷமான செல்வாக்குள்ளவர்களாயிருந்தார்கள். அதே பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வீரசைவ லிங்கமதத்தை ஸ்தாபித்த வசவேசர் என்பவரும், துவைத மதத்தை ஸ்தாபித்த மத்துவாசாரியரும் வாழ்ந்தார்கள். இராமானுஜர் தம் பெரும் புகழை நிலை நிறுத்திவிட்டுச் செங்கதிர்ச் செல்வமாக ஒளி வீசி மறைந்த காலமும் இதுவே. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே முக்கியமாகச் சமண ஆதிக்கத்திலிருந்து சோழ மன்னனையும் தமிழகத்தையும் விடுவித்துச் சைவத்தை நிலை நிறுத்துவதற்காகச் சேக்கிழார் 'நாயன்மார் வரலாறுக'ளாகிய பெரிய புராணத்தைப் பாடி, இம்மெய் விளங்கிய அன்பர்களின் பெரும் புகழையும் தம் பெருங் காவிய வாயிலாக விளங்க வைத்தார்.

புராணமும் காவியமும் இயற்கை வருணனை

இப்பெரிய புராணத்தை 'தெய்வம் மணக்கும் செய்யுள்'கள் நிறைந்த நூல் என்று கருதுவது மட்டும் போதாது. பெரிய புராணம் ஒரு பெருங் காவியமும்கூட. தெய்வ மணம் கமழும் இச்செய்யுள்களில் இயற்கை மணம் கமழ்வதையும் கண்டு அனுபவிக்கலாம். தாமரையில் உறையும் வண்டுகள் தாழையின் மகரந்தத்தைப் பூசிக்கொண்டு எழுந்து ரீங்காரம் செய்யும்போது, அவை 'தூய நீறு புனை தொண்டர்கள் என்னச் சென்று சென்று முரல்கின்றன' என்று சேக்கிழார் ஓரிடத்தில் வருணிப்பதைப் பாருங்கள். இவ்வருணனையில் பக்தி மணமும், இயற்கை மணமும் ஒருங்கே கமழ்கின்றன அல்லவா?

வேறொரு உதாரணம். மூங்கில் போல் வளர்ந்திருக்கும் கரும்புகள் முற்றி முதிர்ந்து முத்துக்களைச் சொரிகின்றனவாம். இக்காட்சி அப்பர் சுவாமிகளைக் கண்டதும் நெஞ்சுருகி முத்து முத்தாய்க் கரும்புகள் ஆனந்தக் கண்ணீர் பொழிவதுபோலத் தோன்றுகிறது. இப்படியெல்லாம் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடும் சேக்கிழார் இயற்கை வருணனைகளையும், தம் பெருங் காவியத்தின் சிறப்பியல்புகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறார் என்பது பிரசித்தம்.

கரும்புகளை வருணித்தாலும் சரி, வண்டுகளையோ, மீன்களையோ, எருமைகளையோ வருணித்தாலும் சரி, மனிதர்களை வருணித்தாலும் சரி, சேக்கிழார் கூர்ந்து கவனித்து இயற்கையை உள்ளபடி அறிந்து வருணிக்கிறார்

ஹரிஜன நிலை

பெரிய புராணம் கூறும் நந்தனார் சரித்திரத்தில் அக்காலத்துப் புலைப்பாடி (ஹரிஜனங்கள் ஒதுங்கி ஒடுங்கி வசித்த சேரி) ஒன்று அப்படியே நம் கண்முன் வருகிறது. (இந்த வருணனையுடன் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'யிலுள்ள புலைப்பாடி வருணனையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த அந்தக் காலத்து ஹரிஜன நிலை புலனாகும்.)

சேக்கிழார் வாழ்ந்த — அந்தத்

தமிழ் நாகரிகம் மேலோங்கியிருந்த காலத்திலேயே நமது வீழ்ச்சிக்கு உரிய சிற்சில பெருங்குறைகளையும் காணலாம். அவற்றில் மற்றப் பெருமைகளுக்கிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை மிகவும் தாழ்ந்தது—மிகவும் கொடிது. அந்நாளிலேயே அவர்கள் கிராமங்களிலோ, நகரங்களிலோ, மற்ற மக்களுடன் கலந்து வசிக்கவில்லை. ஊர்ப்புறத்திலே தாங்கள் உழைத்துவந்த வயல்களுக்கிடையே, சேரிகளில் ஒதுங்கி வசித்தனர். அவர்களுடைய உள்ளத்தையும் ஆத்மாவையும் குறித்து அதிகமாய்க் கவலைப்படாத சமுதாயம் அவர்களுடைய உடல்நலத்தையும், பொருளாதார நிலைமையையும் அலட்சியம்செய்துவிட்டதென்றே தோன்றுகிறது, சேக்கிழாரின் புலைப்பாடி அல்லது பறைச்சேரி வருணனையைப் படிக்கும்போது.

அக்காலப்பெருந்தமிழர்களின் பெருமைகளுக்கிடையே, சிறு சிறு குடிசைகளிலேயே ஹரிஜனங்கள் தங்கள் சிறுமை வாழ்வை நடத்தி வந்தார்கள். குடிசைகளின் கூரைகளோ புல் வேய்ந்த பழங்கூரைகள். அக்கூரைகளை அடிக்கடி புதுப்பிக்கவும், அவர்களுடைய வறுமை இடங்கொடுக்கவில்லை. அப்படியானால் சூரியனும் வாயு பகவானும் மழைக்கடவுளும் குடிசைகளுக்குள்ளேயே தாராளமாய் பிரவேசித்துக் காட்சி வழங்கக் கூடுமல்லவா? அந்த அளவிற்கு அப்பழங் கூரைகள் சிதைந்து போகாதபடி அவர்கள் ஒரு யுக்தி செய்திருந்தார்களாம்.

அதாவது, அப்பழங்கூரைகளைச் சேர்த்துப் பற்றிக்கொள்ளும்படி அவர்கள் சுரைக்கொடிகளைப் படரவிட்டார்களாம்

பற்றியபைங்
கொடிச்சுரைமேல்
படர்ந்தபழங்
கூரையுடைப்
புற்குரம்பைச்
சிற்றில் பல
நிலைத்துளதோர்
புலைப்பாடி,

அந்தச் சுரைக்கொடிகள் அவர்களுக்குக் கூரைக்காவல் மட்டுமல்ல, வயிற்றுக்கும் உணவு தந்தன. சுரைக்குடுக்கைகளைப் பாத்திரங்களாகவும் உபயோகித்தார்களென்று ஊகிக்கலாம். வேருகக் காய்கறித் தோட்டம் போட அவர்களுக்கு வசதி ஏது? வேறு காய்கறிகளைப் பயிரிட்டாலும் 'உயர்குல'ப் பண்ணையர்கள் அடித்துக்கொண்டு போய்விடுவார்களல்லவா?

நோயும் மருந்தும்

இப்படி ஆதனூர்ப் புலைச்சேரியைச் சேக்கிழார் வருணித்திருக்கும் இயற்கை வருணனையிலிருந்தே அக்காலத்திலேயே 'ஹரிஜன'ப் பிரச்னை மோசமாக இருந்ததென்றும் ஊகிக்கலாம். இது நமது சமுதாயத்தை அந்நாளிலேயே உள்ளூர அரித்து வந்த நோய். நந்தனார் கண்ட சிவநெறியைத்தான் சேக்கிழார் பொதுவாக இந்த நோய்க்கும் மருந்தாகக் காட்டுகிறார் என்று ஊகம் செய்யலாம். 'அன்பே சிவம்' என்ற அந்த மருந்துதான் இந்நாளிலும் வேறொரு முறையில் காந்தி வைத்தியமாயிற்று!

மேலே சொன்னபடி புலையர்களை வருணிக்கும்போதும், 'கண்ணப்ப நாயனார் புராண'த்தில் வேடர் சேரியை வருணிக்கும்போதும், செம்படவர்களான வலைஞர்களின் சேரியை வருணிக்கும்போதும், வேறு வருணனைகள் செய்யும்போதும் சேக்கிழாரின் இயற்கை வருணனைகளைக் கண்டு களிக்கிறோம். சங்ககாலத்திற்குப்பின், இத்தகைய இயற்கை வருணனைகளைப் பெரும்பாலும் பெரிய புராணத்திலேதான் காணலாம். இத்தகைய வருணனைகளைச் சேக்கிழாரின் சிறப்பியல்புகளின் ஓர் அம்சமாய்க் கருதலாம்.

* * *

இத்தகைய பெரியபுராணம், சேக்கிழார் தமிழகத்தில் கட்டி நிறுத்திய செந்தமிழ்ச் சிவஞானப் பூங்கோயில். இப்பெரியார், தாம் வாழ்ந்த காலத்தில் வேறு திருப்பணிகளும் செய்திருக்கிறார். சோழநாட்டைச் சேர்ந்த திருநாகேச்சுரம் என்ற தலத்திலே தங்கி அக்கோயிலில் பல திருப்பணிகள் செய்தாராம். தமது கிராமத்திலும் 'திருநாகேச்சுரம்' என்ற ஞாபகக் கோயிலொன்று அமைத்திருக்கிறார். இந்த ஆலயப் பணிகள் தவிர, முதன் மந்திரியாக இருந்து எத்தனையோ முக்கிய அரசியல் பணிகளும் செய்து அநபாயச் சோழச் சக்கிரவர்த்தியின் ஆட்சியைச் சிறப்பித்திருக்கிறார், விளங்க வைத்திருக்கிறார். எனினும் சேக்கிழாரின் அழியாத திருப்பணியாக இன்றும் தமிழர்களெல்லாம் பயன்படுத்திக் கொள்ளக்கூடியது, பயன்படுத்திக்கொள்ள வேண்டியது, பெரிய புராணம் என்ற இப்பெருநூலாகும். இந்தக் காவியக் கோயிலில் நந்தா விளக்காக விளங்குகிறது சேக்கிழாரின் மெய்யறிவு—மேதா விலாசம்.

* * * *

சென்ற சில ஆண்டுகளாகச் சேக்கிழார் திருப்பணிக் கழகம் என்ற ஒரு கழகம், சேக்கிழாரின் பெரிய புராணத் திருப்பணியைத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிவிக்கும் முறையில் பிரசாரம் செய்து தொண்டாற்றி வருகிறது. இந்த ஆண்டிலும் குன்றத்தூரில் சேக்கிழார் சுவாமிகளின் திருநட்சத்திரத்தை ஒட்டி இக்கழக ஆண்டு விழாக் கொண்டாடுவார்கள். இந்த அன்பர்களின் நன்முயற்சியால் 'அன்பே சிவம்' என்ற உணர்ச்சி நாடெங்கும் பரவி நலந்தருவதாக.

—✿—

தோட்டத்துத் தெய்வம்

“நில்லை வாசி”

இப்பொழுது நினைத்துக்கொண்டாலும் உள்ளத்தில் ஒருவித ஆசை என்னையும் மீறிக்கொண்டு வருகிறது. மன உணர்ச்சிகளுக்கும் எழுச்சிகளுக்கும் எல்லையுண்டா? அவைகளை விவரிக்கத்தான் முடியுமா? கணக்கற்ற வருஷங்கள் காலதேவன் ஆட்சியில் சிதைந்து அழிந்து போய்விட்டன. ஆனால் கல்யாணியை மறந்து என்னால் ஒரு நிமிஷமும் இருக்க முடிகிறதில்லை. கல்யாணி மறைந்து இன்றோடு முப்பது வருஷங்களாகின்றன. அவளுக்கு என்று ஏற்பட்ட ஞாபகச் சின்னம் எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருந்துகொண்டு அவளை நினைப்பூட்டிக்கொண்டிருக்கிறது.

இப்போது நான் தலைநரைத்த கிழவி. வயதோ அறுபதையும் தாண்டிவிட்டது. “வீடு போ போ, காடு வா வா” என்கிற நிலையில் வந்திருக்கிறவள். உலகத்தின் இச்சை எல்லாம் அடங்கி நாட்களைத்தான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். மனசு வெறுப்புற்ற இந்த அந்திய பருவத்திலும் கூட ஒரு இன்பத்தை அனுபவித்துக்கொண்டுதான் வருகிறேன். குதூகலத்துடன் கல்யாணியோடு தோழமை பூண்டு இன்பம் அனுபவித்த நாட்களை நினைக்கும்பொழுது எல்லாம் இன்பமாகத் தானிருக்கிறது. அந்த இன்பத்திலும் ஒருவித சஞ்சலம் இல்லாமலில்லை. ஆம், நான் அனுபவிப்பது ஒரு சஞ்சலம் கலந்த இன்பந்தான். பார்க்கப்போனால், அதற்காகவே நான் உயிரை உடம்பில் வைத்துக்கொண்டிருக்கிறேனோ என்று தோன்றுகிறது. சூரியனைப்போல் பிரகாசித்த எங்கள் குடும்பத்தில் நான் ஒரு பிரகாசம் குன்றிய பொறி.

* * *

அப்பொழுது நான் ஏழெட்டு வயது சிறுமி. எங்கள் வீட்டில் சதா கூட்டமும் கும்பலுமாக இருக்கும். எதையும் கவனியாது விளையாடிக்கொண்டிருந்த காலம். சின்னஞ்சிறு சிறுமி. அதிலும் விளையாட்டுப் பருவம். அக்கம் பக்கத்து உலகத்தைப்பற்றி ஒன்றும் கவலைப்படாமல் விளையாடிக்கொண்டிருந்த காலம்.

அப்பாவுக்கு பகவான் செல்வத்திற்கு ஒன்றும் குறைவு வைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், எங்கள் குடும்பந்தான் மிகவும் உயர்வான நிலையில் இருந்தது. அப்பாவுக்குக் குதிரைப் பைத்தியம் அதிகம் இருந்தது. எங்கள் வீட்டுக் குதிரைத் தொழுவம் மிகவும் பெரியது. அதில் எப்பொழுது பார்த்தாலும் ஏழெட்டு குதிரைகளுக்குக் குறையாது. குதிரைகளை வளர்த்து வருவது அப்பாவுக்கு ஒழிந்த நேர உல்லாசப் பொழுது போக்கு. எனக்கு இந்தக் குதிரைகளைப் பார்ப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கும். தூரத்தில் நின்று அவைகளையே வைத்தக்கண் வாங்காமல் மணிக்கணக்காகப் பார்த்துக்கொண்டிருப்பேன். பற்பல தேசத்துக் குதிரைகள் எங்கள் வீட்டிலிருந்தன.

அப்பாவைப்போல் குதிரை மோகம் பிடித்த அனேகம் பேர் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்ததினால் சதா சந்தடியாக இருக்கும். முதலில் இதெல்லாம் எனக்கு வெறுப்பாகவே இருந்தது. எனக்கும் குதிரைகளிடத்தில் பற்று ஏற்பட்டவுடன் இந்தக் கும்பல் சகஜமாய் போய்விட்டது.

பற்பல ஊர்களிலிருந்தும் அப்பாவின் சினேகிதர்கள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களில் என் மனதிற்குப் பிடித்த ஒரு உருவம் இருக்கத்தான் இருந்தது. அதுதான் அந்த ராஜசேகரன் — பட்டிவீரன்பட்டி மிராசுதார் ஒருவருடைய ஒரே புத்திரன். அப்பாவும் அவர் தகப்பனாரும் ஆப்த நண்பர்கள். அவர் அடிக்கடி எங்கள் வீட்டிற்குவரும் பொழுது ராஜசேகரனையும் கூட அழைத்துக் கொண்டு வருவார். ராஜசேகரன் என்னைவிட மூன்று நான்கு வயது மூத்தவர். முதல்

இரண்டு மூன்று தரம் வந்திருக்கும்போது கூச்சப்பட்டுக்கொண்டு வீட்டில் பதுங்கிவிடுவேன். பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக அவருடன் சகஜமாகப் பழகினேன். எனக்கு இந்த விளையாட்டுத் தோழர் நன்கு பிடித்திருந்தது. அவர் எப்பொழுது வருவார் வருவார் என்று அந்த சின்னஞ்சிறு வயதிலேயே எதிர் பார்த்துக்கொண்டிருப்பேன். அப்படி இணைபிரியாத விளையாட்டுத் தோழர்களாகவே நாங்களாகிவிட்டோம்.

* * * *

இருந்தாற்போலிருந்து எங்கள் குடும்பத்திற்கு அழிவு காலம் வந்து, இருந்த ஏழெட்டு குதிரைகளும் ஒன்றன்பின் ஒன்றாக நோய் கண்டு, பத்து நாளுக்குள்ளாகவே இறந்துவிட்டன. கடைசியாக ஒரே ஒரு வெள்ளைக் குதிரை மிஞ்சிற்று. அது இன்னும் இரண்டு மூன்று மாதத்தில் குட்டி போடும் என்று அப்பா அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். அவர் சொன்னபடியே அதுவும் ஒரு குட்டி போட்டது. அதன் அழகைச் சொல்லி முடியாது. பனிக்கட்டியைப்போல் ஒரே வெள்ளைநிறம். பளபளவென்று கண்ணை பறித்துவிடுவதுபோலிருந்தது. அந்தக் குதிரைக் குட்டி பிறந்தது முதல் எனக்கு ஒரே உற்சாகமாக இருந்தது. எனக்கு ஒரு தங்கை பிறந்திருந்திருந்தால் எப்படிச் சந்தோஷப்பட்டிருப்பேனோ, அதைப் போலவே நானிருந்தேன். எனக்கு மற்றுமொரு புதிய தோழி கிடைத்துவிட்டாள். அவளுக்கு நான் கல்யாணி என்று பெயர் வைத்தேன். என் பகற்பொழுதெல்லாம் கல்யாணியுடன் விளையாடியே கழித்துவிட்டேன் என்று சொன்னால் மிகையாகாது. நானின்றி கல்யாணி இல்லை, கல்யாணி இன்றி நான் இல்லை என்று சொல்லிக்கொள்ளும்படியான அளவுக்கு நாங்கள் வந்துவிட்டோம்.

அப்பாவினுடைய செல்வம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வந்தது. அப்பாவும் முன்போல் உற்சாகம் இல்லாதவராக இருந்து வருவதையும் நான் தெரிந்துகொண்டேன். திடீரென்று ஒருநாள் அந்தப் பெரிய குதிரையை (அதுதான் கல்யாணியின் தாயை) விற்றுவிட்டார் என்று தெரிய வந்தது. எங்கள் குதிரைக் கொட்டகையை இப்பொழுது கல்யாணிதான் அலங்கரித்துக்கொண்டு வந்தாள். அவளுக்கு வேண்டிய தீனி வகைகளை நான்தான் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருவேன்.

குதிரைகள் இறந்ததும்—அதற்குப்பின் செல்வம் குறைந்து போனதும்—அப்பாவுக்கு நெஞ்சில் பெரிய பாராங்கல்லைத் தூக்கிப்போட்டது மாதிரி இருந்திருக்கவேண்டும். அதே கவலையில் அவர் படுக்கையில் விழுந்துவிட்டார். அப்பொழுதுதான் நான் சரியான கன்னிப்பருவத்தை அடைந்திருந்தேன். நானும், அம்மாவுமாக அப்பாவுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்துகொண்டு வந்தோம். மீண்டும் நடமாடிக்கொண்டு எங்களுக்குத் துணையாக இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்கமாட்டாரா என்று நினைக்கும்படி, அப்பாவினுடைய நிலைமை அவ்வளவு மோசத்திற்கு வந்துவிட்டது. நானும் தெய்வங்களின் பல நாமங்களை மனதில் ஸ்மரணை செய்துகொண்டு அப்பாவின் உடம்பு குணமாகவேண்டுமே என்று பிரார்த்தனை செய்துகொண்டு வருவேன். அவருடைய வியாதி—மனவியாதிதான்—நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்ததேயொழிய, அவருடைய உடம்பு தேறுவதற்கான அறிகுறி தென்படவேயில்லை.

ஒருநாள் காலை மணி ஒன்பதிருக்கும். படுத்த படுக்கையாக இருந்த அப்பாவின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது ராஜசேகரன் திடீரென்று வந்தார். வந்தவரை அப்பா அடையாளம் கண்டு கொள்ளவில்லை. நான் மட்டும் "வாருங்கள், வாருங்கள், இது மட்டுக்கும் இப்பொழுதாவது வழி தெரிஞ்சதே, மறந்து போயிருப்பீர்கள் என்றுதான் இருந்தோம்" என்று கொஞ்சங்கூட கூச்சமில்லாமல் பேசினேன். உண்மையில் அப்பொழுதுதான் என் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

அடிக்கடி எங்கள் வீட்டிற்குத் தகப்பனும் மகனுமாக வருபவர்கள் இந்த நான்கு வருஷங்களாக இந்தப் பக்கம் வரவேயில்லை. அப்பாவின் கை சளைத்துப் போனதினாலும், குதிரைகள் அற்றுப் போனதினாலும், ராஜசேகரன் தகப்பனாரைப்போல் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்த எத்தனையோ பேர்கள் இப்பொழுது எங்கள் வீட்டைத் திரும்பிக்கூடப் பார்ப்பது கிடையாது. தேனிருக்கும்வரையில்தான் வண்டுகள் மலர்களைச் சுற்றுகின்றன.

அப்பா நோய் வாய்ப்பட்டுக் கிடந்த இந்தக் காலத்திலும் என் மனக் குரங்குமட்டும் ஏதேதோ சிந்தனைகளிட்டுக்கொண்டே இருக்கும். என் சின்னஞ் சிறு வயதில் என்னுடன் பழகி என் உள்ளத்தை கொள்ளை கொண்ட அந்தக் கள்வன்—ராஜசேகரன்—"ஏன் இன்னும் இங்கு வரவில்லை" என்று தான் தினந்தினம் நினைத்துக்கொண்டிருக்கும். "அவர் இன்று வரமாட்டாரா?" என்று மனம் துடிக்கும்.

அவரைக் கடைசி முறையாக நான்கு வருஷங்களுக்குமுன் பார்த்தது. அப்பொழுது பார்த்ததைவிட இப்பொழுது பன்மடங்கு வளர்ந்திருந்தார். அவரைப் பார்க்கும் எந்தக் கன்னிப் பெண்ணும் தன் மனதைப் பறிகொடுத்து விடுவாள் என்பது திண்ணம். அத்தகைய ஒப்பற்ற தேகவனப்பை அவர் பெற்றிருந்தார். "அவர் கையை நான் பிடிக்க முடியுமா? அது எனக்கு எளிதில் சித்திக்குமா?" என்ற ஆசை என் மனத்தில் எழ ஆரம்பித்தது.

எங்கள் குடும்பமோ செல்வத்தையெல்லாம் இழந்து க்ஷீணதிசை யடைந்து இப்பொழுது மிகவும் தரித்திர நிலைமையை அடைந்திருந்தது. அவர் குடும்பமோ முன்னைவிட அதிக செல்வாக்குடனிருந்தது.

"அவருடைய தகப்பனார் என்னைக் கொள்வதற்கு சம்மதிப்பாரோ, மாட்டாரோ?" என்ற கேள்வி என்னை வதைத்தது.

வந்தவர் உட்காராமல் நின்று கொண்டேயிருந்தார். அவரை வலுக்கட்டாயப்படுத்தி உட்கார வைத்தேன். அவர் என்னைப் பார்த்த அந்தப்பார்வையை என்னால் விவரிக்க முடியாது. அது எல்லாவித உணர்ச்சிகளையும் எனக்கு உண்டாக்கி விட்டது. அவருக்கு வெகு அருகில் நான் போய்க்கொண்டிருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

அப்பா அவரை இன்னாரென்று அறிந்துகொண்டு இப்பொழுது தான் பேச ஆரம்பித்தார். "ஏண்டாப்பா, சேகரா? ராமலிங்கம் (அவர் தகப்பனார்) சௌக்கியமா? ஏன், இந்தப்பக்கம் வருவதையே விட்டு விட்டீர்களா? நான்தான் வெளியே தெருவே போக முடியாமல் இப்படிக்கிடக்கிறேன். நீங்களாவது இந்தப்பக்கம் வந்து கொண்டு போய்க்கொண்டு இருக்கக்கூடாதா?" என்று அழாக் குறையாக அவரைப் பார்த்துக் கேட்டார். அவர் ஒன்றும் பதில் பேசாமலே உட்கார்ந்திருந்தார். இதற்கிடையில் அப்பாவும் என்னைப் பார்த்து "தம்பிக்கு வேண்டிய சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னார். நானும் அடுப்பங்கரைப் பக்கம் வந்துவிட்டேன். பிறகு அவர்கள் இரண்டுபேரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

பகல் போஜனத்தை நானே அவருக்குப் பரிமாறினேன் அவர் மிகவும் கூச்சத்துடன் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டே சாப்பிட்டு முடித்தார். நான் அடைந்த மகிழ்ச்சியின் எல்லையைக் காண முடியாது. அப்பொழுதிருந்தே நான் அவருடைய சொந்தப் பொருள் என்று நினைக்க ஆரம்பித்தேன். சாப்பாடு ஆனதும், அப்பா சாவகாசமாக அவரைப் பார்த்து அவர் வந்திருக்கும் காரணத்தை விசாரித்தார். அவர் மிகவும் சுருக்கமாகவே பதில் கூறினார். "அமிர்தவல்லியைப் பெண் கேட்பதற்காகவே வந்திருக்கிறேன். அப்பா, அம்மா எல்லோருக்கும் இது சம்மதம். வீண் தாமதப்படுத்தக்கூடாது என்று நானே புறப்பட்டு வந்துவிட்டேன்" என்றார். அதிகம் வளர்த்துவானேன். அவரை மணம்செய்துகொண்டுவிட்டேன்.

இரு குடும்பங்களும் மனமொத்து ஏற்பாடு செய்த கல்யாணம். சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா? பிறகு நான் அவருடன் குடித்தனம் செய்ய வந்துவிட்டேன். அப்பாவை அந்த நிலையில் விட்டு வர மிகவும் கஷ்டமாய்த்தானிருந்தது. என்ன செய்வது? பெண்ணாய்ப் பிறந்தால், இப்படிப் பிரியும் கட்டம் ஒன்று வந்துவிடுகிறதே. கல்யாணியிடத்தில் நான் வைத்திருந்த அன்பு, பிரியம் அப்பா அறிந்தவரல்லவா? அவளையும் என்னுடன் அழைத்துக்கொண்டு போகும்படி சொல்லிவிட்டார். கல்யாணியைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது என்று அவர் நினைத்து இருக்கவேண்டும்.

கல்யாணி இப்பொழுது என்னுடைய "புது வீட்டிற்கு" வந்துவிட்டாள். நானும் என்னுடைய இன்ப வாழ்க்கையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். அப்பா, அம்மாவை மறக்காமல் வாரத்திற்கு ஒரு முறையாவது போய் பார்த்துவிட்டு வருவேன். பிறகு ஐந்தாறு மாதங்களில் அப்பாவும் காலஞ்சென்றுவிட்டார். அம்மா என் கூடவே வந்திருந்து அவளும் கொஞ்சநாள் இருந்துவிட்டு அப்பா போன இடத்திற்குச் சென்றுவிட்டாள். இத்துடன் என் வாழ்க்கையின் முதல் அத்தியாயம் முடிந்துவிட்டது.

* * * * *

இப்பொழுது என் அருமைக் கல்யாணி நன்றாக வளர்ந்துவிட்டாள். அவளுடைய எழிலை என்னால் எளிதில் வர்ணிக்க முடியாது. ராஜாதேசிங்குவின் பட்டத்துக் குதிரையைப்போல் சிறந்தது வேறு எதுவும் இருந்ததில்லை

என்று படித்திருக்கிறேன். அது எப்படி இருந்ததோ, என்னவோ? ஆனல் என் கல்யாணியின் எழில் மிகுந்த வனப்பையும், சிறப்பையும் நான் பிரத்தியட்சமாக அறிந்து வந்தேன். "இத்தகைய ஒப்பற்ற வனப்பும், உயரமும் நல்ல தேகக்கட்டுமுள்ள குதிரை ஒன்றையாகிலும் அப்பா எனக்கு ஆஸ்தியாக விட்டுப்போயிருக்கிருரே'' என்று நினைக்கும்போது என்மனதில் மகிழ்ச்சி நிலவும். மறுகணம் "அப்பா உயிருடனிருந்து கல்யாணியை இந்த நிலையில் பார்த்தால் எப்படி, எப்படி கூத்தாடுவார். குதிரை என்ருல் அவருக்குயிராயிற்றே'' என்று ஒரு சஞ்சலம் ஏற்படும்.

எனக்கு நினைவு தெரிந்தது முதற்கொண்டு, யாரைக்கணவராக அடைய வேண்டுமென்று மனக் கோயிலில் வைத்துப் பூஜை செய்தேனே, அவரே எனக்குக் கிடைத்துவிட்டார். என் கணவரும் எனக்கு எவ்வித குறைவும் ஏற்படுத்தவில்லை. என்னைத் தன் கண்ணின் கருமணியே போல்தான் போற்றி வந்தார். அவரும், தான் எண்ணிய படியே என்னை அடைந்துவிட்டதாக அடிக்கடி சொல்லி வந்தார். குதிரைகளினுல் ஏற்பட்ட சந்திப்பு குதூகலத்தில் கொண்டு வந்து விட்டிருப்பதாகவும், அதிலும் ஒரு குதிரையுடன் கூடவே இருப்பதினுல் இன்னும் அதிக ஆனந்தத்தை உண்டு பண்ணிக் கொண்டு வருவதாகவும் அவர் சொல்லிக் கேட்கும்போது இந்த உலகத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்ருது. ஏதோ ஒரு மந்திரத்தில் கட்டுப்பட்டு மகுடிக்குத் தக்கபடி நடமாடும் நாகம்போல்தானிருந்தது என் செய்கை.

கல்யாணிக்கென்று மிகவும் சித்திர வேலைப்பாடுடன் கூடிய ஒரு வண்டியை ஆயிரம் ரூபாய் செலவில் செய்து அதில் நானும் அவரும் சவாரி செய்யும்போது ஏற்பட்ட மகிழ்ச்சியைத்தான் சொல்லிமுடியுமா? அவரே வண்டியை ஓட்டிச் செல்வார். வண்டியின் உட்புறத்தில் நான் ஒருத்திதான். நீண்டு வளைந்து செல்லும் பாதைகளில் ஒவ்வொரு சமயம் வெகு தூரத்திற்கு வெகு தூரம் நான், அவன் கல்யாணி என்ற மூன்று உயிர் ஜீவன்களும், உயிரற்ற அந்த வண்டியுமாகத்தான் இருந்தோர். எங்களுடைய கேளிக்கை விளையாட்டுகளில் பிரயாணம் செய்வதே தெரியாது. வண்டி வேகமாக ஓடுவதுகூடத் தோன்ருது. எங்கேயோ ஒரு உயர்ந்த மாடியில் நானும், அவருமாக அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருப்பதாகவே தோன்றும். கல்யாணிக்கு மட்டும் பேசக்கூடிய சக்தி இருக்குமேயானுல் எங்களுடைய காதல் விநோத வாழ்க்கையைப் பகிரங்கப்படுத்தியிருக்கமுடியும். (அப்படி அவள் செய்யமாட்டாள்.)

நான் உலகத்தில் குழந்தையாய்ப் பிறந்து பத்து பதினைந்து வயதுவரைக்கும் கவலை தெரியாமல் செல்வாக்குடனேயே வளர்ந்திருந்தேன். பிறகு கொஞ்சம் சனி தசை இருந்தது போலும். அப்பாவுக்கு கை நொடித்துப் போய் அவர் படுக்கையில் விழுந்தது முதல் எத்தனையோ மன அவஸ்தைகளைப்பட்டிருக்கிறேன். மணமானதும், என் கஷ்டம் நீங்கி இன்ப வாழ்க்கையில் பிரவேசித்த இந்த ஐந்து வருஷ காலமாக இன்பலோகத்திலேயே வாழ்ந்து வந்திருந்ததினுல் கஷ்டம், அவஸ்தை, கவலையென்பது எப்படியிருக்கும் என்று நினைக்கக் கூட முடியாதுபோய் விட்டது. அந்த இன்பத்திலேயே நாங்களிருவரும் என்றென்றும் திளைத்து விடுவோம் என்றுதான் என் மனம் கோட்டை கட்டியிருந்தது. ஆனல் இந்தக் கோட்டை தகர்ந்து போவதற்கு வெகு நாட்கள் செல்லவில்லை.

செழுமையுடன் வளமை குன்ருது வளர்ந்திருக்கும் மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல் அந்த சோமு—அவன்தான் சண்டாளன்—எங்கிருந்தோ என் கணவருக்குப் பரிச்சயமாகி விட்டான். அவன் ஒருவன் எங்கள் வாழ்க்கையில் குறுக்கிடாவிட்டால் என் வாழ்க்கைச் சகடம் மிகவும் இன்ல் கரமாகவே ஓடிக்கொண்டிருப்பதிருக்கும். அவ்வளவுதான் நான் கொடுத்து வைத்தது. விதியின் சதியும் அவனையே ஏவி விட்டது போலும். இல்லாவிட்டால் இளம் வயதிலேயே அத்தகைய பேரிடி என் தலையில் விழுந்திருக்காது.

சோமு, தன்னுடைய ஊர் திருச்சினுப்பள்ளி என்று சொல்லிக்கொண்டான். கொஞ்சம் படித்து நாகரீகமுடையவனுகவே காணப்பட்டான். தகப்பனுர் தேடி வைத்திருந்த ஆஸ்தி கொஞ்சமிருந்தது. அதை அவன் குதிரைப் பந்தயத்தில் அழித்துவிட்டிருக்க வேண்டும். இப்பொழுதோ அவன் பிறர் தயவைநாடித்தான் வாழ்ந்து வந்தான். பிறந்த ஊர் திருச்சி என்ருலும், வளர்ந்தஊர், வாழ்ந்த ஊர் சென்னை என்று பெருமையாகப் பேசிக்கொண்டதை நான் ஒவ்வொரு சமயம் கேட்டிருக்கிறேன். என்னுடைய கல்யாணியைப் பார்த்து அவன் மயங்கியிருக்கவேண்டும். ஒருவேளை, தான் இழந்திருந்த செல்வத்தை எல்லாம் கல்யாணியின் மூலம் அடைந்து விடலாம் என்று நினைத்தானே, என்னவோ? எப்படியோ என் கணவரைச் சிநேகம் பிடித்துவிட்டான். ஆம், ஒரு நாள் திருச்சிக்கு நானும், அவரும் ஒரு மாசி மகத்திற்கு காவேரிஸ்நானம் செய்யப் போய் திரும்பி வருகிற வழியில் மலைக்கோட்டைக்கருகில் அவரைப்பார்த்துப்பேசினுன். ஏதேதோ பேசினுன். நான் கவனிக்கவில்லை.

இதற்கு முன்பின் அறியாதவன்தான். இந்தச்சந்திப்புக்குப் பிற்பாடு வாரத்திற்கு ஒரு முறை எங்கள் வீட்டில் முகாம் போட்டு விட்டான் சோமு. இதுவரை கல்யாணிக்கென்று செய்த வண்டியில் நான், அவரைத்தவிர வேறு யாரும் ஏறிச் சவாரி செய்ததில்லை. ஏன், அந்த வண்டியும் கல்யாணியும் எனக்கென்று ஏற்பட்டவை. வண்டியை ஓட்டிச் செல்வதற்கு அவர் என்றுதான் எண்ணி இருமாப்படைந்திருந்தேன். அவன் வந்து சேர்ந்தது முதற்கொண்டு எனக்கு அந்த வண்டியில் ஏறும்பாக்கியம் அற்றே போய்விட்டது. அவர்கள் இருவரும் எங்கெங்கேயோ வண்டியை ஓட்டிக்கொண்டு போய்த் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

அவன் திடீரென்று ஒருநாட் காலையில் எங்கள் வீட்டில் வந்து நிற்பான். உடனே வண்டிகட்டப்படும். பிறகு சாயந்திரம்தான் வீட்டிற்குத் திரும்புவார்கள். எங்கு போய்த் திரும்புவார்களோ? அவர் மனதைக் கலைத்து



பிரபல டச்சு தேச சிற்பி க்ளாராக் வீன் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பாட்டனின் முகச் சிலையைச் சமீபத்தில் செதுக்கித் தயாரித்திருக்கிறார். இப்போது லேடி மவுண்ட்பாட்டனின் முகச் சிலையைத் தயாரிக்கிறார். சிற்பியின் வேலைக்கு உதவும் பொருட்டு லேடி மவுண்ட்பாட்டன் உட்கார்ந்திருக்கிறார். சிற்பி தமது வேலையைத் துவக்குகிறார்.

அவன் எப்படியோ, தன் வழிக்குக் கொண்டுபோயிருக்க வேண்டும். அவன் திடீரென்று வருவதும் மறைவதும் எனக்கு சம்சயமாகவேயிருந்தது. அவர் சதா யோசனையில் ஆழ்ந்திருப்பதை நான் அடிக்கடி கவனித்தேன். என்ன மனக்கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தாரோ?

இன்னும் கொஞ்சநாள் போனதும் வண்டிகட்டுவதையே அடியோடு நிறுத்திவிட்டார்கள். குதிரையைமட்டும் அலங்கரித்து வெளியில் ஓட்டிக்கொண்டுபோய்க் கொண்டிருந்தார்கள். எனக்கு இதெல்லாம் வெளியாகாத ஒரு புதிராகவே இருந்தது. என் மனசு மட்டும் "இந்தச்சனியன் எங்கிருந்தடா வந்தான். இவன் ஒழிய மாட்டானா? அவர் வீட்டிலேயே தங்கிவிடமாட்டாரா?" என்று எண்ணிக்கொண்டேயிருக்கும். அவரைக் கண்டிப்பதற்கு எனக்குத் தைரியமில்லை. அவரை மணந்த இந்த ஐந்து வருஷகாலமாக ஒருவருக்கொருவர் மனசு நோகும்படி ஒரு வார்த்தை சொன்னதோ, ஒரு செய்கை செய்ததோ கிடையாது. ஏதாவது சொல்லிவிட்டால் மனசு நொந்து போய்விடுவாரோ என்று சும்மா இருந்துவிடுவேன். குதிரை மட்டும் வெளியில் போவதும் வருவதுமாகவே இருந்தது.

ஒருநாள் திடீரென்று அவர் "கல்யாணியைப் பட்டணத்திற்குக்கொண்டு போகிறேன். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் திரும்பி வந்துவிடுவேன்" என்று சொன்னார். "ஏன்" என்று கேட்க என்னால் முடியவில்லை. "நான் என்னுடன் கொண்டுவந்த குதிரையாயிற்றே. ஏதாவது கேட்டுவிட்டால் குற்றமாக நினைத்துக் கொள்ளப் போகிறாரே" என்று பயந்து சும்மா இருந்துவிட்டேன்.

இப்படி அவர் கல்யாணியை அடிக்கடி சென்னைக்குக் கொண்டு போவதும் திரும்பி வருவதுமாகவே இருந்தார். ஒரு சமயத்தில் ஒரு வாரத்திலேயே திரும்பி வந்துவிடுவார். ஒரு சமயம் திரும்பி வர ஒரு மாதம் ஆகும். இன்னும் சில சமயங்களில் இரண்டு, மூன்று மாதங்கள் கழித்துதான் திரும்புவார். ஆனால் ஒன்றைமட்டும் நான் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அதுதான் அவர் சென்னையிலிருந்து திரும்பி வரும்பொழுதெல்லாம், மிகவும் சந்தோஷமாகவே காணப்பட்டார். எனக்குமாத்திரம் ஒருவித பயமும் சந்தேகமும் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. "எப்படி அவரை விசாரிக்கலாம்? விசாரிக்கலாமா, வேண்டாமா?" என்ற கேள்விகள் எழும். சென்னைக்குப் போகும்போது, சோமு, அவர் கல்யாணியாகவும், வீட்டிற்குத் திரும்பும்போது அந்த அன்னியன் நீங்கலாக வருவதுமாக இருந்தார்.

(தொடரும்)

மன்னனை ஆண்ட மங்கை

7

ஆனந்தப் பூங்காவனம்

'பார் இந்தப் பூங்காவனத்தை. இதற்கும் நம்முடைய சிங்காரப் பூங்காவனத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! இங்கும் பூமரங்கள், பூஞ்செடிகள், பூங்கொடிகள் காணப்படுகின்றன. குளிர்காற்றோடு கம்மென்று வருகிறது மல்லிகை, முல்லை, பச்சை, இருவாட்சி, பாதிரி, சண்பகம், வகுளம், மருக்கொழுந்து, தாழை துளசி முதலியவற்றின் வாசனை. தாமரைப்பொய்கையில் செந்தாமரையும் வெண்தாமரையும் பூத்திருக்கின்றன. ஆனால் மதுரம்! இந்தப் பூக்களில் நம்மால் இன்னதென்று திட்டமாய்ச் சொல்லமுடியாத ஒரு தெய்விக அழகு குடிகொண்டிருப்பதுபோலவும், ஏதோ ஒரு தெய்வமணம் கமழ்வதுபோலவும் தோன்றுகிறதல்லவா?' என்றாள் மதுரவள்ளியை நோக்கி மதுரைவல்லி.

அதற்கு மதுரவள்ளி, 'எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் அக்கா! இது நம்முடைய மனோபாவத்தால் நமக்குத் தோன்றும் தோற்றமாகத்தான் இருக்கவேணும். இப்பெரியாரைக் குறித்து நாம் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? எவ்வளவோ பக்தி கொண்டிருக்கிறோமல்லவா?' என்று பதில் சொன்னாள்.

'இந்த மலர் மணத்தோடு அவருடைய பக்தி மணமும் கலந்து ஒருவேளை இப்படித் தெய்வ மணமாக வீசுகிறதோ?'

'அவருடைய ஒப்பற்ற பக்தி மணம் மட்டுமா? அக்கா! நம்முடைய பக்திமணமும்—நமக்கு அவர்மீதுள்ள பக்தியும்—சேர்ந்துதான், இப்படிப் பரிமளிக்கிறதென்று எனக்குத்தோன்றுகிறது.'

'நம்முடைய பூங்காவனத்திலும் செந்தாமரைகள் பொய்கைகளில் மலரத்தான் செய்கின்றன! ஆனால் மதுரம்! இங்கே இப்பூக்கள், எவ்வளவு மதுரமாய்க் காண்கின்றன! அழகுத்தெய்வமான மகாலட்சுமி அப்படியே வந்து கொலு விருப்பதற்கு ஜோடித்திருக்கிறமாதிரி அவ்வளவு அழகாயிருக்கின்றனவே!

'ஆம், பக்தியின் அழகு இந்த நந்தவனமெங்கும் ஊடுருவிக் கிடப்பது போலத்தான் எனக்கும் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஆனால் இது உணர்ச்சிதானே?

'அறிவுத்தெய்வம் கொலு விருப்பதாகவே தோன்றுகிறது. மதுரம்! அந்த வெள்ளைத் தாமரைகளில்! இப்பெரியாரின் பெருமையை—இதயத்தாமரையின் மலர்ச்சியை—இந்த நந்தவனத்தின் மூலை முடுக்குகளிலும் பார்க்கிறோம். இது உணர்ச்சிதான் என்றால், எவ்வளவு விசேஷமான உணர்ச்சி!'

'அதோபார் அக்கா! அந்தப் பூஞ்செடிகளுக்கிடையே மயில் நாட்டியம் ஆடுவதை ஆனந்தவல்லிக்குத்தான் இந்த நாட்டியச் செருக்கு உண்டா? குயில், கிளி, முதலான பட்சி ஜாலங்

கள் நடத்தும் சங்கீதக் கச்சேரிதான் எப்படிப் பட்ட செவி—விருந்து! மலர்களிலே மதுவுண்டு வெறிகொண்டு கிளம்பிய வண்டுகள் ரீங்காரம் செய்வதுதான் எவ்வளவு இன்பமாயிருக்கிறது!'

'ஆம், மதுரம்! ஆனால் இந்த இன்பத்தைப் பேரின்பம் என்றே சொல்லத்தோன்றுகிறது. வண்டுகளின் ரீங்காரமும், பட்சி ஜாலங்களின் கீதநாதங்களும், அந்த மயில்—நடனமும் எல்லாம் சேர்ந்து ஏதோ ஒரு பஜனை நடத்துவது போலவே எனக்குத் தோன்றுகிறது. என்னடி இந்த மயக்கம்! நாம் பூலோகத்தில்தான் இருக்கிறோமா?

'ஆம், அக்கா! பார்க்கப் பார்க்க அதிசயமாகத்தான் இருக்கிறது. தோட்டத்தையெல்லாம் அழகு செய்யும் கையும் மனமும் அப்பெரியாருக்கு உண்டு என்பதற்கு இந்த நந்தவனமே சாட்சி, வேறு சாட்சி வேண்டியதே இல்லை. அதோ, நம்முடைய சிங்காரப் பூங்காவனத்தில் இருப்பவைபோல் பூங்கொடிகளுக்கும் பூமரங்களுக்கும் இடையே கொடி வீடுகள், இலைக் குடில்கள், புல்லுப்புரைகள்'

'உண்மை; எனினும் ஒற்றுமை ஸ்தூலமானது தான். இங்கே கட்டடம் என்பதே கிடையாது. இதோ, கீழே பச்சைப் பசும்புல்—கம்பளம்: மேலே நீல வானம்; நாலு திசையும் பன்னிற மலர்கள் இந்த அழகுச் செல்வத்தை அனுபவிக்கும்போது, "இதுதான் உண்மைச் செல்வம். பேராசையும் பொருட் செல்வமும், பூசலும் போட்டியும் எவ்வளவு பொய்யானவை, மாயமானவை!" என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு. மதுரம்! இந்த உணர்ச்சி அந்தப்பூங்காவனத்தில் உண்டாயிற்றா? எத்தனை கவலைகள் அங்கே? அவையெல்லாம் இப்போது எங்கே போய்விட்டன? நடந்துதான் வந்தோமா? எப்படியோ பறந்து எங்கேயோ வந்து தேவலோகத்து உத்தியான வனத்திலேதான் அடி வைக்கிறோமா?'

'அக்கா! இங்குள்ள அழகுக் காட்சிகளும், தூய காற்றும், பின்னிப் பிணைந்த மரங்களுக்கிடையே வடிகட்டி விழுவதுபோல் வந்து விழும் சூரிய ஒளியும் உங்கள் உள்ளத்திலே தூய அழகிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன. ஏற்கெனவே பக்தியில் ஊறிக்கிடந்த உள்ளம் இப்போது இங்கே ஆனந்தக் கனவுகள் காண்கிறது!'

இரண்டு மான்களைப்போலத் துள்ளிச் சுழன்று அந்தச் சோலையெங்கும் பார்த்துக் கொண்டே சம்பாஷித்தவண்ணம் வந்து கொண்டிருந்தார்கள் மதுரவள்ளியும் மதுரைவல்லியும். இவர்களுடைய பேச்சிலிருந்து இருவரும் சகோதரிகள் என்று தோன்றும். ஆனால் மதுரவல்லி தாராளமாய் உரையாடிய போதிலும் தமக்கைக்குக் காட்ட வேண்டிய மரியாதையைக் காட்டிலும் எவ்வளவோ அதிக மரியாதை காட்டுகிறாள். மேலும் ஒருத்தி குறத்தி போலவும், ஒருத்தி இடைச்சி போலவும் காண்கிறதே? கோலம் அப்படித்தானிருக்கிறது. எனினும் என்ன பண்பாடு! என்ன உயர்குடிப் பழக்கம்! அக்காள் தங்கையானாலும் பேர்களிலும் இவ்வளவு ஒற்றுமையா?

ஒரு மரத்தின் அடியிலே மதுரவள்ளியும் மதுரைவல்லியும் சிரம பரிகாரம் செய்து கொண்டார்கள். அப்போது மதுரைவல்லி மதுரவள்ளியைப் பார்த்து, 'நான் இனி அங்கே வர விரும்பவில்லை. இங்கேயே இந்தக் குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டே இருந்துவிடலாமென்று தோன்றுகிறது?' என்றாள்.

'என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள், அவரையும், மறந்து?'

'அவரையும் மறக்கவில்லை, மதுரம்! அவரும் நானும் இருவருமாக இந்தக் குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டு இங்கேயே இருந்து விட்டால் என்ன?'

'துறவியாகி விடுவாரோ என்று அவரைப் பரிகசித்துவிட்டு நீங்களே இப்போது துறவியாகப் பார்க்கிறீர்களே?'

'என்ன அப்படிச் சொல்லுகிறாய்? மதுரம்! துறவியாகவா நினைக்கிறேன்? அந்தப் பௌத்த தருமம் எனக்கு எப்போதுமே பிடிக்காது. இங்கே உலகத்தைத் துறந்து ஓடவேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்படவில்லை. அந்த மயிலும் பாம்பும் கூடச் சகோதரர்களாக வாழக்கூடிய இந்த ஆனந்த நந்தவனத்திலே, கிளியும் வண்டும், காற்றும் கதிரவனும் எல்லாம் நமது இனம், நமது சுற்றம், நமது குலம் என்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. அம்மலர்களின் நறுமணத்தைச் சுமந்துவரும் இப்பூங்காற்று நம்மை ஓர் உண்மையான, அழகான, ஆனந்த நாட்டுப் பிரஜைகளாக நம்மை வரவேற்பதுபோலத் தோன்றுகிறது. மதுரம்! "இந்த விரிந்த வானமும் பூமியும் பத்துத் திக்குக்களும் உங்கள் நாடு உங்கள் வீடு! அப்படியிருக்க, நீங்கள் ஏன் ஒரு வீட்டிலோ, நாட்டிலோ அடைத்துக்கிடந்து பூசலிட்டுக் கொண்டிருக்கவேணும்?" என்று இந்த நந்தவனம் ஒரு மௌனப் பிரசங்கம் செய்வது போலத் தோன்றுகிறது' என்று மதுரைவல்லி ஒரு பிரசங்கமே செய்துவிட்டாள், மதுரவள்ளி கேட்ட கேள்விக்கு.

* * * * *

இதற்குள்ளே வாசகர்கள் இவர்களை இன்னாரென்று ஊகித்திருக்கக்கூடும். ஆம்; மதுரைவல்லி மாறுவேடம் பூண்ட மதுரை அரசி

தான். அப்படியானால் மதுரவல்லி தோழியான அமுதவல்லியாகத்தானேயிருக்க வேண்டும். அரசரிடம் சிங்காரப் பூங்காவனத்தில் விடை பெற்றுக் கொண்டபின் அரசி தோழியிடம் வேலையிருக்கிறதென்று சொல்லிப் பளிங் கறையை நோக்கி வந்தாளல்லவா? அங்கே வந்து சேர்ந்ததும் காத்திருந்த தோழியை நோக்கித் திடீரென்று, 'உனக்குக் குறி சொல்லத் தெரியுமா?' என்று கேட்டாள்.

'என்ன, மகாராணி! பரிகசிக்கிறீர்கள்? தங்களுக்கும் என்னைப்போல் குறி கேட்பதில் நம்பிக்கை கிடையாதே! எனக்கு ஏதாவது ஒரு குறத்தி வேஷம் போட்டுப் பொழுது போக்க விரும்புகிறீர்களா? அப்படியெல்லாம் விளையாடுவதற்கும் மற்றத் தோழிகள் இங்கே இல்லையே. மேலும் உங்கள் மனநிலைதான் இப்போது அந்தமாதிரி விளையாட்டுக்கு இடங்கொடுக்குமா?' என்றாள் அமுதவல்லி.

'குறி சொல்லத் தெரியுமா என்று தானே கேட்டேன்? என் நம்பிக்கையைப்பற்றியாவது, நோக்கத்தைப்பற்றியாவது ஒன்றும் சொல்லவில்லையே. அவற்றையெல்லாம் குறித்து உனக்கு இப்போது என்ன கவலை? நான் கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லு இப்போது: குறி சொல்லத் தெரியுமா, தெரியாதா?'

'தெரியும்—தெரியாது!'

'இது என்ன விகடம்? நான் இப்போது விளையாடவில்லை; காரியமாகத்தான் பேசுகிறேன். குறி சொல்லத் தெரியுமா?'

'வருங் காலத்தை உள்ளபடியே குறியாகக் கண்டுபிடித்துச் சொல்ல வேணுமானால், அந்த வித்தை எனக்குத் தெரியாது; அதில் நம்பிக்கையும் கிடையாது. குறி சொல்வதுபோல் பாவனை செய்ய வேணுமானால், வேடிக்கை காட்டவேணுமானால், அந்தக் கலை எனக்குத் தெரிந்ததுதான்!'

'இது போதும். இங்கே தரை மெழுகிக்கோலம் போடு.'

'இதோ செய்துவிட்டேன்.'

'பிள்ளையார் பிடித்து வை.'

'இதோ வைத்துவிட்டேன்.'

'என்ன? பிள்ளையாரா, ஹனுமாரா பிடித்துவைத்தாய்? யானைமுகம் அம்மா! "பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை"யாக முடித்துவிடாதே!'

'மகாராணியின் கண்ணுக்கு அப்படியா தெரிகிறது? இதோ சரியாக வைத்துவிட்டேன்.'

'தேங்காய் உடைத்து வை; முப்பழம் படைத்து வை; நிறை நாழி அளந்து வை.

'இதோ வைத்துவிட்டேன், நாழி நிறைய நெல் முதலியவையெல்லாம். இனிக் குறி சொல்லட்டுமா? எங்கே உங்கள் கை? பார்க்கலாம்.'

பிறகு முத்திரை மோதிரமும், சித்திரவளைகளும் அணிந்த கையைப் பிடித்துப் பார்த்து அமுதவல்லி, 'இது மகாராஜியின் கை; பொன் விளையும் கை; பால் அளையும் கை; பசியாற்றும் கை; அறம் வளர்க்கும் கை. இந்தக் கை பிடிப்

பவர் எட்டுத்திக்கும் வெற்றி பிடிப்பார். ஆம், இந்தக் கையின் மகிமையால்தான். செங்கோல் செலுத்தும் கையையும் பிடித்துச் செலுத்தும் கை இது. இதோ என் காதில் குறளி பேசுகிறது; அதைச்சொல்ல என் உதடு துடிக்கிறது. அதோ பல்லி சொல்லுகிறதும் புரிகிறது......... ...' என்று பேசிக்கொண்டிருக்கும் போதே, 'போதும், போதும்' என்று நிறுத்திவிட்டாள், ராணி.

'உனக்குக் குறி சொல்லத் தெரியும். என்ன குறியும் நீ சொல்லிவிடுவாய். இனி நான் சொல்வதைக்கேள்'

இப்படி ராணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அமுதவல்லி ராணி சொல்லப்போவதை எதிர்பார்த்தவள்போல் அந்தப் பளிங்கறைக்குப் பக்கத்திலுள்ள வேறொரு அறைக்குப் போனாள். விரைவில் ஒரு குறத்திபோல் நீறு பூசிப் பொட்டிட்டுப் பாசிகளாலும் குன்றி மணிகளாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டாள். ஒரு கூடையை இடுப்பிலே வைத்துக்கொண்டு, வலது கையில் ஒரு மாத்திரைக் கோல்பிடித்து, நடைக்கு ஒரு குலுக்கும் பகட்டுமாய், விழிக்கு ஒரு சிமிட்டுமாய், ராணியம்மாள் முன் வந்து நின்றாள்.

அது கண்ட பூசுந்தரி அகமகிழ்ந்து, 'நீ இப்படியே நில்லு. இதோ சில நிமிஷங்களில் வந்துவிடுகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தானும் வேறொரு அறைக்குப் போனாள். அவள் திரும்பி வந்ததும், அமுதவல்லிக்கே அரசியின் கோலம் அதிசயமாய் இருந்தது. 'ஸாக்ஷாத் மகாராணி ஸாக்ஷாத் கோபிகையாகி விட்டாள்!' என்றாள்.

பிறகு பூசுந்தரி, 'நாம் இருவரும் இதே வேஷங்களுடன் வில்லிபுத்தூருக்கு விரைவில் போகவேண்டியிருக்கும்' என்றாள்.

'போய் நான் அங்கே யாருக்குக் குறி சொல்ல வேணும்? யாரை ஏமாற்றவேணும்?'

'அது குறித்துப் பின்னால் சமயம் நேர்ந்த போது பேசிக்கொள்ளலாம்.'

'மகாராணி! மன்னிக்கவேண்டும். தாங்கள் இந்தக் கோலத்தில் அங்கே என்ன செய்ய விரும்புகிறீர்களோ?'

'மக்களை மேய்க்கும் செங்கோல் மாடு மேய்க்கப் பயன் படாது என்று பயப்படுகிறாயா? இது குறித்தும் சமயம் வந்தபோது தீர்மானித்துக் கொள்ளலாம். நாம் இருவரும் வில்லிபுத்தூரில் போய் விஷ்ணுசித்தரின் பூங்காவனம் பார்க்க வேணும். நம்முடைய ராஜகுல வேஷங்களில் போவதானால், பரிவாரங்கள் படாடோபங்கள் முதலான நிர்ப்பந்தங்களுடன் போக வேண்டியிருக்கும். அப்படிப் போனால், விஷ்ணுசித்தர் அதிசயமாய் வளர்த்து வரும் அந்தப் பூங்காவனத்தை நாம் பார்ப்பதற்குப் பதில், அதிசயமான பிராணிகளைப் பார்க்க வருவதுபோல் நம்மைப் பார்க்க வந்துவிடுவார்கள் அவ்வூர் ஜனங்கள். அதற்காக மாறு வேஷம் பூண்டு போக வேணுமென்று தீர்மானித்தேன். உனக்கு இசைந்த வேஷத்தை நீ போட்டுக்கொண்டாய். நான் இளமையில் என் பிறந்தகத்திலே இந்தக் கோபிகை-வேஷம் போட்டுக்கொண்டு அரண்மனை மாட்டுக்கொட்டிலில் வேலை செய்து பழகியதுண்டு' என்றாள் பூசுந்தரி.

இருவரும் சேர்ந்து போகும்போது, தன்னை அமுதவல்லி உபசாரமாக 'அக்கா' என்று அழைத்துக்கொள்ளும்படி அனுமதி கொடுத்தாள் பூசுந்தரி. பிறகு ராணி தனக்குப் பொருத்தமாக 'மதுரைவல்லி' என்று புனை பெயர் வைத்துக்கொள்வதாகச் சொன்னாள். உடனே அமுதவல்லி, 'அப்படியானால் எனக்குப் பொருத்தமான பெயர் மதுரவல்லி, தங்களுக்கு என்றும் மதுரமாக நடந்துகொள்வதுதானே எனக்கு லட்சியம்!' என்றாள்.

'குற மதுரமல்லவா? உன் பெயர் மதுரவல்லி' என்றாள் மகாராணி.

* * * *

மரத்தடியில் சிரம பரிகாரம் செய்துகொண்ட பின், மறுபடியும் இந்தக் குற மதுரமும் கோபிகை மதுரைவல்லியும் அந்தப் பூங்காவனத்திலே அதற்குமுன் பார்த்திராத பகுதிகளைப் பார்த்துக்கொண்டே போனார்கள். பலவேறு புஷ்ப ஜாதிகளை மேலும், மேலும் பார்த்ததும் வல்லி வள்ளியை நோக்கி, 'இந்தப் பூஞ்செடி—கொடிகளின் பாக்கியமே பாக்கியம். இவற்றையெல்லாம் மதுரம்! இப்படிச் சொல்லக் குழந்தைகள் போல் வளர்த்துவிட்டிருக்கிறார் அப்பெரியார்' என்றாள்.

அதற்கு மதுரவல்லி, 'பெண்கொடியே! அக்கா! எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது, அவருக்குக் குழந்தை இல்லை என்பது இவ்வளவு பெரியவருக்கும் இப்படி ஒரு குறை இருக்க வேணுமா?' என்றாள்.

'அவருக்கும் குறை இருக்க முடியுமா? இந்தச் செடி, கொடிகளையெல்லாம் செல்லப்பிள்ளைகளாக வளர்த்து விடுகிறவர், கண்ணபிரானையும் குழந்தையாக வளர்த்துக்கொண்டிருக்கிறாராம். வேறு குழந்தை எதற்கு.

'அவருக்குக் குறையாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் அவளுக்கோ?'

ஓஹோ, வாழ்க்கைத்துணைவியான விரஜையம்மாளைக் குறித்துப் பேசுகிறாயா? அவரது தரும பத்தினியல்லவா? அவளுக்கும் மனக்குறையொன்றும் இருக்கமுடியாதென்றுதான் நினைக்கிறேன். இப்பூங்காவனத்தைப் பார்த்து

முடிந்ததும், நான் அந்த அம்மாளுக்குத்தான் பணி செய்யப்போகிறேன்.

'என்ன பணி செய்யப் போகிறீர்கள்? அக்கா! துளசிமாலை யணிந்து......' என்று மதுரைவல்லி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மதுரவல்லி இடைமறித்து, 'அந்த அம்மாளுக்கு இதே வேஷத்தில் நான் பணி செய்வேன், விரஜையம் மாளுக்குத் தயிர் கடைந்து கொடுப்பேன். அவ சியமானல் அவர்கள் மாட்டுத் தொழுவிலும் பணி புரியத் தயார்' என்றாள்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டே வரும் போது, சில பூஞ்செடிகளுக்கிடையே பண்ணை கட்டித் தண்ணீர் ஊற்றிப் பருவஞ் செய்வதில் ஈடுபட்டிருந்த ஒருவரைப் பார்த்தார்கள். ஒரு கணம்தான் அந்த முகத்தைப் பார்க்க நேர்ந்தது. அவர் தம் வேலையில் ஈடுபட்டிருந்ததால் இவர் களைக் கவனிக்கவில்லை. இவர்கள் சத்தம் செய் யாமல் சிறிது தூரத்திற்கு அப்பால் வந்துநின்று கொண்டார்கள்.

மெள்ளச் சொன்னாள் 'என்ன தேஜஸ்!' என்று மதுரவள்ளி.

'ஆஹா, என்ன சாந்தி மயமான தேஜஸ்!' என்று பிரமித்தாள் மதுரைவல்லி.

அவர் அணிந்திருந்த துளசி மாலையும் தாமரை மணியும், பொன்மாலை நவரத்தின மாலைகளைக் காட்டிலும் அவருக்கு அழகு செய்வதுபோலத் தோன்றின. கண்ணனுடைய வடிவழகுக்கும் குண அழகுக்கும் வாசகமான திருநாமங்களை வாய்குளிரக் கீர்த்தனம் செய்துகொண்டே அவர் வேறொரு பக்கம் போய்க் களையெடுப்பதும் கொத்திக் கொடுப்பதுமாயிருந்தார்.

'அந்த மகானுபாவரை அந்தத் தோற்றமே **விஷ்ணு சித்தர்** என்று அறிவித்து விட்டது. 'பரம பக்தியும் மகாஞானமும் ஜொலிக்கின் றன முகத்திலே!' என்று உருகிப் போனாள் மதுரை வல்லி.

இத்தகைய பக்தர் மண்வெட்டி பிடித்து வேலை செய்யும் அதிசயத்தை என்னென்பது?' என்று பிரமித்துப் போனாள் மதுரவள்ளி.

'இதில் அதிசயம் என்ன இருக்கிறது? இது இவருடைய கொள்கைதானே. வேதகோஷம் செய்வதைக் காட்டிலும் ஒரு பூஞ்செடியை நட் டுப் பிள்ளைபோல் வளர்ப்பது இறைவனுக்கு உகந்த பணி என்று தானே சொல்லுகிருராம்' என்றாள் மதுரைவல்லி.

அது கேட்ட மதுரவள்ளி, 'அக்கா! அந்தக் கொள்கைதான் இந்தப் பூங்காவனத்தை இப்படியெல்லாம் அழகு செய்திருக்கிறது. பக்தியுணர்ச்சியுடன் இவருக்குத்தான் எவ்வளவு அழகுணர்ச்சி! மாந்தருள் ஒரு மாணிக்கம் என்றால் இவரைத்தான் சொல்லவேணும்' என்று குதூகலமாய் ஒப்புக்கொண்டாள்.

அதற்கு மதுரைவல்லி, 'மாணிக்கமா? மனிதருள் ஒரு தெய்வமல்லவா? இத்தகைய பெரியார்களே இப்பூலோகம் முழுமையும் ஓர் ஆனந்தப் பூங்காவனமாக்க வல்லவர்கள்!' என்றாள்.

'இத்தகைய பூங்காவனங்களாலே உலகத்தில் அழகுணர்ச்சியும் பக்தியுணர்ச்சியும் அதிகரிக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. அக்கா! தாங்கள் இத்தகைய பணியை நாடெங்கும் நிறைவேற்றி வைத்துப் பொறாமையையும் பூசல்களையும் ஒழித்துவிடலாமே!' என்றாள் மதுரவள்ளி.

அப்போது, 'பொறாமையும் பூசல்களும் ஒழிவதற்கு ஊன்வாடத் தவஞ் செய்யவேணும்' என்றது ஒரு குரல், தானும் அவர்களுடைய சம்பாஷணையில் கலந்துகொள்ள விரும்பியதுபோல்.

அவர்கள் திரும்பிப்பார்த்ததும், 'அந்தப் பௌத்தபிட்சு இங்கே ஏன் வந்தார்?' என்று பிரமித்தார்கள். உடனே மதுரவள்ளி திகிலடைந்த மதுரைவல்லியைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு அம்பூங்காவனத்தில் வேறொரு பக்கமாய்ப் புறப்பட்டாள்.

'அவர் கண்டுபிடித்துவிடலாகாதே என்றுதான் தங்களை இப்படி அழைத்து வந்தேன்' என்றாள்.

'அவர் ஏற்கெனவே என்னைத் தெரிந்துகொண்டுவிட்டாரோ என்றுகூட எண்ணுகிறேன்.'

இதற்கு மதுரவள்ளி ஏதோ பதில் வாயெடுத்ததும், மதுரைவல்லி அவள் வாயைப் பொத்தி, 'இதோ இந்தப் பூமரத்தினடியில் அவர் மாலை தொடுத்துக்கொண்டிருப்பதைப்பார்' என்று அதிசயமாய்க் காதோடு சொல்லி முகத்தைத் திருப்பிக் காட்டினாள். மதுரவல்லி, தான் பார்த்து நின்ற திசையில், பௌத்தபிட்சு அப்பால் போவதைக் கண்டு, 'அதோ அவர் போய் விட்டார்' என்று சொல்லிக்கொண்டே, மதுரைவல்லியுடன், மாலை தொடுக்க ஆரம்பித்த விஷ்ணுசித்தரை நோக்கினாள். பௌத்தபிட்சுவைக் கண்டதும் அவர்கள் தங்களை அறியாமலே விஷ்ணுசித்தர் இருந்த இடத்திற்குச் சமீபமாகவே வந்துவிட்டார்கள்.

அப்படியிருந்தும் விஷ்ணுசித்தர் இவர்களைக் கவனிக்காமலே மாலை தொடுக்கலானார். இவர்களோ அந்த முகமண்டலத்தின் பொலிவினாலும் பேரொளியினாலும் பெரிதும் வசீகரிக்கப் பெற்றார்கள். சிறிது நேரம் மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போல் அந்த முகத்தையும் கண்களையும் பார்த்துவிட்டு, மெள்ள அப்பால் நகர்ந்து விட்டார்கள். அதிக நேரம் நின்று பார்க்க நாணம் இடங்கொடுக்கவில்லை. அந்த உணர்ச்சியுடன், 'இதனால் அவர் கைங்கரியத்திற்குத் தடை ஏற்படலாகாதே' என்ற அச்சமும் மதுரைவல்லிக்கு ஏற்பட்டது.

சிறிது தூரம் வந்ததும் மதுரவள்ளி, 'அக்கா! அந்தக் கண்களிலேதான் என்ன தெளிவு, என்ன ஆழம்! ஆழமான நீலக்கடல் போன்ற கண்கள்!' என்று ஏதோ சந்தம் வந்துவிட்டதுபோல் பேசத்தொடங்கினாள்.

மதுரைவல்லி இடைமறித்து, 'ஆம், அந்த ஆழத்திலே அழகான உண்மைகள்; இரத்தினங்கள்போல் ஜொலிக்கும் சிந்தனைகள்; வானச்சுடர்கள்போல் சுடரும் லட்சியங்கள் எல்லாம் கிடக்கின்றன!' என்றாள் ஒரே உத்ஸாக வெறியுடன்.

இவர் மலர்களைத் தொடுத்து மாலையாக்கும் அந்த அழகை வருணிக்க முயன்றாள் மதுரவள்ளி மதுரைவல்லியோ, 'அப்பெரியார் மக்களையும் மலர்கள் போலச் சேர்த்துக்கொண்டுவந்த அவர்களுடைய வாழ்க்கையை மணம்பெறச் செய்து, இறைவனுக்கு மணமாலையாக அர்ப்பணம் செய்யக்கூடியவர் என்று அந்த முகமும் கண்களுமே சொல்லுகின்றன. இவர் மட்டும் கருணை கூர்ந்து மதுரைக்கு விஜயம் செய்தால் அவர் நோய் தீர்ந்துபோகும்; நாட்டின் நோயே தீர்ந்து போகும்' என்று பரவசமாய்ப் பேசினாள்.

இப்படி இவர்கள் பூங்காவனத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, விஷ்ணுசித்தரின் வீட்டு வாசலில், 'குதிரை, குதிரை' என்றும் 'பல்லக்கு, பல்லக்கு' என்றும் கூச்சலிட்டுக்கொண்டு ஒரு குழந்தை ஓடி வந்தது. அந்தக் குழந்தை அப்படிக் கூச்சலிட்டுக்கொண்டே வீட்டுக்குள் ஓடி வந்தது. விரஜை அக்குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு வாசலில் வந்தாள்.

ஒரு குதிரைவீரன் தன்னைப் பாண்டியராஜ தூதன் என்று அறிவித்துக்கொண்டு, 'அம்மா! இதுதானா விஷ்ணுசித்தரின் மாளிகை?' என்று கேட்டான்.

'ஆம்; என்ன செய்தி அப்பா?'

'இதோ பாண்டியராஜ சக்கிரவர்த்தியின் கடிதம்' என்று மரியாதையாகஒரு ராஜ முத்திரைக் கடிதத்தை அந்த அம்மாளிடம் கொடுத்தான்.

(தொடரும்)

தலையங்கத்தை அவசரத்தில் “புகைப்படலம்” என்று படித்துவிட்டு யுத்தகாலச் செய்திகளை நினைவூட்டிக்கொள்ளவேண்டாம். என் சொந்தப் புராணத்தில் நான் புகைப்படங்களுக்கு உட்கார்ந்த அதாவது “நின்ற” வரலாறைக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கம்.

முதன்முதலாக நான் ஒரு புகைப்படக் காமிராவின் இலக்குக்கு ஆளாகியது நான் மூன்ருவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்த ஸமயம். எங்கள் உபாத்யாயர் வேலையை விட்டுப்போகிருர் என்கிற வியாஜத்தைக் கொண்டு என் வகுப்புப் பிள்ளைகள் தலைக்கு எட்டணுவாகக் கொடுத்து அந்தப்புகைப்படம் பிடித்தோம். அப்பாவிடம் கெஞ்சி இன்னம் 12 அணு வாங்கிக்கொடுத்து நான் ஒரு பிரதி எடுத்துக்கொண்டேன். நான் வகுப்பில் சிறுபையனுகையால் என்னைப்போன்ற சிறு பிள்ளைகள் நால்வருடன் நான் கீழே உபாத்தியாயர்களின் கால்களுக்குமுன் உட்காரவைக்கப்பட்டிருந்தேன். ஒரு உபாத்தியாயருடைய முழங்கால் என் வலதுதோளை அழுத்திக்கொண்டிருந்தது. மற்ருெரு உபாத்யாயர் (ஸூட் போட்டவர்) காலின்மேல் கால்போட்டு உட்கார்ந்திருந்ததால் அவருடைய பூட்ஸ் என் மூக்கை அமுக்காமல் இருப்பதற்காக நான் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துக்கொண்டிருந்தேன். உபாத்யாயர் கையில் இருந்த பெரிய பூச்செண்டானது அவர் கையை வைத்திருந்த ரீதியால் என் உச்சந் தலையிலிருந்து முளைத்த ஒரு பெரிய கொண்டையைப்போல (ஆண் மயிலுக்கு இருக்கிற மாதிரி) காட்சியளித்தது. எங்கள் ஹெட்மாஸ்டர் டானியேல் பிள்ளையின் நாய் என் முன் படுத்து என்னை மார்புவரையில் போட்டோவில் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. பூராவாகத் தெரிந்த பாகம் என் சாய்ந்த தலையும், அதிலிருந்து உற்பவித்திருப்பதாகத் தோன்றும் பூச்செண்டாகிற கொண்டையும்தான்! இதிலிருந்து படம் எப்படி இருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். என் மாமா இந்தப் போட்டோவைப் பார்த்துவிட்டு ஏளனம் செய்து “வீணுக ஏண்டா பணத்தைக் கரியாக்கிறுய்? ஹெட்மாஸ்டர் நாய்க்குத்தான் முதல் பிரைஸ்” என்ருர்.

என் வாழ்க்கையில் முதலாவதாகிய இந்தப் படம் பிடித்ததிலிருந்து எனக்குப் போட்டோவில் வெறுப்பு ஏற்படுவதற்குப் பதிலாக ஒரு நல்ல போட்டோவில் கேந்திர ஸ்தானத்தில் உட்கார்ந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பேரவா என்னைப் பிடித்துக்கொண்டது. அடுத்த படம் நான் ஸ்கூல் பைனல் ஸெலக்‌ஷனில் தேறிய பிறகு எடுக்கப்பட்டது. இந்த அருமையான உபாத்யாயர்களின் ருசியான போதனைகளை அனுபவிக்கும் காலம் முடிந்துவிட்டதே என்ற துக்கத்துடன் நாங்கள் எடுத்துக்கொண்ட புகைப்படம் அது. இந்த இரண்டாவது படத்தில் நான் உபாத்யாயர்களுக்குப் பின்னுல் இரண்டாவது வரிசையில் ஒரு பெஞ்சியின் மேல் நின்றுகொண்டிருந்தேன். எங்கள் கல்லூரியின் ஸ்தாபகராகிய கிராமணியார் வீட்டுப் பையனும் என் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவன் ஏறக்குறைய உபாத்யாயர்களில் பலருக்கு சமவயதுள்ளவனுகையாலும், அவனுடைய மானேஜ்மெண்டிலேயே டீ பார்ட்டி, போட்டோ எல்லாம் நடத்தப்பட்டதாலும் அவன் உபாத்யாயர்களுடன் முன் வரிசையில் ஒரு நாற்காலியில் உட்காரும் பாக்யத்தையடைந்துவிட்டான். எங்கள் மாமா போட்டோவிற்கு எப்பொழுதும் கருப்புக் கோட்தான் போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருந்ததால் நான் கருப்புக் கோட் போட்டுக்கொண்டிருந்தேன். என் வரிசையில் உள்ள எல்லா பையன்களுடைய மாமன்மார்களும் அவ்விதமே சொல்லியிருந்தார்களோ என்னவோ எல்லாம் கருப்புக் கோட்தான். இதனுடைய பலன் என்னவென்ருல் என் வரிசையில் ஒரு பெரிய “பிளாக்கௌட்டும்” அதற்குமேல் 13 தலைகளும் படத்தில் காணப்பட்டன.

ஹே முருகா! ஷண்முகா! ஒரு போட்டோவில் முன்னணியில் ஒரு ஓரத்திலாவது ஒரு நாற்காலியில் உட்காரும்பாக்கியம் நமக்கு இந்த ஜன்மத்தில் கிட்டுமா என்று நான் ஏங்கி அனவரதமும் பகவானைப்பிரார்த்திக்கொண்டிருந்தேன் காலேஜில் சேர்ந்த பிறகு இண்டர்மீடியேட்டில் ஒரு புகைப்படமும், பி. ஏ. வகுப்பில் ஒரு புகைப்படமும் பிடிக்கப்பட்டன. இரண்டு முறைகளிலும் “மாணவர்களில் ஆர்கனைஸர்கள்” என்று சொல்லப்படுகிற இருவருக்கும் இருகோடியிலும் பேராசிரியர்களுடன் முன்னணியில் நாற்காலிகளில் உட்காரும் பாக்யம் கிடைத்ததேயொழிய நான் இரண்டாவது அல்லது மூன்ருவது வரிசையில் பெஞ்சியின்மேல் தான் ஏற்றப்பட்டேன். எல்லாம் தலைவிதிதான்!

இவ்வளவு ஏமாற்றங்களுக்குப் பிறகும் என்னுடைய போட்டோ “அபிலாஷை” தீரவில்லை. ஒரு கம்பெனியில் வேலைக்கு அமர்ந்தேன். 4 வருஷங்களுக்குள் பல சந்தர்ப்பங்களைக்குறித்துப் பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. எல்லாவற்றிலும் எனக்குப்பழய

கதிதான். ஒரு படத்தில் டவாலிச் சேவகன் என் பக்கத்தில் நின்றுவிட்டான்.

திடீரென்று எனக்கு ஒரு யோகம் வந்து நான் அந்தக்கம்பெனியிலேயே ஒரு ஸெக்ஷன் தலைமை குமாஸ்தாவாக உயர்த்தப்பட்டேன். அந்த சந்தர்ப்பத்தை நழுவவிட எனக்கு இஷ்டமில்லை. எங்கள் கம்பெனி பாகஸ்தர் ஒருவர் கம்பெனியிலிருந்து விலகிக் கொண்டார். அதற்கு ஒரு டீபார்ட்டிவைத்து போட்டோ எடுக்கவேண்டுமென்று பிரசாரம் செய்து ஏற்பாடு செய்துவிட்டேன். என் ஸஹபாடிகள் "சனியன் தொலைகிறது, அதற்கு டீ பார்ட்டி என்ன! போட்டோ, என்ன! என்றார்கள். அதுவும் ஒரு ஸந்தோஷஸமாசாரம்தானே, போட்டோ எடுக்க வேண்டாமா'' என்று அவர்களைத் "தாஜா" செய்து எல்லா முஸ்தீப்புகளும் செய்துவிட்டேன். போட்டோவில் முக்யமாக உட்காரவேண்டியவர்கள் இரண்டு பாகஸ்தர்களும் மானேஜரும், அஸிஸ்டெண்ட் மானேஜரும் ஆக 4 பேர்கள் தான். முதல் வரிசையில் எனக்கும் 5 நாற்காலிகள் ஒன்று சேர்த்து போடச் சொன்னேன். பின் வரிசைகளில் இரண்டு படிகளாகப் பெஞ்சுகள் போட்டு என் ஆத்திரம் தீர எல்லா குமாஸ்தாக்களையும் போட்டோக்காரன் உதவியுடன் நிற்கவைத்தேன். சூரிய வெளிச்சம் குறைந்துகொண்டு வந்ததால் போட்டோ எடுத்த பிறகு டீபார்ட்டி என்று ஏற்பாடு செய்யப்பட்டது அன்றைபமுக்கிய விருந்தாளியின் வருகையை எதிர்பார்த்திருந்தோம். அவர் வந்ததும் நான் முன் வரிசையில் ஒரு நாற்காலியில் அவர்களுடன் உட்கார்ந்துவிடுவேன். போட்டோவும் எடுக்கப்பட்டுவிடும், என் மனோரதமும் பூர்த்தியாகிவிடும் என்று களித்துக்கொண்டிருந்தேன். விதி யாரைவிட்டது? கம்பெனியை விட்டு விலகிக்கொள்ளும் இந்தக் கிழட்டு முதலாளிக்குப் பேத்தி வேறு ஒன்று இருக்கவேண்டுமா? பேத்திகள் டஜன்கணக்கில் இருக்கட்டும். அதில் ஒரு பேத்தியை இவர் போட்டோவிற்கு அழைத்துக்கொண்டு வரவா வேண்டும். முருகா! இதைக் கிரஹசாரம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது? ஐந்து நாற்காலிகளும் அந்தக் கன்னிகாரத்னத்தைச் சேர்த்து சரியாய்ப் போய்விட்டன! பின் வரிசைகளில் பார்வையான ஸ்தானங்கள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டன. மேல்வரிசையில் வழக்கம்போல் டவாலிக்கு அடுத்த இடம் எனக்குக் கிடைத்தது! இந்தப் போட்டோ வியவகாரத்தை நான் வகித்து நடத்திய வகையில் என் கைப்பிடிப்பு ரூ 25. என் பிடிவாதம் இன்னும் விடவில்லை. இராப்பகலாக யோசனை செய்தேன். புத்தபிரானுக்கு ஞானோதயம் ஏற்பட்டதுபோல் ஒரு யுக்தி புலப்பட்டது. அன்று மாலையே என் மனைவியை "அந்த ஜரிகைக்கரைபோட்ட கருப்புப் பட்டுப்புடவையைக் கட்டிக்கொண்டு வெள்ளை "ஆர்கண்டீ'' ரவிக்கையைப் போட்டுக்கொண்டு அலங்காரம் செய்துகொண்டு என்னுடன் வா போட்டோ பிடிக்கவேண்டும்'' என்றேன். அவளுக்கு உற்சாகம் உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது போட்டோ கம்பெனிக்குப்போனேன். அர்ஜெண்டாக ஒரு தம்பதிகள் போட்டோ பிடிக்கவேண்டும்'' என்றேன். "ரெடி'' என்றான் போட்டோக்காரன். மின்சார விளக்குப் போட்டு எடுக்கும் போட்டோ அது. ஒரு நாற்காலி போடச்சொன்னேன். கருங்காலி மரத்தில் சித்ரவேலைகளுடன் செய்யப்பட்ட மெத்தை தைத்த நாற்காலி அது. அதில் நான் புல் ஸூட்டுடன் கால்மேல் கால்போட்டு உட்கார்ந்துகொண்டேன். என் இல்லக்கிழத்தியைப்பின்னால் நாற்காலியைப்பிடித்துக்கொண்டு நிற்கச்சொன்னேன். அவளா கேட்கிறவள்! "இது என்ன நீங்கள் பத்தாம் பஸலியாக இருக்கிறீர்களே! நான் அல்லவா நாற்காலியில் உட்காரவேண்டும்! நீங்கள் என் இடப்புறத்தில் உங்கள் வலது கையை என் வலது தோளின்மேல் வைத்துக்கொண்டு நிற்கவேண்டும். அதுதான் சரியான முறை! எலிஸபெத்-மவுண்ட்பாட்டன் தம்பதிகளின் புகைப் படத்தைப்பார்த்தீர்களா! அவர்களெல்லோரும் நாகரீகம் தெரிந்தவர்கள்'' என்றாள் என் தர்மபத்னி. அந்தப் போட்டோவில் என் முகம் எவ்வாறு விழுந்திருக்கும்என்று ஊகித்துக்கொள்ளலாம்!



அக்காவும் தங்கையும்

நியாயவாதி

மணக்கோலத்துடன் ராஜுவின் பக்கத்தில் நின்ற மஞ்சுளாவுக்குப் பழைய ஞாபகங்கள் வராமல் இருக்குமா? பத்து வருஷங்களுக்குமுன் அவளது அக்கா அம்புஜாவின் கல்யாணம் நடைபெற்றது அவளுக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. அப்பொழுது அவள் எட்டு வயதுப் பெண். கல்யாணம் எவ்வளவு தடபுடலாய் நடந்தது! அப்பா பணத்தை தண்ணீர்போல்வாரி இறைத்தார். ஆடல் பாடல், விருந்துகள் பாணவேடிக்கைகள், பிரமாதமான ஊர்வலம். அக்கலியாணத்தில் சீர்வகைகளில் செலவு வகையிலும் கையை விட்டுப் போன பணம் 50 ஆயிரத்துக்குமேல் இருக்கும். அம்புஜாவின் கல்யாணம் அரை லட்சரூபாய் கல்யாணம் என்ற பிரசித்தியைப் பெற்றுவிட்டிருந்தது.

ஆனால் இப்பொழுதோ! அத்தகைய தடபுடல் ஒன்றும் இல்லை. மஞ்சுளாவின் கல்யாணம் யாதொரு ஆடம்பரமின்றி நடைபெற்றது. அவள் பிதா காலமாகி நான்கு வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டன. வியாபாரத்தில் ஏராளமான பொருள் சம்பாதித்த அவருக்குப் போதாத காலத்தின் பயனால் பெருத்த நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டன. ஆயிரக்கணக்கில் அவருக்குப் பணம் வந்து குவிந்தது ஒரு காலம். ஆனால் பொல்லாத வேளையிலோ அவருக்குப் பதினாயிரக்கணக்கில் பணம் விரயமாயிற்று. பாவம் அவர் மனமுடைந்து அகால மரணமானார்.

அம்புஜாவின் கணவன் சம்பத்குமாரன் ஒரு வக்கீல். நல்ல பணக்காரன். ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துபவன். ஆனால் யாருக்கும் உதவி செய்யமாட்டான் அவன். அவனிடமிருந்து அவன் மாமனார் தனது கடைசி காலத்தில் உதவியை எதிர்பார்த்தார். ஆனால் அது ஏமாற்றமாகவேமுடிந்தது. ஏதோ சாக்கு போக்குகள் சொல்லி அவர் கோரிய சமயங்களில் அவன் அவருக்குச் சகாயம் செய்யாமல் இருந்துவிட்டான். இதனாலும் அவர் மனம் உடைந்துவிட்டது.

கண்ணை மூடுமுன் அவர் தன் மனைவியை அழைத்து, "மஞ்சுளாவை நல்ல யோக்கியமான வரனுக்குக் கல்யாணம் செய்து கொடு. பணக்காரக்குடும்பத்தைத் தேட வேண்டாம். ஏழையாயிருப்பினும் நல்ல நடத்தையாயிருப்பவனைப் பார்த்து பெண்ணை வாழ்க்கைப்படுத்து. அவளுக்கு யாதொரு குறைவும் வராது" என்று கூறினார்.

இறந்த சமயத்தில்கூட சம்பத்குமாரன் தனது மாமனார் வீட்டுக்கு வரவில்லை. அம்புஜாமட்டும் ஏதோ தலையைக் காட்டிவிட்டு போனாள். அவள் என்ன செய்வாள் பாவம்! கணவனது ஆடம்பரத்துக்கும் அமுலுக்கும் உட்பட்டவள் அவள். அவனது அனுமதியின்றி அவளால் ஒரு துரும்பையும் எடுக்கமுடியாது. ஆதலால் அந்த சந்தர்ப்பத்தில் அவளால் செய்யக்கூடிய உதவி யாதும் இல்லை.

கணவன் இறந்தபின் மஞ்சுளாவின் தாய் ஏதோ தன்னிடமுள்ள சொற்ப ரொக்கத்தை வைத்துக் கொண்டு, எளிய ஜீவனம் நடத்தினாள். அவளுக்கும் சீக்கிரமே வியாதி வந்துவிட்டது. மஞ்சுளாவை ஒரு தக்க புருஷனிடம் ஒப்படைத்து விட்டால், தான் கவலையின்றி கண் மூடலாம் என்பது அவளது எண்ணம். அதிருஷ்டவசமாய் அவளது தூர பந்துவின் மகனான ராஜு அவளுக்குப் மாப்பிள்ளையாக அகப்பட்டான்.

2

கல்யாண ஸமயத்தில் மஞ்சுளாவுக்கு ஒரே குறைதான். அது என்னவெனில், அவள் தகப்பனார் உயிருடன் இல்லையே என்பதுதான். தன் அக்காவின் விவாகத்தைப்போல் அவ்வளவு ஆடம்பரமாய் தனது விவாகம் நடைபெறவில்லையே என்ற குறை அவளுக்கு இல்லவே இல்லை.

ராஜுவை அவள் முன்னமேயே அறிவாள். அவன் நல்ல அழகன். படிப்பாளி. நற்குண நற்செய்கைகளை உடையவன். அவனுடன் இல்லறம் நடத்த கொடுத்து வைத்தது தனது பூர்வஜன்ம புண்ணியமே என்று அவள் நினைத்தாள். தனது எதிர்கால வாழ்வு செல்வத்தில் நிலைக்காவிடினும் அது கண்ணியமாயும் இன்பகரமாயும் இருக்கும் என்று அவள் எதிர்பார்த்தாள்.

கல்யாணத்துக்கு சம்பத் குமாரன் வரவில்லை. அவனுக்கு தன்

மாமியாரின்மீது மனஸ் தாபம். காரணம் என்னவெனில் இது தான். அவன் மஞ்சுளாவை மூன்ருவது தாரமாய் தனது மாமாவுக்குக் கொடுக்கும்படி கேட்டான். அவன் மாமாவுக்கு ஐம்பது வயதுக்குமேல் இருக்கும். அவ்வளவு வயது சென்ற ஒருவருக்கு மஞ்சுளாவைக் கொடுக்க அவள் தாய் மறுத்துவிட்டாள். "உங்கள் யோக்கியதைக்கும். அந்தஸ்துக்கும் ஏற்ற இடம் வேறு அகப்படப்போகிறதோ?'' என்று அவன் உதாசீனமாய்ப் பேசிவிட்டான். கல்யாணத்தின்பொழுது அவன் வரவுமில்லை. மனைவி அம்புஜாவை அனுப்பவும் இல்லை.

ராஜுவுக்கு தகப்பன் இல்லை. தாய் நல்லவள். அவள் சீர் வரிசைகளை எதிர்பார்க்கவில்லை. மகனுக்கு எந்தப் பெண் இஷ்டமோ அவளை தனது நாட்டுப் பெண்ணுக ஏற்க சித்தமாயிருந்தாள். மஞ்சுளாவை ராஜு வரித்தபின் அவளுக்கு ஏதேனும் ஆட்சேபம் இருக்குமா?

விவாகச் செலவுக்கு ஆயிரம் ரூபாய் மஞ்சுளாவின் தாயிடம் இருந்தது. ராஜு அவ்வளவு அதிகம் செலவு வேண்டாம் என்று கூறி செலவைக்குறைக்கும்படி செய்தான். தவிர தன்னிடமுள்ள ஐயாயிர ரூபாய் மதிப்புள்ள நகைகளை அவன் மணமகளுக்குக் கொடுத்தான்.

மறுவருஷமே மஞ்சுளாவின் தாய் இறந்துவிட்டாள். அந்த சமயத்திலும் அம்புஜா வரவில்லை. அவளது கணவர் அவளை அனுப்ப மறுத்துவிட்டான். என்ன கொடுமை!

ராஜு எம். ஏ. பரீட்சைதேறியபின் ஒரு பாங்கில் அவனுக்கு எழுபத்தைந்து ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகம் கிடைத்தது. மஞ்சுளாவுடன் அவன் குடித்தனம் நடத்த ஆரம்பித்தான். பாங்கில் நன்னடத்தைக்காக மூவாயிரம் ரூபாய் ரொக்க ஜாமீன் கொடுக்க வேண்டியிருந்தது. அதற்கு ராஜுவிடம் பணம் இல்லை. மஞ்சுளா தன் நகைகளை அவனிடம் கொடுத்து "அவற்றை விற்று முதல் செய்யுங்கள். பணத்தை பாங்கில் கட்டலாம்'' என்ருள். இதற்கு ராஜு முதலில் சம்மதிக்கவில்லை. ஆனல் வேறுவழியில்லாததால் அப்படியே செய்யவேண்டியதாயிற்று. இரண்டு, மூன்று அவசியமான நகைகளைத்தவிர பாக்கி எல்லாவற்றையும் விற்று அந்தப் பணத்தை ஜாமீனுகக்கட்டிய பின்னர் தான் ராஜுவின் உத்தியோகம் ஊர்ஜிதமாயிற்று.

கணவன், மனைவி இருவரும் கருத்தொத்து இருப்பின் அதைவிடக் குடும்பவாழ்க்கையில் இன்பம் வேறு என்ன? மஞ்சுளாவும் ராஜுவும் திருப்தியுடன், அமைதியுடன் வாழ்க்கைப் பாதையில் நடக்கலாயினர். அதில் தடபுடலுக்கும், ஆடம்பரத்துக்கும் இடமில்லை.

எனினும் ஓரோர் சமயங்களில் அடுத்த வீதியிலுள்ள சம்பத்குமாரனின் மனைவியும் தனது அக்காவுமான அம்புஜாவின் ஞாபகம் வரும். அப்பொழுது அவள் பெருமூச்செறிவாள். பணம்தான் என்ன பாடுபடுத்துகிறது? உடன்பிறப்பு என்பதைக்கூட மறந்துவிடும்படி மனிதர்களை அது செய்துவிடுகிறதே'' என்று வருந்துவாள்.

சுவரில் மாட்டப்பட்டுள்ள அம்புஜாவின்படத்தைப் பார்த்து அவள் ஒரு கடவை சிந்தனையில் ஆழ்ந்ததைக்கண்ட ராஜு அவள் மனத்தில் நிகழும் சிந்தனையை அறிந்துகொண்டு அவளது முதுகை அன்புடன் தடவி "மஞ்சுளா! வருந்தாதே! உன்னிடம் வந்து சேரும் காலம் கட்டாயம் வரும்" என்றான்.

3

ஐந்து வருஷங்கள் சென்றன. ராஜு வேலையில் இருந்துகொண்டே கணக்குப்பரிசோதனை (ஆடிட்டர்) பரீட்சையில் முதலில் தேறினான். அவனுக்கு ஒரு பெரிய கம்பெனியில் 300 சம்பளமுள்ள உத்தியோகம் கிடைத்தது.

மஞ்சுளாவின் நகைகளை விற்று ராஜு ஜாமீன் கட்டியிருந்தானல்லவா? இப்பொழுது அந்தத் தொகையை சம்பாதித்து மீண்டும் அவளுக்கு நகைகளை வாங்கிக் கொடுத்தான். நல்ல வாழ்வும் வரும்படியும் அவனுக்கு எதிர்படலாயின. அதேசமயம் அம்புஜாவின் கணவன் சம்பத்குமாரனைப் பற்றி பலவதந்திகள் பரவலாயின. அவன் பெரிய கடனாளியாய் விட்டானென்றும், அவன் மீது கடன்காரர்கள் வழக்குகள் தொடர ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றும், எந்த நிமிஷத்திலும் அவன் சொத்துக்கள் ஜப்தி செய்யப்படும் என்றும், வெகு சீக்கிரத்தில் அவன் ஓட்டாண்டியாய் விடுவான் என்றும் ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

இது மஞ்சுளாவின் காதில் விழுந்தது. அவள் தனது அக்காவின் வருங்கால கஷ்டத்தை நினைத்து வருந்தினாள். "எப்படியேனும் அவள் சுகமாய் இருக்கிறாள் என்று காதால் கேட்டால் போதும். அவள் என்னிடம் வர வேண்டும் என்று நான் ஆசைப்படவில்லை. பகவான் என்ன செய்யப்போகிறாரோ?" என்று கவலையுற்றாள்.

* * * * *

மத்தியானவேளை. மஞ்சுளா தன்னுடைய ஒருவயது பாலனை கண்ணனை தொட்டியில் விட்டு தூங்கப்பண்ணிக் கொண்டிருந்தாள். அப்பொழுது வாசலில் மோட்டார் வண்டி நிற்கும் சப்தம் கேட்டது. அவள் கூடத்திலிருந்து வாசல் பக்கத்தை நோக்கினாள்.



வண்டியிலிருந்து இறங்கின அம்புஜா வேகமாய் உட்புறம் வந்தாள். தன்னை பிரமிப்புடன் பார்த்த மஞ்சுளா அவளை இறுகத் தழுவிக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது.

"நான் பாவி. இத்தனை காலம் உன்னை விட்டுப் பிரிந்திருந்தேன். என்னை மன்னிப்பாயா மஞ்சுளா?" என்றாள்.

"அக்கா!" என்று வாய்விட்டுக் கூறிய மஞ்சுளா மேலே பேச முடியவில்லை. அவள் கண்களிலும் நீர் ததும்பியது.

இப்படி அன்பினால் பிணைக்கப்பட்ட சகோதரிகள் சற்றுநேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு அம்புஜா தழுதழுத்த குரலில், "பணப் பெருமையால் அவர் இறுமாப்படைந்திருந்தார். நல்லது, தவறு ஆராயாமல் மனம் போனபடி இருந்தார். அவர் என்னை அம்மாவிடம் அனுப்பவில்லை. உன்னையும் பார்க்க அனுமதிக்கவில்லை. ஆனால் அதற்குப் பிராயச்சித்தம் செய்யும் காலம் வந்துவிட்டது. அவர் கடன்காரர்கள் தாவா கொடுத்துவிட்டார்கள். நியாயாதிபதி அவரது சொத்துக்களை பரிபாலித்து கடன்களைப்பற்றி கணக்கு எடுத்து அவற்றை அடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள உன் ஆத்துக்காரரை ரிஸீவராக நியமித்திருக்கிறார். இனி உன் எஜமானரின் தயவால்தான் நாங்கள் ஜீவனம் நடத்த வேண்டும்" என்றாள்.

காந்திமதியின் தலைவலி

சுகி

எனக்குக் கலியாணப் பரிசாக எத்தனையோ சாமான்கள், (உபயோகமுள்ளவை -உபயோகமில்லாதவை) கொடுத்தார்கள். ஒருவராவது தலைவலி மருந்து (மனைவிக்கும்) கட்டி மருந்து (பிறக்கிற குழந்தைக்கும்) பரிசாகக் கொடுக்கவேயில்லை. கலியாணம் செய்கிற ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வியாதியை அல்லது வியாதிக் கோவையைக் கல்யாணம் செய்கிறான். இது என் சித்தாந்தம். நான் தலைவலியைக் கல்யாணம் செய்து கொண்டேன். தலைவலி வைத்தியனாகவும் திகழ்கிறேன்! காந்திமதியும் தலைவலியும் தாமரையும் சூரியனும் போல. தாமரை மலரைப்போன்ற அவள் முகத்தில், சூரிய வெப்பம் அனல் வீசும். "ஐயோ! ஹப்பா!!" என்று அலறினால் நாலு தெருவிலுள்ளவர்களுக்குக் கேட்கும்: ஒற்றைத் தலைவலி வந்து விட்டாலோ எட்டுத் தெருவுக்கு அப்பாலும் அவள் குரல் கேட்கும்.

இந்தமாதிரி தலைவலி, பல்வலி ஜுரம் என்று ஏதாவது ஒரு வியாதியை, பெண் கழுத்தில் நாம் தாலியைக் கட்டும்போது நம் கழுத்தில் அவர்கள் கட்டிவிடுகிறார்கள். இதைத்தான் தாலி பாக்யம் என்று சொல்லவேண்டும். இதனால் தலை பிழைக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. வருமானத்தில் பாதிக்குமேலாக காப்பிப்பவுடருக்கும்—தலைவலி மருந்துக்கும் ஆதியில் நான் செலவழித்துக்கொண்டிருந்தேன். நாள் ஆக ஆக தலைவலி மருந்துகள் வைப்பதற்கென்றே, தனிப்பட்ட பீரோக்கள் வாங்க வேண்டியதாயிற்று. பீரோக்களும், மருந்துகளும் இருக்கின்றன; தலைவலியும், நாளொரு மேனியும் பொழுதொரு மருந்துமாக வளர்ந்தோங்கி நிற்கிறது.

ஊருக்குப் புதிதாக டாக்டரோ வைத்தியரோ வந்து விட்டால், எனக்குத் தலைவலி—அதாவது என் பணத்திற்குத் தலைவலி. அடிக்கடி இப்படித் தலைவலி கொல்லுகிறதே. இன்றோடு என் பிராணன் சரி, நாளை இரண்டு நாள் ஆகிவிடும் என்று கண்ணீர் உகுத்துவிடுவாள். தலைவலி வரும்போதெல்லாம் அழுதழுது அவள் கண்கள் செந்தாமரையாகச் சிவந்திருக்கும். கன்னங்கள் வெண்தாமரையாக வெளிறிப்போகும். உவர்க்கோடுகள் வெண்தாமரைக் கன்னங்களில் தடம் பதிந்திருக்கும். இப்படி அழுகிறபோது புதிதாக விளம்பரம் செய்யப்படுகிற ஏதாவது ஒரு மருந்தை வாங்கலாம் என்று ஆறுதல் சொல்வேன். தலைவலிக்காக "கண்ணாடி போட்டுக்கொள்" என்றால் அது அவளுக்குப் பிடிக்கவில்லை. வியாதியுள்ள மனைவி முள்ளுள்ள ரோஜாமாதிரி. முன்னாளிலே புடவை, நகை, கல்யாணம், பந்துத்துவம், சண்டை இவை பற்றி சர்ச்சை செய்வார்கள். இந்நாளில் தலைவலி, ஹிஸ்டீரியா, அந்தரியா, இந்தரியாபற்றி சுவாரஸ்யமாக வம்பளப்பார்கள். இதிலே பெருமையும் அடித்துக் கொள்வார்கள் இக்காலப் பெண்கள்.

காந்திமதி தன்னுடைய தலைவலியைப்பற்றிப் பேச ஆரம்பித்தால் எந்த டாக்டருக்கும் தலைவலி வந்துவிடும். அவள் தலைவலிக்குள்ள பக்குவங்களை வர்ணித்தால் கம்பருடைய காவிய வர்ணனை படுத்துப்போகும். தலைவலியில் தன்னை மிஞ்சியவர்கள் கிடையாது என்பது அவளுடைய இறுமாப்பு. அகில உலகத் தலைவலி பெண்கள் மகாநாடு நடைபெற்றால் இவளுக்குத்தான் தலைமைப்பதவி கொடுக்க வேண்டும்.

போன மாதம் திடீரென்று அலறலும், ஆர்ப்பாட்டமும் அதிகமாயிற்று. நானும் என்னால் முடிந்த சமாதானங்களைச் செய்தேன். கண் வைத்தியரைப் பார்க்கலாமென்று சொன்னேன்.

"அய்யோ அம்மா...அட கடவுளே"

"கடவுளுக்கு என்ன ஆபத்து?"

"தாங்க முடியலையே. தலையை வெட்டிப் பிளக்கிறதே."

"காட்டுக் கூப்பாடு போடாதே. ஊர்ப் பெண்கள் கூட்டமாக வந்துவிடுவார்கள்"

"உங்க கேலியும் பரிகாசமும் போதும். அவாள் அவாளுக்கு வந்தால் தெரியும்" என்று பத்தை அள்ளிப் பூசிக்கொண்டாள்.

ஒரு வண்டிச் சுக்கு, அரை வண்டி கிராம்பு, கால் வண்டி மிளகாய்வற்றல் இவைகளை அரைத்து பூசி இருந்தாள். பார்க்கப் பயங்கரமான காளிதேவிபோல் இருந்தது. இந்தக் காளிதேவியைப் பார்த்துப் பார்த்து பழக்கப்பட்டதால், "என்ன காந்தி உனக்குத் தலைவலி புதிசா? தலைவலியிலே பிறந்து, தலைவலியிலே வளர்ந்து, தளர் நடை நடந்து..." என்று அடுக்க ஆரம்பித்தேன். காளியின் அருளால், காளிதாசன் கவிதை மழை பொழிந்ததுபோல் காந்திமதிக்குத் தலைவலி என்றால் எனக்கு வார்த்தை ஜாலங்கள் கடல் மடை திறந்ததென்னப் பாயும்.

காந்திமதி மௌனங்கொண்டாள். அவள் படுத்த படுக்கை

யாகக்கிடந்தாலும் எனக்கு வேண்டிய பலகாரங்களைச் செய்து வைத்துவிட்டு படுத்துக்கொண்டாள். நானாக எடுத்து வைத்துச் சாப்பிட்டாக வேண்டும்.

சாப்பாட்டை நாமாக எடுத்துப் போட்டுச் சாப்பிடுகிறதில் உள்ள சிரமங்களை நினைக்கிறபோது தலைவலியே சிறப்பாகத் தோன்றும். இந்த மாதிரி காந்திமதிக்குத் தலைவலி வந்தால், நானும் பட்டினி, அவளும் பட்டினி, இராத்திரி முழுதும் அவளுக்குத் தலைவலியாலும், எனக்குப் பட்டினியாலும் அவளுடைய அலறலாலும் தூக்கம் இராது. போதாக்குறைக்கு காலையிலே அடுப்பைப் பற்ற வைக்க வேண்டுமேயென்ற திகில்: மறுநாள் ஆபீஸுக்குச் சரியான வேளையில் ஓட முடியுமா என்ற பயம்!

இந்த மாதிரி அவஸ்தைகளுக்குள் மாட்டிக்கொண்டு விழிப்பது சர்வ் சகஜமாக இருந்தாலும், போன மாதத்தில் அவள் அலறல் சகிக்க முடியவில்லை.

படுக்கையில் வாழைத் தண்டு போல சுருண்டு படுத்திருந்தாள். தலைமாட்டில் உட்கார்ந்து நெற்றியை துண்டினாலும் அங்கவஸ்திரத்தாலும் வாளிக்கயிற்றினாலும் கட்டிலோடு கட்டிக்கொண்டிருந்தேன். கொட்டாப்புளியை வைத்துப் பிளப்பதுபோல பிளக்கிறதாக அவள் அலறிக்கொண்டிருந்தாள் அந்த அலறல் சம்மட்டி அறைவது போன்று என் காதைச் செவிடுபடவைத்தது.

'காந்திமதி இந்தமாதிரி கத்தாதே. உனக்கு வேண்டியதைச் செய்கிறேன், என்ன செய்ய வேண்டும்?''

''எருவுக்கும் மூங்கிலுக்கும் ஏற்பாடு செய்யுங்கள். இன்றோடு உங்களுக்கும் கதிமோட்சம்.''

இப்படி எத்தனையோ முறை கடைசிப் பிரயாண ஏற்பாடுகளுக்குச் சொல்லி இருக்கிறாள். இருந்தாலும் இன்று சொன்னதைப் பார்த்தபோது தந்திகளைக் கொடுக்க நேருமோ என்று நினைத்தேன். பிறகுதான் விஷயம் புரிந்தது. பக்கத்துத் தெருவில் யாரோ ஒரு புது டாக்டர் வந்திருக்கிறாராம். அவரிடம் வைத்தியம் செய்யவே இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள் நடந்ததாக யூகித்தேன்.

விடிந்ததும் விடியாததுமாக, அவள் அடுப்புப் பற்றவைக்க ஒப்புக்கொண்டாள். நானும் புதிய டாக்டரிடம் போய் மருந்து வாங்க ஒப்புக்கொண்டேன். அந்த டாக்டர் கொஞ்சம் படபடப்பான நபர். நான், காந்திமதியின் தலைவலிப் புராணத்தை—அவளுக்கு ஐந்து வயசிலே அறியாப் பருவத்திலே பிஞ்சிலே கூடிய தலைவலியைப்பற்றி சவுக்க காலத்தில் பேசி, ஒரேயடியாக முடித்துவிடும்படி (தலைவலியைத்தான்) நல்ல மருந்து கொடுக்க அவரிடம் பேச யத்தனித்தேன். என்னை வாய் திறக்கவே அவர் விடவில்லை.

'உங்கள் பிரதாபங்களை நாளை பேசிக்கொள்ளலாம். எந்த வியாதியாக இருந்தாலும் நான் முதலில் கொடுக்கிற மருந்து இது தான். நெம்பர் ஒன். இந்தப் பவுடரை மோருஞ் சாதத்திலும் நெ. 2 இந்தப் பவுடரை பாலிலும் போட்டுங் கொடுங்கள். மற்றவை நாளை பேசிக்கொள்ளலாம்.

அடபாவி மனுஷா! கொஞ்சம் கூட என்ன வியாதி யாருக்கு என்று தெரியாமல் இப்படியும் ஒரு வைத்தியமா? கையோடு பணம் கேட்காத வரையில் நல்லது என்ற சந்தோஷத்தில் வீட்டுக்கு வந்தேன். மருந்துப் பொட்டலங்களை பாலில் சாப்பிட வேண்டியதை பாலிலும், மோருஞ் சாதத்தில் சாப்பிட வேண்டியதை மோருஞ் சாதத்திலும் சாப்பிடச் சொன்னேன். மருந்தைக் கண்டதுமே காந்திமதியின் வெண்தாமரைக் கன்னங்கள் ரோஜா நிறமாகவும் ரோஜாநிறக் கண்கள் வெண்தாமரையாகவும் மலர்ந்தன. புன்னகைத் தாண்டவம் வேறு.

மறுநாள் டாக்டரைப் பார்க்க நானும், காந்திமதியும் புறப்பட்டோம். முதல் நாள் இருந்த அவ்வளவு வலியும் பாரமும் இல்லை

யென்பதாகவும் அந்த டாக்டரே முடிவாக தலைவலி வியாதியைத் தீர்க்க முடியுமென்றும் சொன்னாள். ஒவ்வொரு டாக்டரிடமும் வைத்தியம் செய்து கொள்ளப் போகிற இரண்டாம்நாள், இப்படித்தான் அவள் சொல்லுகிறது வழக்கம். ஆனால் அந்த வைத்தியரே தலைவலியைக் குணப்படுத்துவார் என்று நானும் எதிர் பார்க்கவில்லை.

டாக்டர் அறைக்குள் நுழைந்தோம். அவர் ஊருக்குப் புதிதாக இருந்தாலும் சில துரைகள், துரைசானிகள், அவர்களுடைய நாய்களுடன் அங்கே தென்பட்டனர்.

முதல் நாள் அவ்வளவு கடுமையாகப் பேசினவர் என்னைக் கண்டதும், "ஹலோ நமஸ்காரம். பேரு என்ன? இன்னிக்கு எப்படி இருக்கு?" என்றார்.

"தேவலை. பேர், காந்திமதி"

"சுத்த கண்டிரிநேம், பரவாயில்லை...கமான் மைடியர் காந்திமதி." என் தலை சுற்றியது. டாக்டருக்குப் பைத்தியமோ என்னமோ?

"மரியாதையாகப் பேசும்?"

டாக்டர் "ஏன் ஸார் வள்ளென்று விழுகிறீர்கள்? எங்கே மைடியர் காந்திமதி?" என்று மீண்டும் கேட்டார்.

போலீஸில் எழுதி வைத்து உன்னைப் படாதபாடு. படுத்துகிறேன் என்றவன் காந்திமதியின் கையைப் பிடித்துக்கொண்டு 'வா காந்திமதி' இவனைத் தொலைத்து விட்டு மறு காரியம்" என்று படபடப்பாகத் திரும்பினேன்.

என்னுடைய கோபத்தையும் படபடப்பையும் கண்டு "சார் உங்கள் நாய், காந்திமதி எங்கே?" என்று பின் தொடர்ந்தார்.

"உம்ம வாலை இங்கே ஆட்டாதேயும். அயோக்கிய மனுஷா!"

"மிஸ்டர் உங்கள் மனைவி பெயர் காந்திமதியா?"

எனக்குக் கோபம் வந்தது. காந்திமதி எதிர் பார்த்த இந்த அவமானத்தைக் கண்டு தலை குனிந்தவள் பெரு விரல் நகத்தைப் பாத்தபடியே நடந்தாள். அவளுக்குக் குமட்டல் ஏற்பட்டு அவர் கொடுத்த மருந்தை அங்கே கக்க முயற்சித்தாளே தவிர கக்கிவிடவில்லை.

"டேய் டாக்டர்! இந இரு இன்னும் அரை மணி நேரத்தில் உன்னை என்னபாடு படுத்துகிறேன் பார்?' என்று வெளியேவந்தவன் போலீஸில் பிராதுகொடுக்க அவர் பெயரைப் பார்த்தேன். எனக்கே தூக்கி வாரிப்போட்டது.

ஏ. ஆனையப்ப முதலியார்,

மிருக வைத்தியர்,

(நாய் ஸ்பெஷலிஸ்டு)

டாக்டரிடம்போய் மன்னிப்புக் கேட்டபடி நானும், காந்திமதியும் விடைபெற்றோம். தலைவலியும் அன்று முதல் காந்திமதியிடமிருந்து பிரியா விடைபெற்றுக் கொண்டு போயே விட்டது. ஆனால் காந்திமதியின் தோழிகள், 'தலை வலி எப்படிக் குணமாயிற்று?' என்று வருந்தி வருந்திக் கேட்கிறார்கள். மூன்று முறைக்குமேல் தொந்திரவு, கொடுப்பவர்களுக்கு ஆனையப்ப முதலியாரிடம் போய் மருந்து வாங்கி வந்து 'இது ஒரு சாமியார் கொடுத்துவிட்டுப் போனார். இது நெம்பர் ஒன்று; மோருஞ் சாதத்தில் சாப்பிடுங்கள், இது நெம்பர் இரண்டு: பாலில் போட்டுக் குடியுங்கள். யாரிடமும் மருந்து இருப்பதைச் சொல்லாதீர்கள்" என்று எச்சரிக்கையோடு வைத்தியம் செய்து வருகிறேன்.

மருந்து வாங்கிப் போனவர்கள் என்னிடம் ரொம்பவும் விசுவாசமாக இருக்கிறார்கள்.

மாதர் மஹா சபை

- குந்தமம்

'நேற்று எங்கள் மன்னியின் வீட்டுக்குப் போயிருந்தாயாமே? என்னடி விசேஷம்?' என்று சாந்தாவை ருக்கு கேட்டாள்.

'அதற்குள்ளாக யாரடி சொல்லிவிட்டார்கள் உனக்கு?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் சாந்தா.

'யக்ஷிணி ஏதாவது சொல்லியிருக்கும்' என்ருள் சரோஜா.

'உனக்குத்தான் ஜோஸ்யம் தெரியும். யக்ஷிணியெல்லாம் வந்து சொல்லும். ருக்குவுக்குக் கூட அதெல்லாம் தெரியுமா என்ன?' என்ருள் விமலா.

'சரிதான் போ' நீ எந்த யுகத்தில் இருந்து கொண்டு பேசிக்கொண்டிருக்கிருய். அதெல்லாம் அந்தக்காலம். இன்னின்னருக்குத் தான் இது இது தெரியும் என்பதெல்லாம் இந்தக்காலத்தில் இன்னின்னருக்கு இது இது தான் தெரியும், இது இது தெரியாது என்பது கிடையாது. எல்லோருக்கும் எல்லாம் தெரியும். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பார்களே அந்தமாதிரி தான். மேடையில் ஏறிப் பிரசங்கம் செய்ய வேண்டுமா? உம் ரெடி. அசெம்பிளி தேர்தலா? எம். எல். ஏ. ஸ்தானத்துக்கு முதல் அக்ஷதை. மந்திரி பதவியா? அதற்கென்ன பிரமாதம்? நான் பார்க்கக் கூடாதா? என்ன? எல்லாரையும்போல் நானும் ஒரு மனிதன் இல்லையா? தாராளமாய் ஏற்றுக்கொள்கிறேன். எதற்கும் யாரும் தலையை நீட்டும் காலம் இது. யோக்யதையாவது, கதையாவது, அப்படியிருக்க சரோஜாவுக்குத் தெரிந்த ஜோஸ்யம் ருக்குவுக்குத் தெரியக்கூடாதா என்ன? என்ருள் பானு.

'போட்டாளே ஒரு போடு. என்னதான் இருந்தாலும் பானு பானு தான்' என்ருள் ருக்குவின் மாமியார்.

'அது கிடக்கட்டும். யாரடி சொன்னுள் உனக்கு?' என்று ருக்குவைக் கேட்டாள் சாந்தா.

'இன்று காலை உன் தங்கை சம்பா வந்திருந்தது. அது சொல்லிற்று' என்ருள் ருக்கு.

'தெரியுமே, எனக்கு. அதுதான் சொல்லியிருக்கும். பொதுவாகப் பெண்களுக்கே எதுவும் மனதில் நிற்காது என்று சொல்வார்கள். அதிலும் அது இருக்கிறதே. அந்த நிமிஷத்திலேயே அயலார் வீடேறி ஒப்பித்துவிட்டு வந்தாகவேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்துவிடும் அதற்கு. அதென்ன சாபமோம்மா' என்ருள் சாந்தா.

'பசங்கள், அப்படித்தானடி இருக்

ருக்கு சொல்லுகிருள்

★

'என்ன காணுத அதிசயத்தைக் கண்டுவிட்டமாதிரி, இப்படி முறைத்து முறைத்துப் பார்க்கிருயே' என்ருள் சந்தியா.

'இதில் உள்ள அழகின் மேன்மையைத் தெரிந்துகொள்ளாமல் ஜனங்கள் இப்படி அநியாயமாய் அலைகிறதுகளே' என்றேன் நான்.

வாஸ்தவத்திலேயே நீங்கள் அப்பொழுது சந்தியாவைப் பார்த்திருந்தால் என் கட்சியை ஆதரிக்காமல் இருக்கமாட்டீர்கள்.

அப்பொழுதுதான் வெற்றிலைபோட்டுக்கொண்டு வந்திருக்கிருள். உதடும் நாக்கும் பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருந்தது. அத்துடன் கால் விரல்களிலும் கைவிரல்களிலும் மருதாணிவேறு 'இட்டுக்'கொண்டிருந்தாள். அந்தப் புடவைக்கும் அதற்கும் ஸாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மி மாதிரியே இருந்தாள். உடம்புக்கும் நல்லது, பார்ப்பதற்கும் நன்ருக இருக்கிறது.

இதைவிட்டுவிட்டு 'லிப் ஸ்டிக்கைத்' தடவிக்கொண்டு வந்து நின்றதுகளானுல் அனுமார் வாகனத்துக்கு உதட்டில் சிகப்பு வர்ணம் அடித்தமாதிரியல்லவா இருக்கிறது!

கும். பெரியவர்கள், நமக்கே முடியவில்லை. பசங்கள் மீது குறைகூற வந்துவிட்டாயாக்கும். அது கிடக்கறது. எங்கள் மன்னி அகத்தில் இருந்தாளா? அவளைப் பார்த்தாயா?' என்று கேட்டாள் ருக்கு.

'ஆகா, பார்த்தேன். நான் முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை. பெண்களாய்ப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் அவசியம் அவள் இருக்குமிடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டுமடி' என்றாள் சாந்தா.

'அதென்னடி அது அப்படிப் பட்ட அதிசயம்?' என்றாள் சரோஜா.

'வேடிக்கையே இல்லை. நிஜமாகச் சொல்லுகிறேன். அந்த இடத்தைப் பார்த்தது முதல் எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது. சிறிய இடம்தான். சமையலறை. மத்தியில் கூடம். எதிரே ஒரு ரூம். ஒரு குப்பை, கூளம் ஒன்று இருக்க வேண்டுமே! கண்ணாடி மாதிரி, ஒரு தும்பு, தூசு இல்லாமல் பளபளவென்று சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. சமையலறையில் சென்றால் இப்பொழுதுதான் புத்தம் புதியதாய்க் கடையிலிருந்து வாங்கி வந்தமாதிரி பாத்திரங்கள் பளபளவென்று தேய்த்து ஒரு பலகையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வெள்ளிப்பாத்திரங்களுக்கென்று ஒரு ஷெல்ப். அதன் பக்கத்தில் ஒரு சிறிய ஷெல்பில் 'காப்பி'ச் சாமான்கள். பில்டர், சர்க்கரை டப்பா, காப்பிப் பவுடர் பாட்டில், பக்கத்தில் காப்பிப் பவுடர் மெஷின்-அதாவது காப்பிக்கடை, கரண்டி, துடுப்பு இதெல்லாம் ஒரு பக்கத்தில். நெய், தயிர், பால் இதற்கெல்லாம் தனித்தனி உரிகள்' என்று சாந்தா சொல்லிக்கொண்டிருக்கையில் 'பட்டு மாமியாத்து உரியைப் பார்த்திருக்கமாட்டாள்' என்றாள் சரோஜா.

'அதென்னடி அது பட்டு மாமியாத்து உரி?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'பட்டு மாமியாத்து உரியா? தெருவில் 'தொம்பரவன்' கூத்தாடுவானே தெரியுமா, தலையில் ஒன்றின்மேல் ஒன்றாக வரிசையாகப் பானைகளை அடுக்கிக்கொண்டு, அந்தமாதிரி முதலில் எண்ணெய் ஜாடி, அதன் மேல் நெய்ப்பாத்திரம், அதற்கும் மேலே மோர்ச் சொம்பு, அதற்கு மேலே ஒருகொட்டாங்கச்சி மூடி அதுவும் அடுப்புக்கு நேராக' என்று சரோஜா சொல்லி முடிப்பதற்குள், 'சரிதான், அசந்து மறந்து மேலே நிமிரும்போது தலைபட்டாலும் போயிற்று, ஒரு எலி ஆட்டிவிட்டாலும் போயிற்று'என்று ருக்கு சொல்வதற்கும் 'அத்தனையும் ஏககாலத்தில் கோவிந்தாதான்' என்று பானு அதைப் பூர்த்தி செய்வதற்கும் சரியாக இருந்தது.

எல்லோரும் கொல் என்று சிரித்து விட்டார்கள்.

மேலே சொல்லடி நீ' என்றாள் ருக்கு.

'அதற்கென்று தனியாக இடம். இருட்டிலே போய்கூட வேண்டியதை எடுக்கலாம். துடைப்பம், எந்த வீட்டிற்குப் போனாலும் முன்னால் அது தானே கண்ணில் படும். தேடித் தேடிப் பார்த்தேன். 'ஏண்டி உங்களுக்கென்று தனியாக துடைப்பம்வைத்துக்கொள்வது கிடையாதா'என்று கேட்டேன். 'இல்லாமலென்ன? இதோ இருக்கிறதே' என்று ஒரு மூலையில் ஓர் பறையைத் திறந்து காட்டினாள். அதனுள் இரண்டு துடைப்பங்கள் கீழே துடைப்பதற்கான ஒரு சாக்குச் சுரணை, தரையைத் தேய்த்து அலம்புவதற்கான ஒரு பிரஷ் ஆகியவை வைக்கப்பட்டிருந்தன. பெட்டி பேழைகள் எல்லாம் பரண் மேல்தான். அரிசி. பருப்பு சாமான்களையெல்லாம் எங்கே வைத்துக்கொள்வாளோ ஒன்று கூடக் கண்ணில் தென்படவே இல்லை. எதிர் உள்ளே போனால் கட்டில், படுக்கை, எல்லாம் எவ்வளவு ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன தெரியுமா? கூடத்தில் போட்டிருந்த மேஜை மேல் புத்தகங்களும், பத்திரிகைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அழகு அதற்கென்று தனியாக ஒரு வேலைக்காரன் வைத்தால் கூட அந்தமாதிரி அவ்வளவு ஒழுங்காய்ப் பார்த்துக்கொள்ளமாட்டான். அவ்வளவென்ன, சமையலறையில் அந்த அம்மியையும் பாத்திரம் தேய்க்கும் ஜலதாரையையும் இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க



''........பறையை திறந்துகாட்டினாள்........''

லாம். கண்ணுடி மாதிரி பள பளவென்று பார்த்தால் நம்முடைய முகம் அதில் தெரியும் போலல்லவோ இருக்கிறது?' என்று சாந்தா சொல்லி முடிப்பதற்குள் 'இல்லாவிட்டால் நம்ம சுந்தரவல்லியைப்போல் தான் இருப்பார்களாக்கும்.' உள் முழுதும் சொத சொத வென்று காலே வைத்தால் பிசுக் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும். இந்த ரேஷன் காலத்தில் எப்படித்தான் முடிகிறதோ? அது வடிக்கிற சாதத்தில் பாதி ஜலதாரையில்தான் இருக்கும். எவ்வளவு பருப்பு வைத்து சட்னி அறைக்குமோ, அம்மியிலோ, உரலிலோ அரைஅங்குலம் கனத்துக்கு சட்னி ஒட்டிக்கொண்டிருக்கும். தெருவில் வரும் பிச்சைக்காரனுக்குக் கொட்டலாமே. அதற்கு மனசு வராது. இரண்டு நாளாய் மிகுந்து போன ரசம் ஒரு பாத்திரத்திலும், மூன்று நாளாய் புளித்துப் போன பழையது ஒரு பாத்திரத்திலும் நாற்ற மடித்துக்கொண்டிருக்கும். அன்றுடும் ஜல தாரையில் சரியாக ஜலத்தைக் கொட்டி அலம்பித் தள்ளாமல் தண்ணீர் குளம் மாதிரி தேங்கிக்கொண்டிருக்கும். மகா சோம்பேறி. 'ரோந்தையடியம்மா, ரோந்தை. அந்தமாதிரி 'ரோந்தையை இது வரை நான் பார்த்தது கிடையாது,' என்றுள் சரோஜா.

'சமையல் செய்து விடுவதா பெரிது? வீட்டை சுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதில்தான் இருக்கிறது கெட்டிக்காரத்தனம்' என்றுள் பானு.

'அவ்வளவென்ன' இதோ விமலாவின் அம்மா இருக்கிருளே. ஒரு தீக்குச்சிப் பெட்டியைத் தேடுவாளோ

'...அரை அங்குல கனத்துக்கு...'

தேடுவாளோ அப்படித் தேடுவாள் வைத்த இடம் ஞாபகம் இராமல்' என்றுள் வசந்தா.

'அதெப்படியடி தெரியும் உனக்கு?' என்று வியப்புடன் கேட்டாள் விமலா.

'அன்று பார்த்தசாரதி கோவில் உற்சவத்துக்கு வந்திருந்தேன். அகத்துக்குப்போக நாழிகையாகி விட்டதென்று உங்களகத்திலேயே படுத்துக் கொண்டேனே. அன்று பார்த்து விட்டேனடியம்மா எல்லா வேடிக்கையையும். போதுமடியம்மா போதும். அன்று ராத்திரி வீடு பட்டபாடு ஏழேழு ஜன்மத்துக்கும் ஞாபகம் இருக்கும்' என்றுள் வசந்தா.

'என்னடி அது அப்படிப் பட்ட ரகளே?' என்றுள் ருக்குவின் மாமியார்.

'வீட்டுக்கு எலக்ட்ரிக் லேட் கிடையாது. அரிக்கன்லாந்தரை விடி விளக்காக வைத்துவிட்டு எல்லோரும் படுத்துக்கொண்டோம். 'கிரோஸினுக்குப் படுகிற பாட்டிலே அரிக்கன்லாந்தரை எதற்கு வைக்கிருய்? பெட்ரூம் விளக்கை ஏற்றிச் சிறியதாக வை' என்றுர் விமலாவின் தகப்பனர். அதன்படியே விமலாவின் அம்மா பெட்ரூம் விளக்கை ஏற்றி மூக்குத் திருகு மாதிரி மினுக் மினுக் என்று வைத்து விட்டு அரிக்கன் விளக்கை அணேத்து விட்டாள். பாதிராத்திரியிருக்கும். காற்றில் விளக்கு அணேந்து விட்டது.சமையலறையில் பூனேயோ, எலியோ பாத்திரங்களே தொட தொட வென்று உருட்டுகிறது. சாமான்கள் உள்ளே டப்பாக்களெல்லாம் உருளுகிறது. விளக்கை ஏற்றுவதற்கு தீப்பெட்டிவைத்த இடம் ஞாபகம் வரவில்லே. விமலாவின் அம்மா தீப்பெட்டியைத் தேடினளோ தேடினளோ அப்படித் தேடினுள். இப்போது நினேத்துக் கொண்டால்கூடப் பயமாக இருக்கிறது' என்றுள் வசந்தா.



"... தூக்கத்தில் போய் கேட்டால் கூட..."

'அததற்கென்று ஓரிடம் அதில் இருக்க வேண்டியதை அங்கங்கே வைக்க வேண்டுமென்று எங்கள் மாமா அடிக்கடி சொல்வாரே, தெரியாமலா சொல்வார். இதனுல் வேலே

சுலபம். அலேச்சல் மிச்சம். எங்கள் மாமா அப்படித்தான். எதுவும் அததற்குரிய இடத்தில் அதது இருந்தாக வேண்டும். கொஞ்சம் மாற்றி வைத்துவிட்டால் அவருக்குக் கோபம் வந்துவிடும். தூக்கத்தில்போய்க் கேட்டால்கூட 'இந்த இடத்தில் இது இருக்கிறது, போய் எடுத்துக்கொள்' என்று சொல்வார். போய்ப் பார்த்தால் அவர் சொல்லியபடியே அந்த இடத்தில் அது இருக்கும்' என்ருள் சரோஜா.

'ஏன்? எங்கள் மன்னிக்குக்கூட இதிலெல்லாம் கொஞ்சம் ஜாக்கிரதை உண்டு. குழந்தையிலிருந்தே நல்ல பழக்கம். மீதி பேர்கள் மாத்திரம் அந்த மாதிரி இருக்கமாட்டார்களா என்ன? மேலே பெரியவர்கள் பால்யத்திலேயே நல்ல பழக்க வழக்கங்களே ஏற்படுத்திக்கொடுத்தால் எல்லோரும்தான் அப்படியிருப்பார்கள். அதுகூட ஆச்சர்யமில்லே. அவளுடைய நல்ல குணத்துக்குத் தகுந்தமாதிரி வீடும் அமைந்தது பாரேன். அதைச் சொல்லுங்கள் முதலில். அந்த வீட்டுக்கார மாமி இருக்கிருளே, தங்கமான மனுஷி' என்ருள் ருக்கு.

'ஆமாண்டி, மறந்தேபோய் விட்டேனே. நீ சொன்னபிறகுதான் ஞாபகம் வருகிறது. அன்றைக்கே அந்த வீட்டுக்கார மாமியைப்பற்றிச் சொல்வதாய்ச்சொன்னுய். அன்று நேரமாய்விட்டது. இன்றைக்காவது சொல்' என்று சரோஜா சொல்லி வாய் மூடினுளோ இல்லேயோ, ருக்குவின் அகத்துக்காரரும், அவளுடைய அண்ணுவும் அங்கே வந்துசேர்ந்தார்கள்.

'சரி. மீதி நாளேக்குத்தான்' என்று எல்லோரும் எழுந்தார்கள்.

—



காந்திஜி தேசிய ஞாபகார்த்த நிதிக்கு உதவும்பொருட்டு திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் மெம்பர்கள் சென்ற 16-ந்தேதி மயிலே ரஸிக ரஞ்சனி சபையில் 'கல்யாணி' என்ற நாடகத்தை ('தேவன்' எழுதியது) திறம்பட நடித்து ரூ. 1,116 திரட்டிக்கொடுத்தார்.



பூனுவில் ஸ்ரீராம நவமி உத்ஸவத்தை அனுசரித்து திருவையாறு ஸ்ரீ நாகராஜா பாகவதர் ஸ்தல பக்தகோடிகளுடன் திவ்யநாம பஜனே நடத்தினுர்.



நாய் நன்றியுள்ள மிருகம். இந்தப் பாடத்தை நாம் குழந்தைகளாயிருக்கும்போது பன்முறை படித்திருக்கிறோம். இந்த வாக்கியத்தில் உள்ள உண்மையைப்பற்றி ஆராயப் புகுந்தால் இந்தக் கூற்று மகா அபத்தமானது என்று விளங்கும். நாய் நன்றியுள்ள மிருகமாக இருந்த காலமும் இருந்திருக்கக்கூடும். உலகத்தில் மனித சஞ்சாரமே இல்லாமல் இருந்தபோது நாய்களுக்கு நன்றியறிவு இருந்ததாகச் சரித்திர ஆராய்ச்சி (என் சொந்த ஆராய்ச்சிதான்!) சொல்லுகிறது.

நாய்க்கும் நமக்கும் குழந்தைப் பருவமுதல் இருந்து வரும் சம்பந்தம் கொஞ்ச நஞ்சமன்று. அம்புலிமான், நாய், பூச்சாண்டி இவர்களெல்லாம் நமக்குப் பால்ய நினைவை மூட்டவில்லையா? குழந்தைப் பருவத்தில் நாம் சாப்பிடப் பிடிவாதம் பிடிக்கும்போது நம் அன்னைமார்கள் நாய்க்கும் நமக்கும் சோறூட்டிய இன்ப நினைவுகள் நாய்களைப் பார்க்கும்போதெல்லாம் தோன்றுகிறது. நாயை விரட்டிக்கொண்டு தெருவெல்லாம் ஓடிய விளையாட்டுப் பருவம் ஞாபகத்துக்கு வருகிறது. தெருவில் போகும் நாய்களையெல்லாம் கல்லை எடுத்து அடிப்பதே வாழ்க்கையின் லட்சியம், இன்பம் என்றெல்லாம் எண்ணிய நாளும் உண்டு.

நாய்க்கும், மனிதனுக்கும்நெருங்கிய சம்பந்தம் ஏற்படுவது மனிதனுக்குப் பணமும் பெயரும் வரும்போதுதான். நீங்கள் திவான்பகதூர் திவால் முதலியாருக்கு ஆப்த நண்பராக இருக்கக்கூடும். அப்படியிருந்தாலும் போனோம், பார்த்தோம் என்று வந்துவிட முடியாது. அவர் வீட்டு வாசற்படியில் கட்டியிருக்கும் நாய் நீங்கள் அங்கு வந்ததின் நோக்கத்தைச் சந்தேகிக்கிறது. அது உங்கள் கையில் இருக்கும் 'வாக்கிங் ஸ்டிக்'கைக் கன்னக் கோலோ என்று சந்தேகிக்கிறது. பிறகு 'லொள், லொள்' என்று குரைக்கிறது. "இந்தச் சனியன் பிடித்த வீட்டுக்காரர்கள் கட்டிப்போட்டு விட்டார்களே! இல்லாவிட்டால்..." என்று பொருள்படும் படியாகக் குரைத்துக்கொண்டு உங்கள்மீது தாவ முயற்சிக்கிறது. நாம் 'இன்ஷ்யூரன்ஸ்' செய்துகொண்டாய்விட்டது என்றாலும் இரண்டடி பின் வாங்குகிறோம். நாம் வசிஷ்டராகவாவது, அல்லது விசுவாமித்திரராகவாவது இருந்தாலும் சரி, அல்லது நம் கையில் ஒரு ரிவால்வர் இருந்தாலும் சரி, நாயின் தலையெழுத்து வேறுவிதமாக இருந்திருக்கும்!

நல்ல வேளையாக முதலியாரின் சேவகன் வாசற்பக்கம் வருகிறான். 'ஐயா'வின் நண்பர் என்று தெரிந்தவுடன், "யசமான்! ஏன் வாசல்லே நிக்கிறீங்க? உள்ளே ஐயர் இருக்காங்க!" என்று உங்களை உள்ளே அழைத்துக்கொண்டு போகிறான். நீங்கள் நாய் இருக்கும் பக்கத்துக்கு எதிர்ப்புறமாக வேலைக்காரனோடு ஒண்டிக்கொண்டு உள்ளே போகிறீர்கள். இருந்தாலும் உங்கள் முகத்தில் நெப்போலியனின் துணிச்சல் பிரதிபலிக்கிறது. அகத்தில் நாய் யமனைப்போல் தோற்றமளிக்கிறது.



பெரிய மனிதர்கள் நாய் வளர்ப்பது எதற்காக என்று நான் பல நாட்கள் ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித்தேன்:— அதாவது, வாசலில் பிச்சைக்காரன் வந்தால் பெரிய மனிதர்களாயிருப்பவர்களுக்கு அவனை விரட்டுவதோ, அல்லது அவனோடு பேசுவதோ கௌரவக்குறைவாக இருக்கும். பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்துக்காக பெரிய மனிதர்களைத் தேடிக்கொண்டு யாசகர்கள் வருவார்கள். ஒரு ஏழைப் பையனுக்கு பள்ளிக்கூடத்தில் படிக்க உபகாரம் செய்யவேண்டும் என்று தந்தையும் பிள்ளையுமாய்ப் பெரிய மனிதர்வீட்டு வாசலில் நிற்பார்கள். ஒரு வயோதிக விதவை தன் பெண்ணுக்குக் கல்யாணம் செய்துகொடுக்க உபகாரமாய் ஏதாவது கொடுத்தால் கன்னிகாதான புண்யம் வரும் என்று ஆசைகாட்டுகிறாள். இவர்கள் இவ்வளவு பேருக்கும் பதில் சொல்லவேண்டுமல்லவா? அதற்குப் பதில் சொல்ல தன் பிரதிநிதியாக ஸ்ரீமான் சுவான மூர்த்தியை நியமித்திருக்கிறார் பெரிய மனிதர். இந்த சுவானப் பிரதிநிதி பெரிய மனிதரின் சார்பாக 'வள், வள்' என்று வாழ்த்து கூறி வந்தவர்களை வழியனுப்பிவிடுகிறார்.

அநேகமாய் பெரிய மனிதர்களின் வீடுகளில் நாய் ஒரு குடும்ப



அங்கத்தினராகவே கருதப்படுகிறது. ஏதோ நாயாய்ப் பிறந்த தோஷம் அதற்கு அன்னப்பிராசன, உபநயனாதி அனுஷ்டானங்கள்தான் செய்யப்படுவதில்லையே தவிர, மற்ற எல்லாச் சலுகைகளும் அதற்கு உண்டு. காலையில் யஜமானரோடு காப்பி; மாலையில் யஜமானரோடு' வாக்கிங்; மற்ற வேளைகளில் குழந்தைகளோடு விளையாட்டு.

கிள்ளியூர் முனிஸிபல் சேர்மன் தான் சேர்மனான சந்தோஷத்தைக் கொண்டாட ஒரு விருந்து வைக்கிறார். அதற்குப் பெரிய மனிதர்கள் தங்கள் மனைவி, நாய் சகிதமாக மோட்டாரில் வந்து சேருகிறார்கள். குழுமியுள்ள பெண்மணிகளெல்லாம் தங்கள் குடும்பச் செலவுகள், பிறந்த வீட்டுப் பெருமைகள், தங்கள் சொந்த நகைகள், வைரத்தின் அன்றைய விலை இவற்றையெல்லாம் பற்றிப் பேசுவதற்கு முன்னதாகத் தங்கள் நாய்களின் பிரபாவங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். (கிட்டத்தட்ட ஒரு நாய்கள் மகாநாடு கூட்டத்தக்கதாக இருக்கும் அங்கு வந்துள்ள பெரிய இடத்து நாய்களின் சங்கியை. ஆனால் அந்த மகாநாடு நிச்சயமாக நாய் இனத்தின் பொதுக் குறைபாடுகளைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாது.)

கிருஹஸ்தாசிரமத்தின் ஆரம்பத்தில் அனேகமாய் ஒவ்வொருவரும் நாய் வளர்க்க ஆசைப்படுவதுண்டு மனைவியும், (கழுத்தினில் மணிகள் கொஞ்ச) நாயும் பின்தொடர சாயங்காலத்தில் பீச்சுக்குப்போகும் ஆசை அநேக இளைஞர்களுக்கு உண்டு.

இந்த உற்சாகத்தில் நானும் பார்வைக்கு அழகாயுள்ள ஒரு நாயை வாங்கினேன். 'கொழு, கொழு'வென்று, மிருதுவானரோமத்தோடு கூடிய அந்த மிருகம் நல்ல வெளுப்பாயும், நெற்றியில் திலகமிட்டதுபோல் கொஞ்சம் கருநிறத்துடனும் இருந்தது. என்னை முதன்முதலில் கண்டவுடனேயே நெடுநாள் பிரிந்திருந்த நண்பனைக் காணுவதுபோல உற்சாகத்தோடு குதித்தோடிவந்தது. கையில் பிஸ்கோத்தை வைத்துக்கொண்டு அதற்குக் கொடுப்பதுபோல ஜாலம் காண்பித்தேன். அதை என்னிடமிருந்து அடையும் முயற்சியில் என் வலது கை விரல்களை 'வெடுக்' கென்று பிடுங்கிவிட்டது. இருந்தாலும் என் அபீஷ்டத்தைக் கைவிட இஷ்டமில்லாமல் அம்மிருகத்தை வீட்டிற்கு அழைத்து வந்து கிருஹப்பிரவேசம் செய்வித்தேன்.

நாய் என் கைவிரல்களைக் கடித்துவிட்டதை அறிந்துகொண்ட ஒரு நண்பர் (நான் நல்ல நாயை வாங்கிவிட்டதால் பொறாமை கொண்டவர்), "ஏன் ஸார்! நாய் நல்ல ஜாதியாக இருந்தால் கடிக்காது. பார்த்து வாங்கக்கூடாதா?" என்றார்.

"நம்ம வீட்டுக் குழந்தைகள் கடிக்கிறதில்லையா, ஸார்? ஏதோ அபிமானத்தினால்தானே கடிக்கிறது?" என்றேன்.

நாய் கடிப்பதையும், குழந்தைகள் கடிப்பதையும் ஒப்பிட்டது குழந்தைகுட்டிக்காரரான அந்த நண்பருக்குப் பிடிக்கவில்லை. என் நாயைப்பற்றிய தன் அபிப்ராயங்களை அத்துடன் நிறுத்திக்கொண்டார்.

மற்றொரு நண்பர், "ஸார்! விரலில் பல் பட்டிருக்கிறது, ஸார்! நாய் கடிவிஷம் ரொம்பப்பொல்லாதது. விஷம் உடல் முழுதும் பரவிவிட்டால் கடிபட்டவன் நாய்போலக் குரைக்க ஆரம்பிப்பானாம்!" என்று கூறிவிட்டு நான் குரைக்கப்போவதை எதிர்பார்ப்பதுபோல மௌனமாக என்னையே பார்த்தார்.

நான் நாய் வளர்க்கும் 'ஐடியா' ஹோம்-டிபார்ட்மெண்டுக்குக் கொஞ்சங்கூடப்பிடிக்கவில்லை. "நீங்கள் நாய் வளர்ப்பதானால் என்னை முதலில் எங்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்" என்றாள் ஒரு சமயம். மற்றொரு சமயம் "நாய் வேண்டுமா அல்லது நான் வேண்டுமா?" என்று கேட்டாள். இந்த எதிர்ப்பு சக்திகளை சாம, தான

முறைகளால் சமாளித்துக் கொண்டேன். (பேத, தண்ட முறைகளை நாயிடம் பிரயோகம் செய்யவேண்டியிருந்தது.)

எங்கள் பாட்டி இருப்பது ஞாபகத்தில் இருந்தால் நான் சத்தியமாய் நாய் வாங்கியிருக்கவேமாட்டேன். நாய் வந்தது முதற்கொண்டு பாட்டி அடிக்கடி என் பூர்வோத்ரங்களை ஞாபகப் படுத்த ஆரம்பித்தாள்.

"நல்ல, உத்தமமான குடும்பத்தில் பிறந்துவிட்டு..." என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

"ஏய், குழந்தே! வேண்டாண்டா! சொல்றதைக் கேளு. வீட்டிலே ஒரு மடி, ஆசாரம் கிடையாது..." என்று பாட்டி கிரஹண பீடை போக ஸ்நானம் செய்து மடி கட்டிக்கொண்டே சொன்னாள். கொஞ்சங்கூட சமய சந்தர்ப்பந் தெரியாத க்வீன் விக்டோரியா பாட்டியின் புடவைத் தலைப்பைக் கடித்து இழுத்தது. (ஓ! சொல்ல மறந்துவிட்டேன். க்வீன் விக்டோரியா என்பது என் நாய்க்கு நான் செய்த நாமகரணம்) இப்படியாக நாய் பெரியவர்களின் சாபத்துக்கும், வெறுப்புக்கும் உள்ளாகியது.

நாய் குலைக்காத வேளைகளில் பாட்டி என்னைத் திட்டிக்கொண்டிருந்தாள். பாட்டி திட்டாத வேளைகளில் நாய் தன் குறைகளைச் சொல்லியழுதது. இருவரும் மௌனமான வேளைகளில் மனைவி, தன் கணவன், நாய் இவர்களுக்கிடையே உள்ள குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளை ஆராய்ந்தாள்.

இவ்வளவு இடையூறுகள் இருந்தும் நான் என் நாயைக் கைவிடவில்லை. அது நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளருவதோடு நிற்காமல் அவ்வப்பொழுது என் மசிப்புட்டியைக் கவிழ்த்து, புத்தகங்களைக் கிழித்து இன்னும் தேவையில்லாத அநேக கைங்கரியங்களையும் செய்தது. காலையில் என் மனைவி மேஜை மீது காப்பியை வைத்துவிட்டுப்

போனால் அது தன்னை நான் என்று பாவித்துக்கொண்டு என் காப்பியைச் சாப்பிட்டது. எதை வேண்டுமானாலும் நான் பொறுத்துக்கொள்வேன். ஆனால் என் காப்பியை அது குடிக்க ஆரம்பித்தபிறகு என் பொறுமை எல்லாம் பறந்தோடிப்போய்விட்டது. கிருஷ்ண பகவான் சிசுபாலனை மன்னிக்கவில்லையா? அதேபோல் நானும் 999 குற்றங்கள் புரியும் வரை மன்னிப்பதாக இருந்தேன். ஆனால் அந்த எல்லையெல்லாம் ஒரே நாளில் கடந்து போயிற்று. இனி நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டு வரவேண்டியது தான் என்று நான் நினைத்த சமயம் அந்த மகத்தான சம்பவம் நடந்தது.

என் மனைவியின் பட்டுப் புடவையை நடுவில் ஒரு சாணுக்குக் கிழித்துவிட்டது. நாயின் பயங்கரமான தன்மை இப்போதுதான் என் மனைவிக்கு முழுவதும் தெரியவந்தது. நாய்க்கும் எனக்கும் ஒரு 24-மணிநேர நோட்டீஸ் கொடுத்துவிட்டாள். நாயை இழுத்துக்கொண்டு வெளியே கிளம்பினேன். என் நெருங்கிய நண்பர் ஒருவரை அணுகி, "ஸார்! அருமையான நாய். தக்க கார்டியன் தேவை. உங்களுக்கு வேண்டுமா?" என்று கேட்டேன். நண்பர் என்னை மெச்சும் தோரணையில் பார்த்தார். "ஏதோ பிஸினஸ் ஆரம்பிக்கப் போறதாகச் சொன்னேளே, இதுதானா ஸார்? இதுவரைக்கும் ஒத்தரும் ஈடுபடாத பிஸினஸ்தான்! அதனாலே என்ன ஸார்? நாய் விற்ற பணம் குரைக்குமா என்ன? லாபகரமா இருந்தா இதிலே நானும் ஒரு 'ஷேர்' எடுத்துக்கிறேன், ஸார்!" என்று சொன்னார் நண்பர். (சனியன் பிடித்த மனுஷன்! இருக்கிற வயிற்றெரிச்சல் போதாதென்று நான் நாய்-பிஸினஸ் வேறு செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்!)

அவருக்கு என்னுடைய துர்பாக்கியமான நிலைமையை எடுத்துச்சொல்லி நாயை யாரிடமாவது தள்ளிவிடச் சொல்லி, அதன் செலவுக்காக இருபது ரூபாய் பணமும் கொடுத்தனுப்பினேன்.

இந்த நாய் வந்த பிறகு எனக்கு ஏற்பட்ட லாப நஷ்டங்களைக் கணக்குப்போட்டுப் பார்த்தேன்.

லாபம் வகையரா பூஜ்யம்.

பணவிரயம் ரூ. 200 (சுமார்)

மான நஷ்டம் கிட்டத்தட்ட ரூ. 10,000-க்கு மான நஷ்ட தாவா போடலாம்.

தம்பி படித்துக்கொண்டிருந்தான். "நாய் நன்றியுள்ள மிருகம். நாய் வளர்ப்பது எப்போதும் நல்லது. அது வீட்டைக் காக்கும்." எனக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

"ஏய்! தரித்திரம் பிடித்தவனே! இந்தப் பாடத்தைத் தவிர வேறு பாடமே கிடையாதா? வேறு எதையாவது படித்துத்தொலை!" என்றேன்.

அட்டைப்படம்

இந்திய டொமினியன் சர்க்கார் உணவு சட்ட மந்திரி ஸ்ரீ ஜெயராம்தாஸ் தௌலத்ராம் சென்ற வாரம் முழுதும் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். உணவு நெருக்கடியை சமாளித்துவிடலாமென்ற நம்பிக்கையால் அவர் முகமும் அகமும் மலர்ந்திருக்கிறது.

பால்கன்-ஜீ-பாரீ

அதிர்ஷ்டசாலி

★

(சங்கர்)

பொன்னன் பிறந்து பன்னிரண்டு வருஷங்களாகி விட்டன. அன்று அவன் பிறக்கும்பொழுது அவன் குடும்பம் ஏதோ நல்ல நிலையில், அதாவது வாரம் இருமுறையாவது வயிறார உண்ணும் பாக்கியம் பெற்றிருந்தது. இன்றோ பொன்னனைப் போல ஏழையைப் பார்க்கவே முடியாது. குடும்பத்தில் அவனும், அவனுடைய விதவைத் தாயுமே பாக்கி.

இவ்வளவு இருந்தும் பொன்னன் கர்வம் கொண்டவன். அவன் அடிக்கடி சொல்லிக் கொள்வான்: "நான் பிறக்கும்பொழுது பெரிய மழை பெய்தது. இடி இடித்தது. நான் பிறந்த அதே தெருவில் ஒரு வீட்டில் இடி விழுந்தது. பிறக்கும்பொழுது இடி விழுந்தால் நன்மைதானே?" அதனால் தன்னை அதிர்ஷ்டசாலி என்று அடிக்கடி கூறிக் கொள்வான். அவன் பிறக்கும்பொழுது இடி இடித்து, மழை பெய்தது என்பதற்கு தற்பொழுது நமக்கு சான்றாக விளங்குவது அவனது இடி போன்ற குரலே!

அவன் தாய் ஏதோ நான்கு வீடு கூட்டி ஜீவனம் நடத்துகிறாள். பொன்னனுக்குப் பொருள் சேரவேண்டும் என்ற ஒரே கருத்துடன் இருந்தானே தவிர, பொருள் சேர 'சம்பாதிக்கவேண்டுமே' என்ற எண்ணமே அற்றிருந்தான். என்றாவது தனக்கு அதிர்ஷ்டம் வரும் என்று எண்ணினான் அவனிடம் பொன் இல்லாவிட்டாலும் பெயரிலாவது 'பொன்' இருக்கிறதே!

ஒரு நாள் மாலை நேரம். பொன்னன் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் நின்றுகொண்டு ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். ஸ்டேஷனை அடுத்து ஒரு சினிமாக் கொட்டகை. நல்ல படம் ஓடுகிறது. "படம் பார்க்கப் பணம் வேண்டுமே" என்று எண்ணியபடியே நின்றான்

ரயில் வந்தது. ஸ்டேஷனில் கூட்டம் அதிகமில்லை. ஒரு ஆசாமி நல்ல ஆஜானுபாகுவானவர். பொன்னனருகில் வந்து, "ஏய், பெரிய தெருவுக்குக் கூலி வருகிறாயா? இந்த ஒரே பெட்டிதான்" என்றார். அன்றுவரை கூலி தூக்காத பொன்னனும் படம்பார்க்கவாவது உதவுமே என்றெண்ணி அவரைப் பின்பற்றிச் சென்றான். "பெட்டியில் பணம், ஜாக்கிரதை" என்றார் அந்த ஆசாமி. பணம் என்றதுமே பொன்னன் ஒரு கணம் சிந்தித்தான். அவன் குணமே சட்டென மாறியது.

திடீரென பொன்னன் ஒரு சந்து வழியாக ஓட்டம் பிடித்தான் பெட்டியுடன். பெரியவர் திடுக்கிட்டார். உடனே, "ஏய். பெட்டியைக் கொடுத்து விடடா" என்று கூறி அவனைப் பின் தொடர்ந்து ஓடினார். பொன்னனும் ஓடினான்

ஓடிக்கொண்டேயிருந்த ஆசாமி எதையோ பார்த்துவிட்டு, வந்த வழியே அவனைத் தொடர்வதை விட்டுவிட்டு ஓட ஆரம்பித்தார் "ஏது, நம்மைத் தொடராமல் திரும்பி ஓடுகிறாரே" என்று ஆச்சரியத்துடன் யோசித்த பொன்னனுக்கு அதிக சிரமம் கொடுக்காமல் அவனது இருபுறமும் வந்து நின்றனர் இரு போலீஸார்!

ஜெயில் கம்பிகளினுள் தான். தன்னைக் கூலிக்கு அழைத்தவர் பெரிய திருடனென்றும், அவர் போலீசார் வருவதைப் பார்த்துத்தான் திரும்பி ஓடியிருக்கிறார் என்றும், பெட்டி திருட்டுச் சொத்து என்றும் அறிந்தான்.

நீங்கள் சொல்லுங்கள் பொன்னன் அதிர்ஷ்டசாலியா, இல்லையா என்று. ஒருவேளைச் சோற்றுக்கு திண்டாடியவனுக்கு மூன்று வேளையும் கூழாவது கிடைத்தால் அவன் அதிர்ஷ்டசாலி இல்லையா?



டிப்போக்கள்:—மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம், பம்பாய்.

உங்கள் எதிர்காலம்

பணநிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடுமபம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பம் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5

S.A.H. TRADE MARK

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு
முழுவதும் பிரசித்தி
பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா
ஜெனரல் ஸ்டோர்ஸ்

பர்ஹாம்பூர்--செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை.

Quality always tells!
hence BUY **L.G** ASAFOETIDA



எல். ஜி
பெருங்காயமே
உயர்ந்தது



கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ரவுகி ரகங்கள் சாசமாய்
கிடைக்கும் இடம்
ராம விலாஸ்
S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

ஸ்ரீமத்பகவத்கீதை

★

சென்னை ஸம்ஸ்கிருத
காலேஜ் உபாத்தியாயராய்
இருந்த கீர்த்தனசார்ய

ஸி. ஆர்.
ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ.
எழுதியது.

மூலத்துடனும், அத்வைத வசிஷ்டாத்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும், இதுவரையில் வெளியிடாத பல ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும், கண்ணனுடைய கருத்திற்கிணங்க எழுதப்பட்டது.

★

முழுகாலிகோ பயிண்டு
செய்தது.

விலை ரூ. 3-8-0

(தபால் செலவு 0-8-0)

**இன்னும் இதர புத்தகங்களும்
கிடைக்கும்.**

★

எமது எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜண்டுகள் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

★

**புத்தக ஜாபிதாவுக்கு
எழுதவும்.**

மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ்
மவுண்ட்ரோடு, மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம்	கைவசமில்லை	
இரண்டாம் பாகம்	,,	ரூ. 2.
மூன்றும் பாகம்	,,	ரூ. 2.

(தபாற் செலவு அணு 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர் :- சுதேசமித்திரன் புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.

சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணாமலை யூனிவர்சிட்டி வித்யா ரத்ன **Prof. R.** ராமானுஜாச்சாரி **M.A.,** கூறுவது:—'தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும் எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். பலன்களில் எனக்கு மிகவும் திருப்தி' 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் எழுத ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்திகவசம் ரூ. 7-8-0. வி. பி. பி. தனி. ஜாதகம் *or* கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். **N. B.** வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசனம் இன்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர், தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்.

N. B. தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ் : **வால்டேர், ஆர். எஸ்.** | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

டெலிபோன்: 2246. தந்தி : கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா

ஸோல் புரொப்ரைட்டர்,

ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்

37, மண்ணடி, மதராஸ்.



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**

28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணு 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க...ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருணா டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிறாள்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதிலேகியம்
பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்
வியாதி, மனோவிசாரம், தரித்திரம் இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வத்ரம் ஸ்ரீதன்வந்தரி யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.
ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை,
தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணாவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க்கணக்கானபேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்திபெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு காதில் இரைச்சல் மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதி பெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

Printed and Published by S. Chakrapani Iyengar, at the "SWADESAMITRAN" Power Press, 3 & 4 Whites Road, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

தீர்ப்பு!

"வாணி விலாஸ்"
பி. ஆர். ஸ்கொயர்,
சென்னை, டிசம்பர் 7, 1945.

இன்றைக்கு தென்னிந்தியாவில் பிரசித்திபெற்ற நகை வியாபாரிகள் தாங்கள் என்பதற்கு சந்தேகமில்லை. தங்கள் பெயர் தங்கள் வைரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் வைரக் கலை உலகப் பிரசித்தி பெற்றது. இவ்வற்புதக் கலையில் தாங்கள் அடைந்த சில நூதன நிறைவேற்றங்கள் நினைவு படுத்திக் கொள்ளத்தகுந்தது.

தாங்கள் எப்பொழுதும், ஜாக்கிரதையாகவும், நேர்வழியுடனும் வேலைத் திறனுடனும், திருப்திகரமாகவும் வேலை செய்கிறீர்கள் என்று அத்தாட்சி கூற நான் மிக மகிழ்ச்சியடைகிறேன்.

தங்கள் வியாபாரம் எக்காலத்திலும் முன்னேறி இந்தியா முழுவதும் தங்கள் பெயரும், புகழும் பரவும் என்று எதிர்பார்க்கிறேன்.

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,
—பி. ஏ., பி. எல்., அட்வகேட்.

ஸூரஜ்மல்ஸ்

வைரங்கள்

313, நேதாஜி ரோட், : : சென்னை.